# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 310 புரட்டாதி 18ஆம் நாள் சனிக்கிழமை 05 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## தரம் ஐந்து புலமைப் பரிசில் முடிவுகள் இன்று

கொழும்பு, ஒக். 5
2019ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பரீட்சை முடிவு 05

## தமிழ் பேசும் வேட்பாளராக பசீர்

கொழும்பு, ஒக். 5
அரச தலைவர் தேர்தலில் தமிழ் பேசும் முதல் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூத் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.
நவம்பர் 16 அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை மாலை வரை 05

## பூரிப்பு



குடியுரிமை தொடர்பான தமக்கு எதிரான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்சவை நேற்றிரவு நேரில் சந்தித்து ஆரத்தழுவினார் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச. (ஒ.5,22)

## சஜித், சமல் கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக். 5
ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பா 23

## மேன்முறையீடு தொடர்பில் இன்னமும் தீர்மானமில்லை

கொழும்பு, ஒக். 5
கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமையைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு, மேன்முறையீட்டு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தக் கட்டளையை எதிர்த்து 23

# தப்பினார் கோத்தா

## மேன்முறையீட்டு நீதிமன்று வழக்கை தள்ளுபடி செய்தது

கொழும்பு, ஒக்ரோபர் 5
கோத்தபாயராஜபக்சவின்இலங்கைக்குடியுரிமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 23



## மல்லாகம் விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 5
பாரவூர்தியுடன் உந்துருளி மோதியதில், உந்துருளியைச் செலுத்திச் சென்ற இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.
மல்லாகம் சந்திக்கு அருகாமை 23

## கோத்தாவின் சட்டத்தரணிகளுக்கு சூடு வைத்த நீதியரசர் யசந்த

கொழும்பு, ஒக். 5
கோத்தபாய தரப்பு சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நடந்துகொண்ட அருவருக்கத்தக்க செயற்பாடு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட அதிருப்தி வெளியிட்டதுடன் கண்டித்தார். 23

## அரச தலைவர் தேர்தலுக்கு எதிரான மனு நீதிமன்றால் நிராகரிப்பு

### மனுதாரருக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 5
அரச தலைவர் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் வெளியிட்ட அரசிதழ் அறிவிப்பை இல்லாமல் செய்யும் எழுத்தாணையைப் பிறப்பிக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் 23

## மொரட்டுவையில் குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஒக். 5
மொரட்டுவையில் வீடு ஒன்றின் தோட்டத்திலிருந்து சக்தி வாய்ந்த குண்டுகள் மூன்று நேற்று மீட்கப் 05

## கோத்தாவுக்கு முதல் வெற்றி!

### மகிந்த பெருமிதம்

கொழும்பு, ஒக். 5
கோத்தபாய ராஜபக்சவின் இலங்கைக் குடியுரிமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 23



## தீர்ப்பையடுத்து கொண்டாட்டம்

கொழும்பு, ஒக். 5
கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து பல இடங்களிலும் கொண்டாட் 23

## மட்டுவிலில் வீடு புகுந்து தாக்குதல்

சாவகச்சேரி, ஒக். 5
நள்ளிரவு நேரம் வீட்டுக்காரர்கள் நித்திரையில் இருந்தவேளை வீட்டு மதிலால் ஏறி உள் நுழைந்த கும்பலொன்று அங்கு பலத்த சேதங்களை ஏற்படுத்திவிட்டு வெளியேறியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு, மட்டுவில் சந்திரபுரம் செல் 23

## கோத்தபாய போட்டியிட்டே தோல்வியடைய வேண்டும்!

### இதுவே விருப்பம் என்கிறார் சஜித்

கொழும்பு, ஒக். 5
கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான மனு மீதான விசாரணையின்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் நான் எதனையும் கூற விரும்பவில்லை. ஆனால், அவர் அரச 05

## மீண்டும் தாக்குதல் நடக்கலாம் எச்சரிக்கை கடிதத்தால் பரபரப்பு

### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஒக். 5
இலங்கையில் உயிர்த்தஞாயிறு தாக்குதல் போன்று மீண்டுமொரு தாக்குதல் இடம்பெறலாம் என்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள கடிதம் தொடர்பில் பொலிஸார் உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
வெளியாகியுள்ள கடிதத்தில் பல ஹோட்டல்கள் தாக்கப்படலாம் என்ற தகவலும் இடம்பெற்றுள்ளது. 23

## எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஒக். 5
12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 23

## நீதிமன்றத் தீர்ப்பு மக்களின் வெற்றியாம்

கொழும்பு, ஒக். 5
அரச தலைவர் தேர்தலில் நான் போட்டியிடுவதைத் தடுக்கும் நோக்குடனேயே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கு அர்த்தமற்றது என்பதை நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக நாட்டு மக்கள் உணர்ந்துவிட்டார்கள். நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு எனக்கு 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக்கிரன் பெயர்ச்சி - 2019

# செல்வத்தை அள்ளி வழங்கும்

சுக்கிரன் சுகபோகங்களின் அதிபதி. சந்தோசங்களையும் சுகங்களையும் தரக்கூடியவர். இவர் ஆட்சி உச்சம் பெற்றிருக்கும் போது கொடுக்கும் பலன்கள் அலாதியானது. சில ஜாதகங்களில் நீசம் பெற்றிருந்தாலும் நீசபங்க ராஜயோக நிலையைப் பெறும்போது நல்ல பலன்களை தருவார்.

கடந்த ஒரு மாத காலமாக கன்னி ராசியில் சுக்கிரன் இருந்த போதும் ஆட்சி உச்சம் பெற்ற புதன் இருந்ததால் நீசபங்க ராஜ யோகம் பெற்றிருந்தார் சுக்கிரன். இப்போது புதன் துலாம் ராசிக்கு மாறிவிட்டதால் சுக்கிரன் நீசம் பெற்று செவ்வாய் சூரியனுடன் சேர்ந்திருக்கிறார். இன்னும் இந்த மாதம் 4ஆம் திகதி முதல் சுக்கிரன் தனது ராசியான துலாமில் ஆட்சி பெற்று அமரப்போகிறார். இந்த சுக்கிர பெயர்ச்சி சில ராசிக்காரர்களுக்கு விபரீத ராஜயோகத்தையும், சிலருக்கு மாளவ்யா யோகத்தையும் தரப்போகிறார். இந்த சுக்கிர பெயர்ச்சியால் மேடம் முதல் மீனம் வரை 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் எப்படி என்று பார்க்கலாம்;



## சிம்மம்

**சிம்மம்**
தன வாக்கு ஸ்தானத்தில் அமர்ந்து இருந்த சுக்கிரன் ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் 3ஆம் இடமான முயற்சி ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். உங்களின் பேச்சுத்திறமையும், அழகியலும் அதிகரிக்கும். உங்கள் நட்பு வட்டம் அதிகரிக்கும். உடல் நலத்தில் அவ்வப்போது கவனம் தேவை. உடல் நலனில் சின்னச் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனே அக்கறையோடு சிறு பிரச்சினைகளையும் கவனியுங்கள். சிறு ஆன்மீகப் பயணம் செல்ல வேண்டியிருக்கும். உடன் பிறந்தவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். தங்கைகளுக்கு வரன் கூடி வரும் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். தொலைந்த விலை உயர்ந்த பொருள்கள் கிடைக்கும். அண்டை அயலாருடன் இருந்த பிரச்சினைகள் தீரும். காதல் ஜோடிகள் கவனமாக இருக்கவும். மருத்துவ செலவுகள் ஏற்படும். தூக்கமின்மை பிரச்சினை ஏற்படும். நெருப்பு, இயந்திரங்களில் கவனம் தேவை. கணவன் மனைவி இடையே விட்டுக்கொடுத்து போங்கள். வேலை விடயமாக சிறுபயணம் செல்ல வேண்டியிருக்கும். வெள்ளிக்கிழமை மகாலட்சுமிக்கு விளக்கேற்றி வழிபட நன்மைகள் நடக்கும்

## கடகம்



**கடகம்**
சுக்கிரன் உங்கள் ராசிக்கு 4ஆவது வீட்டில் அமரப்போவதால் சிலர் வீடுகளை பராமரிப்பு செய்வீர்கள். அம்மாவின் உடல் நலத்தில் அக்கறை தேவை. நினைத்த காரியங்கள் நிறைவேறும். செயல்களால் புகழ் அடைவீர்கள். உதவும் மனப்பான்மை அதிகமாகும். தொழிலில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அம்மா உடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். அம்மா உடன் நெருக்கம் கூடும். நேரத்தை மகிழ்ச்சியாகச் செலவு செய்வீர்கள். புதிய வீடு கட்டுபவர்களுக்கு லோன் கிடைக்கும். ஆண்கள் பெண்களுக்கு உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். மருத்துவ செலவுகளுக்குக் கடன்கள் ஏற்படும். பணியிடத்தில் இருந்த பிரச்சினை விலகும். வேலைப்பளு குறையும். மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான அலங்கார பொருள்களை வாங்கிக் குவிப்பீர்கள். சிலர் வீடுகளை பராமரிப்பு செய்வீர்கள். வெள்ளிக்கிழமைகளில் கோவில்களில் சர்க்கரை தானமாக தரலாம். சிவன் கோவிலுக்கு வெள்ளை மலர்களை கொடுக்க நன்மைகள் நடக்கும்.

## கன்னி

**கன்னி**
உங்கள் ராசியில் நீச்சம் பெற்றிருந்த சுக்கிரன் தன வாக்கு ஸ்தானத்தில் அமரப்போகிறார். உங்களின் செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கப் போகும் காலமிது. திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமண பாக்கியம் கிடைக்கும். சிலருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும் காலமிது. கணவன் மனைவிக்கு இடையே காதல் அதிகரிக்கும். தன ஸ்தான சுக்கிரனால் பண வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். கணவன் மனைவிக்கு இடையே காதல் உணர்வுகள் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமண பாக்கியம் கிடைக்கும். சிலர் வீட்டில் குழந்தைகள் பிறக்கும். பெண்கள் விலை உயர்ந்த நகைகள் பணம் வாங்குவீர்கள். பண வருவாய் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். அம்மன் கோவில்களும் வெண்மை நிற மலர்களை வாங்கிக் கொடுக்க மேலும் பல நன்மைகள் நடக்கும்.

(தொடரும்)

## குருப்பெயர்ச்சி - 2019

| ராசி | குரு அமரும் இடம் | பலன்கள் |
|---|---|---|
| மேடம் | 9ஆம் இடம் | உத்தியோக உயர்வு, அதிகாரிகளிடம் நற்பெயர், மரியாதை அதிகரித்தல். |
| இடபம் | 8ஆம் இடம் | மனச்சோர்வு, மனக்கவலையால் துன்பம், புகழுக்கும் பங்கம் ஏற்படும் நிலை, சிக்கல் |
| மிதுனம் | 7ஆம் இடம் | தன தான்ய சம்பத்து, உத்தியோக உயர்வு, வியாபாரத்தில் லாபம், உறவு மேம்படுதல் |
| கடகம் | 6ஆம் இடம் | மனச்சோர்வு, பிணி, வீண் பகை, இடையூறுகள், கடினம், தேவையற்ற செலவு |
| சிம்மம் | 5ஆம் இடம் | எடுத்த காரியம் எதிலும் வெற்றி, வம்ச விருத்தி, தனலாபம், புகழ் ஏற்படுதல். |
| கன்னி | 4ஆம் இடம் | கடினமான நேரம், உறவினர்கள் பகை, விருப்பமில்லாத இடமாற்றம். |
| துலாம் | 3ஆம் இடம் | காரியத்தில் தடை, சகோதரர் மனஸ்தாபம், வேலை ஆள்களால் பிரச்சினை, சோர்வு |
| விருச்சிகம் | 2ஆம் இடம் | புதின தனவரவு, புதிய முயற்சியில் வெற்றி, சுபசெலவுகள், செல்வாக்கு உயரும். |
| தனுசு | 1ஆம் இடம் | வீண் உழைப்பு, உடல் உபாதை, தடங்கல், தாமதம், வருமானம் குறைவு. |
| மகரம் | 12ஆம் இடம் | விரயஸ்தானம், பொருள் நஷ்டம், அதிக செலவு, முதலீட்டில் பிரச்சினை, முடக்கம் |
| கும்பம் | 11ஆம் இடம் | பதவி உயர்வு, காரிய வெற்றி, தொழிலில் லாபம், நற்பலன்கள் ஏற்படுதல் |
| மீனம் | 10ஆம் இடம் | தொழில் நஷ்டம், தடை ஏற்படுதல், காரிய முடக்கம், வாக்குவாதம், [illegible] |

# புதன் பகவான்
## அற்புதத் தகவல்கள்!

புதன் வித்யாகாரகன் என்பதால் தொடக்கப்பள்ளியில் கல்வி பயில்வதிலிருந்து கல்லூரிப் படிப்புவரை ஒருவரின் படிப்புக்குக் காரணமாக இருக்கிறார். ஜோதிட சாஸ்திரம் 27 நட்சத்திரங்களையும், 12 ராசிகளையும், நவகிரகங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் இயங்கி வருகின்றன. இதில் நவகிரகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான குணநலன்கள் மற்றும் காரகத்துவங்கள் கொண்டவை. நவக்கிரகங்களுள் புதனின் தன்மைகள் என்ன? அவர் எந்த ராசிக்காரர்களுக்கு என்ன பலன்கள் தருவார் என்பது பற்றிப் பார்ப்போம்.

“ஜோதிடத்தில் புதனை ‘வித்தைக்காரகன்’, ‘வித்யாகாரகன்’ என்று சொல்வார்கள். ‘மாதுளக்காரகன்’ என்று ஜாதகரின் தாய்மாமனுக்குரிய யோகங்களைக் கூறுபவரும் புதன்தான். புதன் வித்யாகாரகன் என்பதால் தொடக்கப்பாடசாலையில் கல்வி பயில்வதிலிருந்து கல்லூரிப் படிப்புவரை ஒருவரின் படிப்புக்குக் காரணமாக இருக்கிறார். கல்லூரிகளில் நல்ல மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களெல்லாம் புதனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களாக இருப்பார்கள். புதன் ஒரு விசித்திரமான கிரகம். செவ்வாயைப் போலவே புதனும் இரு ஆதிபத்திய கிரகமாகும். ஜோதிட ஆச்சர்யமாக மிதுனத்தில் ஆட்சி பெறும் புதன், ஆட்சி வீடான கன்னியில் உச்சம் பெறுகிறார்.


மீனத்தில் நீசமடைகிறார். அறிவு, ஞானம் இரண்டுக்கும் இவரே அதிபதியாகி படிப்பறிவு, பட்டறிவு இரண்டையும் மனிதனுக்கு உணர்த்துகிறார். விஞ்ஞானம், மெஞ்ஞானம் இரண்டுக்கும்காரணமாகிறார்.

புதனின் ஆதிக்கம்பெற்றவர்கள், எதையும் உள்வாங்கி உட்கிரகித்து, வெளிப்படுத்தும் திறன்கொண்ட எழுத்தாளர்களாகப் பத்திரிகையாளர்களாகத் திகழ்வர்.

இன்று உலகையே ஆள்வது கணிப்பொறித்துறை. கணிப்பொறித் துறையில் ஆற்றல் வாய்ந்த பொறியியலாளர்கள் பலரும் ஜாதகத்தில் புதனின் செல்வாக்குப் பெற்றவர்கள்.

மிதுனம், கன்னி, ரிஷபம், துலாம், மகரம், கும்பம் ஆகிய ஆறு லக்னங்களில் பிறந்தவர்களுக்குப் புதன் நன்மை செய்பவராக இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவல் கொண்டைக்கடலை சலட்

எம் குழந்தைகள் அவர்களைச் சுற்றியுள்ள பெரியவர்களிடமிருந்து உடல்நலம் தொடர்பான விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுக்கு றோல் மாடலாக நாம் ஆரோக்கியமான உணவுளைச் சாப்பிட்டு, அவர்களுக்கும் ஆரோக்கியமான பழக்கங்களைக் கற்றுக் கொடுப்போம்"

அதிக அளவு உப்பு மற்றும் சர்க்கரை கொண்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

முடிந்த வரை பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்து, கலோரிகள் குறைவான காய்கறிகள், பழங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சாப்பாட்டிலும் குறைந்தது ஒரு மாச் சத்து உணவைச் சேர்க்கவும்.

**அவல் கொண்டைக்கடலை சலட்**

இந்த சலட்டை ஒரு சிறந்த சக்தி சலட் என்று கூறலாம். பொதுவாக சலட்களில் கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும், மற்ற ஊட்டச் சத்துகள் நிறைவாகவும் இருக்கும். இந்த சலட்டிலும் பல்வேறு சத்தான பண்புகளைக்கொண்ட அவல், புரதம் நிறைந்த கொண்டைக்கடலை மற்றும் நார்ச்சத்துக்காக வெள்ளரிக்காய், தக்காளி போன்ற காய்கறிகளைச் சேர்த்துள்ளதால் இது காலை உணவுக்கு ஏற்றதாகும். பத்து நிமிடங்களில் மிகவும் எளிதாக இந்த சூப்பர் சலட்டை செய்து விடலாம்.

**தேவையானவை:**

கெட்டி அவல் ஒரு கப்
வேகவைத்த கொண்டைக்கடலை அரை கப்
வெள்ளரிக்காய் ஒன்று
தக்காளி ஒன்று
கரட் ஒன்று
கொத்தமல்லி இலை சிறிதளவு
மிளகுத்தூள் ஒரு டீஸ்பூன்
தேங்காய் எண்ணெய் 2 டேபிள்ஸ்பூன்
உப்பு தேவையான அளவு

**அரைக்க**

தேங்காய்த் துருவல் கால் கப்
புளி சிறிய துண்டு
பச்சை மிளகாய் ஒன்று

**செய்முறை:**

அவலை இரண்டு முறை நன்கு கழுவி, தண்ணீரை முழுவதும் வடித்துக்கொள்ளவும் ஒரு சிறிய மிக்ஸி ஜாரில் தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய் மற்றும் புளி சேர்த்து தண்ணீர்விடாமல் அரைத்துக்கொள்ளவும். வெள்ளரிக்காய் மற்றும் தக்காளியைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். கரட்டைத் துருவிக்கொள்ளவும்.

அகலமான பாத்திரத்தில் முதலில் அவல் மற்றும் வேகவைத்த கொண்டைக்கடலை சேர்த்து நன்கு கலந்துகொள்ளவும். பின்னர் அதில் அரைத்த தேங்காய் விழுது, தேங்காய் எண்ணெய் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து மெதுவாகக் கலந்துகொள்ளவும். கடைசியாக, பொடியாக நறுக்கிய தக்காளி, வெள்ளரிக்காய் மற்றும் துருவிய கரட், மிளகுத்தூள் சேர்த்து கொத்தமல்லி இலை தூவிப் பரிமாறவும். எளிதில் செரிமானமாகும் அவல் எடைக் குறைப்புக்கும் உதவும்.

# வாழ்க்கையை வாழுங்கள் வலிமையுடன்!

1. தினமும் 10லிருந்து 30 நிமிடங்கள் நடந்து செல்லுங்கள். அவ்வாறு செல்லும் போது சிரித்த முகமாகச் செல்லுங்கள்.
2. தினமும் ஒரு 10 நிமிடங்களாவது, எந்தச் சிந்தனைகளும் இல்லாமல் அமைதியாக கண்ணை மூடி அமருங்கள்.
3. தினமும் ஏழு மணி நேரம் உறங்குங்கள்.
4. எப்போதும் இரக்கம், உற்சாகம், ஊக்கம், கருணை ஆகிய குணங்கள் மனத்தில் நிறைந்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
5. அதிக நேரம் ஏதாவது விளையாடுங்கள்.
6. அதிகமான ஆன்மிக மற்றும் விஞ்ஞான புத்தகங்களை படியுங்கள்.
7. உங்கள் தினசரி அலுவலில் தியானம், யோகம், வழிபாடு போன்றவற்றுக்கு இடம் கொடுங்கள். இவை உங்கள் வாழ்க்கைக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.
8. உங்கள் ஓய்வு நேரத்தை 70 வயது கடந்த முதியவர்களுடனும், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுடனும் செலவழியுங்கள்.
9. அடிக்கடி நிறைய கனவு காணுங்கள், விழித்திருக்கும்போது!
10. மரங்களிலும்,செடி கொடிகளிலும் விளையும் உணவுப்பொருள்களை பச்சையாக அப்படியே நிறைய உண்ணுங்கள்.
11. தினசரி மூன்று நபர்களையாவது மகிழ்ச்சிப்படுத்துங்கள்.
12. தினமும் நிறைய தண்ணீர் அருந்துங்கள்.
13. உங்களுக்குள் உன்னதமான ஆற்றல் மறைமுகமாக இருப்பதை உணருங்கள்,
14. நீங்கள் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் வானில் சுதந்திரமாக பறக்கும் பறவையாக உணருங்கள்.
15. சிறந்த எண்ணங்களை உங்களின் மனதில் தினமும் ஐந்து முறை உருவாக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி வாழுங்கள்.
16. நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கையே உலகில் சிறப்பானது என்று உணருங்கள்.
17. உங்களின் காலை உணவை ஓர் அரசன்போல அருந்துங்கள்; மதிய உணவை ஓர் இளவரசன் போல உண்ணுங்கள்; இரவு உணவை ஒரு பிச்சைக்காரன் போல உண்ணுங்கள்.
18. நன்றாக வாய்விட்டு சிரியுங்கள்.
19. எல்லோரிடமும் அன்பு கொண்டு வாழ்ந்தால் இறைவனும் உங்களிடம் அன்பு செலுத்துவான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்,
20. வாழ்க்கையை சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள்.
21. அனாவசியமான விவாதங்களில் கலந்து கொள்ளாதீர்கள்.
22. உங்களின் கடந்தகால வாழ்க்கையை மிகவும் சிறப்பான முறையில் இறைவன் நடத்தி வந்துள்ளார் என்பதை உணர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
23. மற்றவர்களுடைய வாழ்க்கையுடன் உங்களுடைய வாழ்க்கையை ஒப்பிட்டு உங்களை உருவாக்கிய இறைவனை தயவுசெய்து கேவலப்படுத்தாதீர்கள்.
24. உங்களுடைய மகிழ்ச்சிக்கும், மன அமைதிக்கும் காரணம், கடவுள் உங்களிடம் காட்டும் கருணைதான் என்பதை என்றுமே மறவாதீர்கள்.
25. எவரையும், எதற்காகவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் மன்னிக்கத் தயாராக இருங்கள்.
26. 'உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்' என்று யோசிப்பதை தவிருங்கள். உங்களைப் பற்றி என்றுமே உயர்வாக எண்ணும் பழக்கத்தை கைவிடாதீர்கள்.
27. இதுவரை உங்களை காப்பாற்றி வந்த கடவுள், இனியும் உங்களை என்றென்றும் காப்பாற்றுவார் என்பதை மனதார உணருங்கள்.
28. நல்லதே நடக்கும் என்று நம்புங்கள்.
29. உங்களுடைய இன்பத்தில் பங்கெடுத்துக் கொள்பவர் அனைவரையும் மிக அதிக அளவில் பாராட்டுங்கள். அவர்களிடம் நிரந்தரமாக தொடர்பு வைத்திருங்கள்.
30. உங்களுக்கு மகிழ்ச்சியளிக்காதவை எதுவாக இருந்தாலும் அவைகளிடம் இருந்து விலகி ஓடி விடுங்கள்.
31. உங்கள் தேவைக்கு அதிகமாகவே அனைத்தையும் உங்களுக்கு தந்து வருகிற இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
32. வாழ்வின் உன்னதம் என்பது ஏற்கெனவே உங்களுக்கு முழுவதுமாக நிச்சயம் வந்து விட்டது என்று நம்புங்கள்.
33. நீங்கள் எந்த மனநிலையில் இருந்தாலும் நன்றாகக் குளித்து, சுத்தமான ஆடையை அணிந்து கொள்ளுங்கள்.
34. உங்களுக்கு நன்மை என்று தோன்றும் செயல்களை உடனே செய்யுங்கள்.
35. எத்தனை அலுவலாக இருந்தாலும் குடும்பத்தினருடன் பேசி மகிழுங்கள்.
36. உங்களுக்கு உள்ளே இருக்கும் 'ஆன்மா' எப்போதும் ஆனந்தமாக இருப்பதை உணர்ந்து, நீங்களும் ஆனந்தமாக இருங்கள்.
37. தினசரி மற்றவருக்குப் பயனளிக்கும் வகையில் ஒரு சிறிய செயலையாவது செய்யுங்கள்.
38. நீங்கள் வரம்பே இல்லாத வலிமை பெற்றவர் என்பதை அறிந்து, எந்தச் செயலிலும் துணிந்து இறங்குங்கள்.
39. நீங்கள் காலையில் கண் விழித்தவுடன் கடவுளுக்கு நன்றி தெரிவியுங்கள்!
40. நீங்கள் தூங்கும் முன்பு மகிழ்ச்சிகரமான தினத்தை தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத கோடிபதி** ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 751
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.10.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,037,050/-
வெற்றி இலக்கங்கள்: 11 34 52 77 U
SEASON
விசேட வெற்றி இல. 7159
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 825 825

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் ▸ 1051
சீட்டிழுப்பு திகதி ▸ 2019.10.03 வியாழக்கிழமை
B 16 39 45 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,645,284/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 04.10.2019 | வெற்றி வாரம் 2637 | வர்ணம் கடும் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 06 16 28 51
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.000.000/=
05.10.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**සංවර්ධන වාසනාව**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 285
சீட்டிழுப்பு திகதி ▸ 04.10.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 11 21 62
விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 44, 922, 620/=
09.10.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17-04-1951
மறைவு 15-10-2018

**அமரர் சிவகுரு மகேந்திரராஜா**

(ஓய்வுபெற்ற முகாமையாளர், வர்த்தகத் திணைக்களம்)

திதி: 05.10.2019

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள்
எமது மனதை என்றும் விட்டகலாது
அன்பிற்கும் பாசத்திற்கும் வரைவிலக்கணமாய்
அறிவின் சிகரமாய் உயர்ந்து நின்ற அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்
0777262522 /0212220237

குடும்பத்தினர்.

# சிறைச்சாலை செல்லப் பயந்தே கோத்தாவுக்கு எதிராகச் சதி

## மகிந்த அணி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக். 5

ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், தான் சிறைச்சாலை செல்ல நேரிடும் என்பதை அறிந்தே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகப் பல சட்ட சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளார். அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு அரச தலைவர் தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம்.'

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுப் பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஐக்கியத் தேசியக் கட்சியின் முழு ஒத்துழைப்புடனே மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி இடம்பெற்றது. அமைச்சரவையில் உள்ள பெரும்பாலானோர் இந்த மோசடியுடன் தொடர்புபட்டவர்கள். அவர்களே இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக அணிதிரண்டுள்ளார்கள்.

பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச இதுவரையில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்தால் கட்சியின் ஆதரவு கிடைக்காது.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி தோற்றம் பெற்றால் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார். அதன் பின்னர் தான் சிறைச்சாலை செல்ல நேரிடும் என்பதை அறிந்தே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக பல சட்ட சிக்கல்களை மேற்கொண்டுள்ளார்.

முன்னாள் தலைமை அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை இல்லாமல் செய்வதற்கான அரசியல் சூழ்ச்சியை ஐக்கியத் தேசிய கட்சி மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியே தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றது. எனினும், அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தகுந்த பாடத்தைப் புகட்டும் -என்றார்.

(ஓ.5,22,31)

# எழுவைதீவு மீனவர்கள் 12 பேர் இந்தியக் கடற்படையால் கைது

யாழ்ப்பாணம், ஒக். 5

கடற்றொழிலுக்குச் சென்றிருந்த யாழ்ப்பாணம் எழுவை தீவு மீனவர்களை இந்திய கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். 6படகுகளில் புறப்பட்ட 12 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களை மீட்டுத் தருமாறு எழுவைதீவு தோமையர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாண நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரிடம் எழுத்தில் கோரியுள்ளது.



இதேநேரம் மயிலிட்டியிலிருந்து தொழிலுக்குச் சென்ற படகு, பருத்தித்துறை சக்கோட்டையிலிருந்து சென்ற ஓர் படகு என்று மேலும் இரு படகுகளும் 6 மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு ஒரே நாளில் அதிக இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்கின்றமை மீனவர்களை அச்சமூட்டுவதாகவுள்ளது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி வடக்கில் 8 படகுகளில் பயணித்த 18 மீனவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேநேரம், மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும் 1 படகுடன் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்படி இலங்கையின் 24 மீனவர்கள் அண்மைய நாள்களில் இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(த-105)

**VACANCY**
**FEMALE HR ASSISTANT**
REQUIRED ENGLISH AND COMPUTER SKILLS NEEDED. SENT YOUR CV TO
hr@thethinnai.com
076 752 8628
86, PALALY ROAD, JAFFNA.

## மரண அறிவித்தல்



**திருமதி சாரதாதேவி ஞானலிங்கம்**

குப்பிளானை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் குப்பிளானை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி ஞானலிங்கம் நேற்று (04.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அஜந்தன் (சதன்), அனுராஜ் (அனு), அமல்ராஜ் (றஜீவ்), ஞானறூபா (றுபா), சஞ்சீவ்ராஜ் (விதுஷன்) ஆகியோரின் பாசமிகு தாயும், பரமசோதி காலஞ்சென்ற சிவசோதி மற்றும் அருட்சோதி, மோகனதாஸ், சுமதி, றயனி, கலைச்செல்வி, [illegible] ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

[illegible] பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தபாய...

தலைவர் தேர்தலில் என்னுடன் போட்டியிட்டே தோற்க வேண்டும். இதுவே எனது விருப்பம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தாவின் இலங்கைக் குடியுரிமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதியரசர்கள் குழாமால் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இது தொடர்பில் ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவிடம் பன்னாட்டு செய்திச் சேவையொன்றின் கொழும்புச் செய்தியாளர் வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

'கோத்தபாய எனக்குச் சவால் அல்ல. இதனை நான் பல தடவைகள் கூறியுள்ளேன். அதேவேளை, நானும் தனக்குச் சவால் அல்ல என்று கோத்தபாயவும் பல தடவைகள் தெரிவித்துள்ளார். ஆனால், மக்களின் வாக்குகள்தான் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கப் போகின்றன. பெரும்பாலான மக்கள் கோத்தபாயவைத் தோற்கடிக்கத் தயாராகவுள்ளனர். எனவே, அவரின் தோல்வி உறுதி என்றே நான் நம்புகின்றேன்' - என்றார்.

(ஒ.5,22)

## தமிழ்...

33 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதில் தமிழ் பேசும் முதல் வேட்பாளராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் கட்டுப்பணத்தை தேர்தல் செயலகத்தில் செலுத்தினார். (ஒ,5)

## மொரட்டுவையில்...

பட்டன. அவை வான் படையினரால் செயல் இழக்கச் செய்யப்பட்டன. இதன்போது அவை மிகப் பெரிய சத்தத்துடன் வெத்ததால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

(ஒ,5)

## தரம்...

களை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் பார்க்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலமாக 2 இலட்சத்து 55 ஆயிரத்து 529 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

தமிழ் மொழி மூலமாக 83 ஆயிரத்து 840 மாணவர்களும் தோற்றிருந்தனர். 2 ஆயிரத்து 995 பரீட்சை மைய நிலையங்களில் பரீட்சை நடைபெற்றிருந்தது.

(ஒ,5)

# கேள்வி அறிவித்தல் - 2020
# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் அதிகாரஎல்லைக்குட்பட்டகீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புநிலையம் என்பவற்றை 2020.01.01 ஆம் திகதிதொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 24/10/2019பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 25/10/2019பி.ப 2.00 மணிவரை
கேள்வப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 25/10/2019பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிதென்மேற்குபிரதேச சபை,தலைமைஅலுவலகம்

01. கேள்விப் பத்திரங்கள் 03 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளை "தவிசாளர், வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுதபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்குமுன் இடப்படல் வேண்டும். மூன்றாவதுபிரதி "பிராந்திய உள்ளூராட்சிஉதவிஆணையாளர்,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்றமுகவரிக்கு 2019.10.25 ஆம் திகதிபி.ப 2.00 மணிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசியஅடையாளஅட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் கிராமஅலுவலரால் வழங்கப்பட்டவதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாதகேள்விகள் இரத்துச்செய்யப்படும்.

06. கேள்விப் படிவக் கட்டணம்,கேள்வித்தொகை, மாதவாடகைஎன்பவற்றிற்கு 2% தேசத்தைகட்டியெழுப்பும் வரி (NBT) செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி நிபந்தனைகள்,அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரணஅதிகாரம் உண்டு.
08. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் நடாத்துவதற்குரிய இடத்தினைதாங்களே தெரிவு செய்தல் வேண்டும்.
10. மாத வாடகையானது விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
11. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
12. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியை 04.11.2019 ஆம் திகதிக்குமுன்னர் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைசெய்துகொள்ளவேண்டும்.
13. கேள்விப்பத்திரங்களைதலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களைதலைமை அலுவலகத்திலும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சந்தைகள்,துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்புநிலையம், இறைச்சிக் கடைகள் ,கோழி இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் N.B.Tதவிர. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்ததொகைN.B.Tதவிர. | மாதாந்தவாடகை N.B.Tதவிர. |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை (மீன் சந்தை,மரக்கறிச் சந்தை,துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்மற்றும் பொதுமலசல கூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 18,500.00 | 1,840,000.00 | |
| 2 | மானிப்பாய் பொதுச் சந்தைமாட்டிறைச்சிக் கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 976,700.00 | 600.00 |
| 3 | மானிப்பாய் பொதுச் சந்தைஆட்டிறைச்சிக் கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 45,900.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச் சந்தைகோழி இறைச்சிக் கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 2,500.00 | 201,800.00 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்மற்றும் பொதுமலசலகூடம்உள்ளடங்கலானது | 1,000.00 | 8,000.00 | 800,000.00 | |
| 2 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப்படுத்தவதற்குமாத்திரம்) | 500.00 | 1,500.00 | 23,000.00 | |
| 3 | நவாலிபிரசாத் சந்தை | 1,000.00 | 2,000.00 | 193,200.00 | |
| 4 | நவாலிபிரசாத் சந்தைமாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 179,000.00 | 400.00 |
| 5 | நவாலிபிரசாத் சந்தைஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 36,700.00 | 300.00 |
| 6 | சாவற்கட்டுசந்தை | 1,000.00 | 3,500.00 | 304,300.00 | |
| 7 | ஆனைக்கோட்டைசந்திமாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 499,400.00 | |
| | பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம் | | | | |
| 1 | பண்டத்தரிப்புபொதுச் சந்தை | 1,000.00 | 18,000.00 | 1,788,600.00 | |
| 2 | பண்டத்தரிப்புபொதுச் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 9,000.00 | 853,800.00 | 1,500.00 |
| 3 | பண்டத்தரிப்புபொதுச் சந்தைகோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 431,800.00 | 1,500.00 |
| 4 | பண்டத்தரிப்புசாந்தைச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 490,600.00 | |
| | பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம் | | | | |
| 1 | மாகியப்பிட்டிபொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 164,300.00 | |
| 2 | மாகியப்பிட்டிச் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 101,800.00 | 250.00 |
| 3 | மாகியப்பிட்டிச் சந்தைகோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 107,800.00 | 250.00 |
| 4 | இளவாலைபொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 156,500.00 | |
| 5 | இளவாலைபொதுச் சந்தைமாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,500.00 | 202,400.00 | |
| 6 | இளவாலைபொதுச் சந்தைகோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,500.00 | 130,900.00 | |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 259,200.00 | |
| 8 | மாதகல் பொதுச் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 3,000.00 | 235,300.00 | 250.00 |
| 9 | மாதகல் பொதுச் சந்தைகோழி இறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 45,900.00 | 250.00 |

திரு.அ.ஜெபநேசன். தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய்
2019.10.05

**வீடு வாடகைக்கு**
ஜின்னா வீதி, கலிமா லேனில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
075 991 0060

**வேலையாள்கள் தேவை**
கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
(இருபாலாரும் விரும்பத்தக்கது)
தொடர்பு - 077 159 5826

**விற்பனைக்கு**
TATA 407 ரக அலுமினிய Body அடித்த வாகனம் விற்பனைக்குண்டு.
075 991 0060

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் (A9க்கு 100m) ஒரு தாயும், மகளும் அல்லது வேலை செய்யும் இரண்டு பெண்களுக்கு தங்குமிடம் உண்டு. (தாதியர், ஆசிரியைகள் விரும்பத்தக்கது).
அழையுங்கள். 071 3725237

**வேலையாள்கள் தேவை**
பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள அனுமன் சுப்பர் சிற்றி நிறுவனத்திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. வேலை ஆர்வம் உள்ளவர்கள் இன்றும், நாளையும் 10மணியிலிருந்து 12மணிவரை நேரில் சமுகம் தரவும்.
077 358 0922

**வேலை ஆள் தேவை**
எமது ஸ்தாபனத்துக்கு வேலை ஆள் தேவை. கணினி அறிவுடையவர் விரும்பத்தக்கது. வயது எல்லை 18 தொடக்கம் 25 வரை.
தொடர்பு: 021 222 3857


**விற்பனைக்கு**
Nissan doctor Sunny Car B13 19 - 1994 ஆம் ஆண்டு Model சில்வர் கலர் நல்ல கன்டிசனில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. விலை 12 50000 /=
15/2, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் (Town).
தொடர்பு: 077 681 8906

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்ப, 1987 இல் பிறந்த சூரியன், செவ்வாய் 03 இல், கிரகபாவம் 06, மிதுனராசி - மிருகசீரிடம் 04 ஆம் பாதம் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 61 61 739
077 89 69 982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

மலர்வு
28 . 07 . 1932



உதிர்வு
04 . 10 . 2019

CS 24076(16/17)

## கணபதி திருநாவுக்கரசு

வேலணை 01ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதி திருநாவுக்கரசு நேற்று (04.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- பாக்கியலெட்சுமி தம்பதிகளின் மகனும் காலஞ் சென்றவர்களான சபாபதி-அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அன்ன-லெட்சுமியின் அன்புக் கணவரும் நிமலன் (லண்டன்). கமலினி (யாழ். ப.நோ.கூ சங்கம்). கேதீஸ்வரி (ஆசிரியை. சென். சாள்ஸ் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாமினி. சதா-வேல்மாறன்(மிருதங்க வித்துவான்). ஸ்ரீகாந்தன்(சர்வோதயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். சாருமதி. சாரங்கி. சாம்பவி. சதுர்சன். தீபிகா. சங்கவி. அமிர்தினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் நவரத்தினம் (ஓய்வு நிலை தபாலதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற அருளாம்பிகை மற்றும் கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராஜஇராஜேஸ்வரியின் அன்புச் சித்தப்பாவும் அமரர் வசந்தன் மற்றும் ஜெயந்தன். முகுந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 82/4. கலட்டி அம்மன் வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 07.10.2019 திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/4, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7735 (மகள்),
011 574 7793 (சகோதரன்)
077 917 3947 (மருமகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம்
08 . 08 . 1935



மறைவு
07 . 09 . 2019

## திருமதி திலகவதி விஸ்வநாதன்

**சிற்பனையான் சரண் ஒன்றே**
**போதுமென - காவியம் படைத்துச்**
**சென்றீரே - எம் குல தெய்வம் அம்மாவே!**

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.10.2019) சனிக்கிழமை காலை 7 மணியளவில் வேலணை சாட்டி அந்தியேட்டி மண்டபத்திலும், வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் (07.10.2019) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்திலும் நடைபெற்று, அதேதினம் முற்பகல் 11.30 மணியளவில் இல.63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்திலுள்ள " **இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி**" மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எம்முடன் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**(தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)**

இல.10, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(CS/28469)(11,17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

மலர்வு
14 . 07 . 1934



உதிர்வு
04 . 10 . 2019

## முருகேசு நடராஜா

(முன்னாள் இ.போ.ச முகாமையாளர், G.T.Z அலுவலகர், கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர்)

அராலி மத்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உள்வட்ட வீதி வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நடராஜா (முன்னாள் இ.போ.ச முகாமையாளர். G.T.Z அலுவலகர். கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர்) நேற்று (04.10.2019) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு அமுது தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சின்னாச்சிபிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு கந்தையா. முருகேசு சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மூத்த சகோதரனும் சவுந்தரநாயகியின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான அருணாசலம் இரகுநாதன் அவர்களின் மைத்துனரும் சாந்தினி (மாவட்டச் செயலகம். வவுனியா). காலஞ்சென்ற சுகந்தினி. (முன்னாள் ஆசிரியை. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) மற்றும் உமாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தனபாலன் (கிராம அபிவிருத்தி நிறுவன மாவட்ட முகாமையாளர். வவுனியா). விமலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாஸ்வதா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்). சாயி அவினாஸ். சாயி சுஜந். திசித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் வவுனியாவிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உள்வட்ட வீதி, வவுனியா

தகவல்: குடும்பத்தினர்
076 319 6329, 077 538 4698

# மரண அறிவித்தல்



CS 24076(16/17)

## மயில்வாகனம் பரமநாதன்

ஓய்வுபெற்ற இ.போ.ச நடத்துனர், கோண்டாவில்)

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி. இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பரமநாதன் நேற்று (04.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் றோசம்மா தம்பதியினரின் மருமகனும் சண்முகேஸ்வரியின் அன்புக் கணவரும் அகிலன் (ஹொலண்ட்). விஜிதா (ஜேர்மனி). சசிதா (ஜேர்மனி). கேசவன் (செலிங்கோ லைஃவ் யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற சோபிதா மற்றும் பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலினி (ஹொலண்ட்). வசிகரன் (ஜேர்மனி). வரதராஜன் (ஜேர்மனி). அஜந்தா ஆகியோரின் மாமனாரும் சிவசுப்பிரமணியம் (சுவிஸ்). இரத்தினபூபதி. இந்திரலீலா. மோகனலீலா காலஞ்சென்ற சகுந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன். சிவேஸ்வரி. யோகேஸ்வரி காலஞ்சென்ற பரஞ்சோதி காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் புலேந்திரநாதன். வேலு ஆகியோரின் மைத்துனரும் தயாநிதி. சிவநாதன் ஆகியோரின் சகலனும் அனுஷன். அபிஷா (ஹொலண்ட்). வர்ஷா. வர்ணி. கனிமொழி. சாய்ராம் (ஜேர்மனி). துளிர்நிலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"திருப்பதி"
கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"Ammanai Saran Addainthal Athika Varamperalam"**

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

S,CHAPEL ROAD, LONDON.W139AE  Tel: 0208 - 810 0835
Founded on 10-08.1991  Charity No:1014409  0208 - 340 0485
www.ammanealing.org  Email : info@ammanealing.org



எமது ஆலயத்தில் பின்வரும் பணிகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
விண்ணப்பதாரிகள் மேல் குறிப்பிட்ட மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**வெற்றிடங்கள் மூன்று ஆலய சிவாச்சாரியார்கள் பதவிகள்**

**HINDU RELIGIOUS WORKERS WITH NON - PASTORAL ROLE**

**தகைமைகள்**

விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும்.
சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவம் தேவை.

**ஓர் உதவி சிவாச்சாரியார் பதவி**

சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவத்துடன், சுவாமி நெய்வேத்தியம், பூமாலை கட்டுதல், அலங்காரம் செய்தல் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வேதனம்**

பிரித்தானிய அரச விதிகளுக்கு அமைய வேதனம் வழங்கப்படும்.
அடியார்கள் தட்சணை பகிர்ந்து வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி : **30.10.19**

(CS 28472)(14.17)

**மேற்படி பதவிகளுக்குத் தகுதியானோர் மட்டும் விண்ணப்பிக்கலாம். இப்பதவிகள் தொடர்பான தகைமைகள், வேதனம் என்பன பற்றிய விபரங்களுக்கு தலைவர், செயலாளர் ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.**

---

## 5ஆம் ஆண்டின் நீங்கா நினைவலைகளில்...



மலர்வு 19 . 09 . 1985

உதிர்வு 01 . 10 . 2014

## அமரர் சிவராசா நிசாந்த்

**திதி: வளர்பிறை பூர்வபட்ச சப்தமி (05.10.2019)**

கால நதியில் கரைந்தே ஆண்டு ஐந்தடா!
இளமைப் புயல் வீசும் போதே
கால தேவன் அணைத்த தேனடா?
விழியினில் வலியினைச் சுமந்தே
வழி நீளம் தேடுகின்றோம் - எம்மை
ஏங்கித் தவித்தே நிதம் புலம்ப விட்டு
எங்கு சென்றாயடா?
நீ தந்த நீங்கா நினைவுகளை - எம்
இறுதி மூச்சுவரை சுமந்து
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

49/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(CS.28439)(13..17)

---



### திருமணப் பட்டுப் புடவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்

# தீபாவளி ஆடைத் திருவிழா

ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்

**காலம் : 05.10.2019 - 28.10.2019**  **இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**இந்தியன் செலக்ஷனின் தீபாவளி ஆடைத் திருவிழா**

கொள்வனவு செய்யும் பெறுமதிக்கேற்ப விலைக் கழிவுகளைப் பெற்றிடுங்கள்


ரூபா: 15000 நிரு மேல் - 1000/=
ரூபா: 20000 நிரு மேல் - 1500/=
ரூபா: 30000 நிரு மேல் - 2000/=
ரூபா: 40000 நிரு மேல் - 3000/=

காலம் : 05/10/2019 - 28/10/2019
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

GIFT VOUCHER

**விசேட விலைக்கழிவு**





**இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,பார்ட்டி புறொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாட்டில் 4 விருதுகளை குவித்த 'ராட்சசன்'

'முண்டாசுப்பட்டி' படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் ராம்குமார். இவர் விஷ்ணு விஷால், அமலாபால் ஆகியோரை வைத்து 'ராட்சசன்' என்ற படத்தை இயக்கினார். சைக்கோ திரில்லர் படமாக வெளியான இந்தப் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று சூப்பர் ஹிட்டானது.

மேலும் பல்வேறு திரைப்பட விழாக்களில் இப்படம் கலந்துக் கொண்டு பல விருதுகளைப் பெற்றது. இந்த நிலையில் அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற திரைப்பட விழாவில் 'ராட்சசன்' படம் கலந்துக் கொண்டது.


இதில் 4 விருதுகளை 'ராட்சசன்' திரைப்படம் வென்றுள்ளது. சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், சிறந்த திரில்லர், சிறந்த பின்னணி இசை ஆகிய பிரிவுகளில் 'ராட்சசன்' திரைப்படம் விருதுகளை வென்றுள்ளது.

தனது கோயிலை அழிக்கவந்த பிக்குவின் கதையை முடிச்சு...
தன் கண்ணுக்கு முன்னே எரிச்சு சாம்பல் ஆக்கினார்

**பிள்ளையார்**



**இப்பிடி சொல்லி தேற்றிக் கொள்ளுவம்**




Dr.சிவஷக்தி@sakthibalu007

தனிமை பலப்படுத்துவதும் உண்டு பயமுறுத்துவதும் உண்டு.!

ச ப் பா ணி@manipmp

மடியில 'பவர் பேங்க்' இருந்தால் வழியில் பயம் இருக்காது

சித்ரா தேவி @chithradevi_91

அகிம்சையைக் கூட வன்முறையாகத்தான் நிரூபிக்க வேண்டியிருக்கிறது. அமைதி என்பதை சத்தமாகச் சொல்லி நிரூபிப்பது போல.

ச ப் பா ணி@manipmp

இணையம் கற்றுக்கொடுத்ததில் முக்கியமானது மௌனமாய் வேடிக்கை பார்ப்பது!







twitter




# வாழ்க்கைப் பாடம்

ஒரு தந்தை தனது இறுதி காலத்தில் மகனை அழைத்து சொன்னார், "மகனே, இது உனது பூட்டனின் கைக்கடிகாரம், 200 வருடங்கள் பழைமை வாய்ந்தது, நான் இதனை உனக்கு தருவதற்கு முன்னால் நீ கடை வீதிக்கு சென்று கைக்கடிகாரக் கடையில் நான் இதனை விற்கப் போகிறேன் எவ்வளவு விலை மதிப்பீர்கள் என்று கேட்டுப் பார்" என்றார்.

அவன் போய் கேட்டுவிட்டு தந்தையிடம், "இது பழையது என்பதால் 5 டொலர்கள் மட்டுமே தர முடியும் என்கின்றனர்"- என்றான்.

''தந்தை பழைய பொருள்கள் விற்கும் கடைக்குப் போய் கேட்டுப் பார்" என்றார்.

அவன் போய் கேட்டுவிட்டு, தந்தையிடம் "இதற்கு 5 ஆயிரம் டொலர்கள் தர முடியும் என்கின்றனர்" என்றான்.

தந்தை ''இதனை அருங்காட்சியகம் கொண்டு சென்று விலையை கேட்டுப்பார்" என்றார்...

அவன் போய் கேட்டுவிட்டுத் தந்தையிடம், "நான் அங்கு போன போது, அவர்கள்



அதனைப் பரிசோதனைக்குட்படுத்த ஒருவரை வரவழைத்து, பரிசோதித்துவிட்டு, என்னிடம் இதற்கான பெறுமதி ஒரு மில்லியன் டொலர்கள்" என்கின்றனர் என்றான்.

தந்தை மகனை பார்த்து, "மகனே! சரியான இடம் தான், உனது மதிப்பைச் சரியாக மதிப்பிடும். எனவே, பிழையான இடத்தில் நீ உன்னை நிறுத்திவிட்டு, உன்னை மதிக்கவில்லை என்று நீ கோபப்படுவதில் அர்த்தம் இல்லை" என்றார்.


"உன்னுடைய மரியாதையை அறிந்தவனே உன்னை கண்ணியப்படுத்துவான்"

"உனக்கு தகுதி இல்லாத இடத்தில் நீ இருக்காதே..." இதனை வாழ்க்கையின் பாடமாக எடுத்துக்கொள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம்

நடேசு தயாளன்



கற்போன் சுதந்திரமான உணர்வுடன் தயக்கமற்ற நிலையில் கற்பதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்துபவராக விளங்கும் ஒருவரே உன்னதமான ஆசிரியராகக் கொள்ளப்படுவார். ஆசிரியரானவர் வேறுபட்ட திறன்களையும் ஆற்றல்களையும் செயலாற்றல் நிலைகளையும் கொண்டவராக விளங்குவதோடு எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய திறன்களை கற்போனுக்கு வழங்கக் கூடிய வகையில் வகுப்பறையினை உயிர்த்துடிப்பானதாக நகர்த்திச் செல்லும் ஆற்றலுள்ளவராகவும் விளங்க வேண்டும். அத்தகைய ஒருவரே அறிவு மையச் சமூகத்தின் எதிர்பார்க்கைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய செயலாற்றல் மிக்க ஆசிரியராக விளங்க முடியும். கல்வியானது இன்று புதிய நிலைமாறு வகிபாகத்துள் சென்றுள்ளமை நோக்கத்தக்கது. புதிய உலகளாவிய அறிவு மையச் சமூகத்தினுள் பிள்ளையை நுழையச் செய்யும் நிலையினை இன்றைய கல்வி பெற்றுக் கொண்டுள்ளது. இந்தச் செயற்பாடானது புதிய அறிவு அடிப்படையிலான சமூகத் தோற்றத்துக்கு வழிசமைத்துள்ளது. 21ஆம் நூற்றாண்டுக் கற்றலானது தொழிற்திறன் வாழ்க்கைத் திறன் புத்துருவாக்கத் திறன் பிரச்சினை தீர்க்கும் திறன் ஒழுக்கம்சார் விழிப்புணர்வு கலாசார தேர்ச்சி என்பவற்றினைக் கருத்திற் கொள்ள வேண்டியதாகவுள்ளது.

### 21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியரின் பணிகள் சில

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியரானவர் வாழ்க்கை நீடித்த கல்விக் கருமத் தொடரில் ஈடுபட வேண்டியவராயுள்ளார் அது மட்டுமன்றி வாய்ப்புக்களுக்கும் தேவைகளுக்கும் பொருந்தக் கூடிய வகையில் தொடர்ந்து மாற்றமடைய வேண்டியவராயுமுள்ளார். இதன் காரணமாக வளர்ச்சியடையும் அறிவு மையச் சமூகமானது அறிவு பிரிவுபடுவதனைக் குறைப்பதோடு திறன்களின் பொருந்தாத தன்மையைக் குறைத்து பன்னாட்டு ரீதியில் நாட்டின் குடிமக்கள் போட்டியிடும் திறனை வளர்த்துள்ளது. இன்றைய மாணவர்கள் உலகச் சமூகத்துடன் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது நோக்கத்தக்கது. இதில் வெற்றியடைவதனை நோக்காகக் கொண்டு மாணவர்களை நிபுணத்துவம் மிக்கவர்களாக சிறந்த தொடர்பாடல் திறனுடையவர்க ளாக வடிவமைப்பாளராக விமர்சனப்பாங்கான சிந்தனையாளராக விளங்கச் செய்ய வேண்டியுள்ளமை ஆசிரியப்பணியில் அவசியமானதாயுள்ளது.

அறிவுமையச் சமூகமானது கற்கும் சமூகமாகும் இதற்கான தகவலானது வேகமாக விரிவடைவதாகவும் தொடர்ச்சியாக உலக ரீதியாக பரிமாறப்படுவதாகவும் அமைகின்றது. பொருளாதார வெற்றியும் தொடர்ச்சியான புதிய கண்டுபிடிப்புக்களும் தொழிலாளர்களது இயலுமை என்பனவும் அவர்களது தொடர் கற்றலில் தங்கியுள்ளமையும் நோக்கத்தக்கது. அறிவு மையச் சமூகத்துக்கான கற்பித்தலானது ஆழமான அறிகைசார்ந்த கற்றலினை வழங்குவதால் ஆக்க மலர்ச்சி மற்றும் உண்மைத் தன்மையினைப் பிள்ளைகளிடையே வெளிப்படுத்துவதிலேயே இதன் செயற்திறன் தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர்களானவர்கள் விசேடமான வாண்மைத் திறன்களை வளர்க்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

ஆழமான கற்றலினை வளர்த்தல், புதிய கற்பித்தல் முறைகளைக் கையாளல், தொடர்ச்சியான வாண்மைத்துவக் கற்றல், குழுவாகச் சேர்ந்து வேலை செய்தலும் கற்றலும் பெற்றோருக்கு பங்காளிக் கற்றல் முறையினை அறிமுகம் செய்தல், கூட்டிணைவான நுண்ணறிவுத் திறனினை விருத்தி செய்தல், ஆற்றல் இயலுமையை விருத்தி செய்தல், செயன்முறைகளில் நம்பிக்கை கொள்ளல் என்பன இன்றைய ஆசிரியப்பணியில் முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளன.

### பாடசாலையின் விருத்தியில் ஆசிரியரின் வகிபங்கு

ஆசிரியரானவர் பாடசாலையை உன்னதமான கற்கும் நிறுவனமாக மாற்றுவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர் அறிவுமையச் சமூகத்தின் தேவைகளை உணராதவராக விளங்குவாரானால் மாணவர்களை அதற்குப் பொருத்தமானவராக உருவாக்க முடியாத நிலை காணப்படும் என்பது நோக்கத்தக்கது. இந்த வகையில் ஆசிரியரானவர் வினைத்திறனுடன் செயற்படுபவராகவும் கூட்டிணைவான அறிவுசார் செயற்பாடுகளில் ஈடுபடுபவராகவும் தனது சக பாடிகளிடையே அதனைப் பரிமாறுபவராகவும் பல்மாதிரித் திறனுடையவராகவும் டியிற்றல் தொழில் நுட்ப அறிவுடையவராகவும் விமர்சனப் பாங்கான சுயகணிப்பீட்டுக்குட்பட்டவராகவும் தனது கற்றலை நடத்தை மூலம் பிரதிபலிப்பவராகவும் விளங்குதல் வேண்டும். என்பதோடு ஊக்கல் செயன்முறையுடன் கூடிய கற்றல் கற்பித்தலிலும் ஈடுபடுபவராகவும் விளங்குதல் வேண்டும்.

21ஆம் நூற்றாண்டுகான கற்பித்தலானது புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவதாகவும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் இடம்பெறுவதாகவும் சாத்தியமான அனைத்து விடயப் பரப்புக்களிலும் கற்றல் இடம்பெறுவதாகவும் அமைந்து காணப்படும். இத்தகைய நிலையில் வகுப்பறைகளானது கற்போனை மையமாகக் கொண்ட வகுப்பறையாகவும் தனித்துவமான அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்குவதாகவும் [illegible] காணப்படும். பிள்ளையானது அனைத்துச் சாத்தியமான முறைகளிலும் தகவல்களைத் திரட்டு வதாகவும் விளங்குவதோடு தொகுப்பாக்கப்பட்ட அறிவினை வைப்பாக்கம் செய்வதாகவும் விளங்கமாட்டாது.

### பிள்ளையின் திறமையை இனங்காணுபவர் ஆசிரியரே

பிள்ளையானது வேறுபட்ட ஆளுமைத் திறன்களையும் இலக்குகளையும் தேவைகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. என்பதனை ஆசிரியரானவர் உணருதல் வேண்டும். பிள்ளைக்கான கற்றல் சுய தெளிவுடையதாகவும் சுயமான கற்றல் பாங்குடையதாகவும் ஊக்கல் நிலையினை பெறக் கூடியதாகவும் இருத்தலவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு செயலாற்றும் ஆசிரியத்துவத்தினையே இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது.

பிள்ளையினைச் சுயமாகச் சிந்திக்கத் தூண்டுதல் பரிவுணர்வுடன் நடந்து கொள்ளுதல் பிள்ளைக்கான தொண்டராகச் செயற்படுதல் நேரான எண்ணங்களினைப் பிள்ளைகளிடத்தில் தோற்றுவித்தல் பிள்ளைகளது பெற்றோருடன் நேரான தொடர்புகளைப் பேணுதல் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் நேர்தியான ஆடைகளை அணிந்து கடமைக்குச் சமூகமளித்தல் பிள்ளைகளுடன் கலந்துரையாடல் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தூண்டுதல்களை வழங்குதல் என்பன பிள்ளைகளது ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பங்காற்றுவதாக அமைந்து காணப்படும்.

இன்றைய காலக் கற்பித்தலானது சிக்கலானதாக உள்ளமை நோக்குதற்குரியது பிள்ளைகளது கீழ்ப்படிவின்மை தர்க்க மனப்பாங்கு மன அழுத்த நிலைகள் போட்டி மனப் பாங்குகள் என்பன பிள்ளையினது நடத்தையில் மாற்றத்தினை உண்டுபண்ணுவதாகவுள்ளது. இந் நிலையில் பிள்ளைகளிடத்தில் உயர்மட்டச் சிந்தனைகளை வளர்க்க வேண்டியுள்ளமை அவசியமானதாகும். இது தவிரப் பிள்ளைகளை உலகளாவிய நிலையில் சிந்திக்க வேண்டியவர்களாக மாற்றுதலும் இன்றியமையாததாகும். இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆசிரியராலேயே அறிவு மையச் சமூகத்தில் வாழக்கூடிய நல்ல குடிமக்களைத் தோற்றுவிக்க முடியும்.

கட்டுரையாளர்: அதிபர்
கொழும்புத்துறை துரையப்பா
[illegible]
வித்தியாலயம், யாழ்ப்பாணம்

## சான்றோர்களை உருவாக்குபவர்கள் – ஆசிரியர்கள்

அறியாமை இருள் அகற்றி அறிவொளி பரப்புபவர் - ஆசிரியர்
ஞானவிளக்குகளாக ஒளிவீசுபவர் - ஆசிரியர்
தெய்வத்துக்கும் முதலாவதாகப் போற்றப்படுவர் - ஆசிரியர்
மாணவர்களிலும், சேவையிலும், பற்று, பசாசம் வைத்து
ஏணியாகவும், தோணியாகவும் தொழிற்படுபவர் - ஆசிரியர்
தாயாக, தந்தையாக, வழிகாட்டியாக, தோழனாக
இன்றும் பல பாத்திரங்களில் நடிப்பவர் - ஆசிரியர்
சமூகம் காண விழைகின்ற சான்றோர்களை சிருஷ்டிப்பவர் - ஆசிரியர்
அர்ப்பணிப்பு உணர்வோடு அரும்பணி ஆற்றுபவர் - ஆசிரியர்
மாணவரில் மறைந்திருக்கும் உள்ளார்ந்த திறக்களை
இனங்கண்டு சாதனை புரிய வைப்பவர் - ஆசிரியர்
நேரத்துக்கு மதிப்பளித்து முன்மாதிரியானவராகத் திகழ்பவர் - ஆசிரியர்
கலை, கலாசாரங்களைப் பேணி
அற நெறிப்பண்புகளை வளர்ப்பவர் - ஆசிரியர்
நவீன மாற்றங்களைத் தேடி அறிந்து இற்றைப்படுத்துபவர் - ஆசிரியர்
வாண்மை விருத்திக்காக என்றும் கற்பவர் - ஆசிரியர்
வளர்ந்துவரும் நவீன உலகின் மாற்றங்களுக்கு
முகங்கொடுக்கக் கூடியவராக அறிவை வளர்ப்பவர் - ஆசிரியர்
இறைவனையும், இயற்கையையும் நேசிப்பவர் - ஆசிரியர்
பிள்ளையை அறிபவர், தனியாள் வேறுபாடுகளை
உணர்பவர் உளவியல் ஞானம் மிக்கவர் - ஆசிரியர்
பிள்ளையைத் தட்டிக் கொடுத்து உன்னால்
முடியும் என உற்சாகப்படுத்துபவர் - ஆசிரியர்
நிர்வாகத்துடனும், சக ஆசிரியர்களுடனும்,
சமூகத்திலும் நற்புறவைப் பேணுபவர் - ஆசிரியர்
கடமைக்காக அல்லாது மனச்சாட்சிக்காக சேவைபுரிபவர் - ஆசிரியர்
தனது மாணவனின் வளர்ச்சியில் மனநிறைவு பெறுபவர் - ஆசிரியர்
சொல்வதைச் செய்பவர் செய்வதைச் சொல்பவர் - ஆசிரியர்
உண்மையானவர், நேர்மையானவர் நம்பிக்கைக்குரியவர் - ஆசிரியர்
பெயரிற்கு ஆசிரியராக இல்லாது பெயர் சொல்லும்
ஆசிரிய தெய்வகளாக போற்றப்படுபவர்கள் - ஆசிரியர்

- அம்பலவாணர் லோகநாதன், [illegible]
யாழ்ப்பாண தேசிய கல்வியற்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நோட்டாவைவிடவும் கட்டாயமாக்கலே அவசியம்

இலங்கையின் தேர்தல்களில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரையும் பிடிக்காதபட்சத்தில் அவர்களில் எவருக்கும் வாக்களிக்காதமையைப் பிரதிபலிப்பதற்கானவழிவகைவாக்காளர்ஒருவருக்குவழங்கப்படவேண்டும் என்று கேட்டு உயர் நீதிமன்றத்தில் தனிநபர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள யாரும் எனது தெரிவல்ல என்பதை வெளிப்படுத்தும்வகையில் நோட்டாஎன்கிற தெரிவுக்கான வாய்ப்பு வாக்குச் சீட்டுக்களில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதே கோரிக்கை.

இந்தியாவில் தேர்தல்களின்போது இதுபோன்றதொரு நடைமுறை உண்டு. அரசியல் கட்சிகள் மீதும் வேட்பாளர்கள்மீதும்அதிருப்திகொண்டவர்கள்நோட்டாவைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இது அமைந்திருக்கின்றது.

அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகள் மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கு இதுவொரு நல்ல வழி என்று கருதப்படுகின்றது. பெருமளவான பொதுமக்கள்நோட்டாவைப்பயன்படுத்துவதன்மூலம் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி அரசியல் தரப்புக்களுக்கு அழுத்தத்தைக்கொடுக்கமுடியும்என்று எண்ணப்படுகின்றது.

அதைத் தவிர நோட்டாவின் பயன்பாட்டால் குறிப்பிடத்தக்க பயன் ஏதும் கிடையாது. நோட்டாவைப் பயன்படுத்துபவர்களின்எண்ணிக்கைஎன்னவாகஇருந்தபோதும்எஞ்சியுள்ளவர்களின்வாக்குகளின்அடிப்படையில் அரசியல் தெரிவுகள் இடம்பெற்றுக்கொண்டேதான் இருக்கப்போகின்றன. யாரோ ஒருவர் அரசியல் அதிகாரத்தைப்பெற்றுக்கொண்டு ஆட்சி செலுத்தத்தான்போகிறார். அதன்அழுத்தம் நோட்டாவைப்பயன்படுத்தியவர்கள் மீதும் அழுத்தத்தான் போகிறது.

ஒருதொகுதி மக்கள்தமது அரசியல்தலைவரின்தெரிவில் பங்கேற்றவில்லைஎன்றபோதும்எஞ்சியவர்களின்வாக்குகளைக் கொண்டு அரசியல் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படும் நிலை தொடரும் என்பதால் நோட்டாவின் பயன்பாடு மேலும் மேலும் தவறானவர்களின் தெரிவை ஊக்கப்படுத்துவதாகவே அமைந்துவிடும்.

அரசியல்வாதிகள் மீதான தமது அதிருப்தியையும் வெறுப்பையும்பொதுமக்கள்வெளிப்படுத்துவதற்கான வழிவகைகள் பல உள்ளன. அரசியல்வாதிகளுக்கும் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுப்பதற்குப் போராட்ட வடிவங்கள் பலப்பல உண்டு. அப்படியிருக்கையில் நோட்டாவைப் பயன்படுத்துவதன் மூலம் குறிப்பி டத்தகுந்த சாதனை எதனையும் நிகழ்த்திவிட முடியாது.


அதற்குப் பதிலாக வாக்காளர்களாகப் பதிந்த அனைவருமேஒவ்வொரு தேர்தலிலும்வாக்களிப்பது கட்டாயம் என்றாக்கவேண்டும். அதன் மூலமே குறைந்தபட்சம் போட்டியிடும் வேட்பாளர்கள்மத்தியிலிருந்து நேர்மையான தெரிவையாவது மேற்கொள்ள முடியும். சரியான நபர் ஒருவரை அரச தலைவராக்க முடியும்.

அத்தோடு மக்களாட்சியில் மக்களின் அரசியல் உரிமைகளில்தலையாயதுவாக்களிப்பு.அதனைப்புறக்கணித்துத் தமது மக்களாட்சிக் கடமையைச் சரிவர நிறைவேற்றாதவர்களைத் தண்டித்து அவர்களும் வாக்களிப்பது கட்டாயம் என்கிற நிலையை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் கொஞ்சமாவது உருப்படியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.

எனவே நோட்டாவை அறிமுகப்படுத்துவதற்குப்பதில், 18 வயதிற்கு அதிகமான அனைத்து ஆண்கள், பெண்களும் வாக்களிப்பது கட்டாயம் என்கிற பொது நிபந்தனையை உருவாக்க வேண்டும். அதற்கான பொது நலன் சார்வழக்கொன்றைத்தாக்கல் செய்ய வேண்டும். அதன் மூலமே [illegible] சத தத்துவத்தை சீரியதாக முன்னெடுக்க முடியும்.

# தீராப்பகை தணியுமா?

ஆர்.பிரகாஸ்





வடகொரியா - அமெரிக்கா இடையிலான அணுவாயுதப் பரவல் சம்பந்தமான நான்காம் கட்டப் பேச்சு இன்று இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சிலாவது ஒரு முடிவு கிட்டுமா என்பதுதான் இன்று ஒட்டுமொத்த பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இவ்வாறிருக்க வடகொரியா - அமெரிக்கா இடையிலான அண்மைக்கால நகர்வுகள் மற்றும் நிகழ்வுகளை சற்று அலசுகிறது இந்தக் கட்டுரை.

### பகைமை நிலை


கொரியத் தீபகற்பத்தில் அமைந்துள்ள அணுவாயுதப் பலம்மிக்க நாடுதான் வடகொரியா. கொரியா, வடக்கு, தெற்கு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டதில் இருந்து அவ்வப்போது ஆயுத, அணுவாயுத, ஏவுகணைச் சோதனைகளை நடத்திவந்தது வடகொரியா. பன்னாட்டுச் சட்டதிட்டங்களையும், ஐக்கிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளையும் மீறியதாக இந்தச் சோதனைகள் அமைந்தன. இதனால் ஐக்கிய நாடுகள் சபை வடகொரியாவுக்குப் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது மட்டுமல்லாது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் தம்மால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குத் தனித்தனியாகவும் பல்வேறு தடைகளை விதித்தன. இதையடுத்து வடகொரியாவின் பொருளாதாரம் தளம்பல் நிலையை எதிர்கொண்டது. குறிப்பாக வடகொரியாவின் கடலுணவு ஏற்றுமதி, நிலக்கரி ஏற்றுமதி, தாது ஏற்றுமதி என்பவை இடம்பெறவிடாமல் தடுப்பதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டது. வெற்றியும் கண்டது. இதனால் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது நேரடி முறுகல் நிலவியதுடன் வடகொரியாவின் பொருளாதாம் பெரிளயவில் அதுவும் மிகப்பெரியளவில் அடிவாங்கியது.

### விட்டுக்கொடுக்காத வடகொரியா

பன்னாட்டு அழுத்தங்கள் மற்றும் பொருளாதாரத் தடைகள் [illegible] ஒருபுறம் இருந்தபோதிலும் வடகொரியா மறுபுறத்தில் தனது ஏவுகணைச் சோதனைகளை தொடரவே செய்தது. ஒரு பொருளாதாரத் தடைக்கு ஒரு ஏவுகணை என்ற ரீதியில் வடகொரியா ஏவிக்கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. இந்த அதீத ஏவுகணைச் சோதனைகளால் ஜப்பான் வடகொரியாவுடன் முரண்பட்டுக்கொண்டது. நேரடி மோதல் ஏற்படும் அளவுக்கு இந்த முறுகல் இருந்தது. தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஓரணியில் இணைய இந்த இணைவு வடகொரியா தனக்கு நட்பு நாடுகளைத் தேடிக்கொள்ளவும் வழியமைத்துக் கொடுத்தது. குறிப்பாக சீனா மற்றும் ஈரான் என்பன வடகொரியாவுக்கு நேரடி ஆதரவளித்தன. ரஷ்யா திரைமறைவில் செயற்பட்டது. இந்த இணைவுகளும் அணிச் சேர்க்கைகளும் இன்னொரு உலகப்போரைநோக்கி கொண்ட செல்லப்போகிறதோ என்ற அச்சம் பன்னாட்டுச் சமூகத்திடையே எழாமலில்லை.

### திருப்புமுனையான ஒலிம்பிக்

இந்த நிலையில் கடந்த வருடம் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் தென்கொரியாவுடன் இணைந்து களமிறங்க தீர்மானித்தது வடகொரியா. இந்த ஒலிம்பிக் தொடரே ஓர் உலகப்போரைத் தவிர்த்தது என்றால் அது மிகையொன்றும் இல்லை. வடகொரியா அமைதியை நோக்கி தனது முதலாவது அடியை எடுத்து வைத்ததை அடுத்து பெரும் பாய்ச்சலொன்றை மேற்கொண்டது தென்கொரியா. வடகொரியா - தென்கொரியா இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலான உறவு புதுப்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்டார். இந்தப் பேச்சுக்களை அடுத்து இரு நாடுகளின் எல்லைக் கிராமமான பான்முன்ஜியோமில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதையடுத்து இருநாடுகளின் எல்லைப் பிரிப்பால் பிரிந்த உறவுகள் சேர்க்கப்பட்டன, போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டன, எச்சரிக்கை அலாரங்கள் நீக்கப்பட்டன, அத்துமீறல்கள் நிறுத்தப்பட்டன ஆகமொத்தத்தில் பகைமை பறந்தோடி நட்புப் பாராட்ட ஆரம்பித்தனர் கொரியர்கள்.

### வடகொரிய - அமெரிக்க பேச்சு

இதையடுத்து வடகொரியா அமெரிக்காவுடன் பேச்சு நடத்த விரும்பியது. தென்கொரியா மூன்றாம் தரப்பாக திரைமறைவில் காய்களை நகர்த்தியது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் முதல்முதலாகச் சந்தித்தனர். இந்



தச் சந்திப்பின்போது பரஸ்பரம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அணுவாயுத சோதனைகள் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும், கையிருப்பில் உள்ள அணுவாயுதங்களை அழிக்க வேண்டும், கொரியத் தீபகற்பத்தில் அச்சுறுத்தலான போக்கைக் கடைப்பிடிக்கக்கூடாது, எதிர்காலத்தில் அணுவாயுத சோதனையில் ஈடுபடமாட்டோம் என்று வாக்குறுதி வழங்க வேண்டும், அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முதல்படியாக அணுவாயுதத் தளங்களை அழிக்க வேண்டும் என்பன வடகொரியாவிடம் அமெரிக்கா முன்வைத்த கோரிக்கைகளாக அமைந்தன.

தென்கொரியாவுடன் இணைந்து கொரியத் தீபகற்பத்தில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள், போர்ப் பயிற்சிகள் என்பவற்றை நிறுத்த வேண்டும், வடகொரியாவை அச்சுறுத்தும் போக்கைக் கைவிட வேண்டும், வடகொரியா இராணுவ அதிகாரிகள் மீது முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள், வடகொரியாவின் மீது முன்வைத்துள்ள பொருளாதாரத் தடைகள் என்பவற்றை நீக்க வேண்டும் என்பன அமெரிக்காவிடம் வடகொரியா முன்வைத்த கோரிக்கைகளாக அமைந்தன.

### நடைமுறைப்படுத்துவதில் பின்னடிப்பு

இவ்வாறு பரஸ்பரம் கோரிக்கைகள் நல்லெண்ண அடிப்படையில் முன்வைக்கப்பட்டபோதிலும் வடகொரியாவோ அல்லது அமெரிக்காவோ இதயசுத்தியுடன் அவற்றை நிறைவேற்ற முன்வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் 'நீ முதலில் சொன்னதைச் செய், பின்னர் நான் செய்கின்றேன்' என்ற இழுத்தடிப்பு இரு தரப்பிடமும் நீண்டு சென்றது, செல்கின்றது. கடைசியில், அமெரிக்கா குறைந்தபட்சம் சில பொருளாதாரத் தடைகளை நீக்கினால் மட்டுமே அணுவாயுத அழிப்புத் தொடர்பில் சிந்திக்கலாம் என்று உறுதியாக அறிவித்துவிட்டது வடகொரியா. சீனா திரைமறைவில் கொடுத்த ஆதரவும் இதற்கு முக்கிய காரணம். இதனால் நீண்ட இழுபறிகள் மற்றும் பிடுங்குப்பாடுகளுக்குப் பின்னர் சிங்கப்பூரில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு தோல்வி என்று அறிவிக்கப்பட்டது.

### வியட்நாமில் இரண்டாவது சந்திப்பு

இதையடுத்து வடகொரியா மேலும் பல ஏவுகணைகளைச் செலுத்தியது. வழக்கம்போல் பதற்றம் அதிகரித்தது. வழக்கம்போல் பொருளாதாரத் தடைகளும் குவிந்தன. இதையடுத்து மற்றொரு பேச்சுக்கு விரும்பம் வெளியிட்டது அமெரிக்கா. வடகொரியாவும் இதை ஏற்றுக்கொண்டது. இந்தப் பின்னணியில் ட்ரம்ப் கிம் மீண்டும் சந்தித்துக்கொண்டனர். இம்முறை சந்திப்பு இடம்பெற்றது வியட்நாமில். வியட்நாமை சந்திப்பு நடக்கும் இடமாகத் தெரிவுசெய்தது அமெரிக்காவே. இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவால் சல்லடை சல்லடையான வியட்நாம் பின்னர் அமெரிக்காவிடம் தஞ்சமடைந்தது. இதை வடகொரியாவுக்கு மறைமுகமாக உணர்த்தி ஓர் அச்சத்தை அந்த நாட்டிடம் கொண்டுவருவதற்கு வல்லரசு எடுத்த நகர்வே இது என்கின்றனர் வல்லுநர்கள். இந்தச் சந்திப்பிலும் அதே கோரிக்கைகள், அதே வலியுறுதல்கள்... பின்னர் அதே பின்னடைவுகள், அதே இழுத்தடிப்புக்கள். முடிவு அதே தோல்வி. தொடர்ச்சியாக மீண்டும் ஏவுகணைகள், மீண்டும் பொருளாதாரத் தடைகள்.

### வரவாற்றின் திருப்பமான சந்திப்பு

இத்துடன் வடகொரியா - அமெரிக்கா உறவு முறிந்துவிட்டது, முடிந்து விட்டது என்று பலரும் கருதினார்கள். ஆனால் என்றுமே இல்லாத வகையில் மிகப் பெரும் நகர்வொன்றை எடுத்துவைத்தார் ட்ரம்ப். அதாவது வடகொரியாவுக்குச் சென்று வடகொரிய அதிபரைச் சந்தித்தார்.

ஆம், வடகொரிய - தென்கொரிய எல்லைக் கிராமத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஆனால் இம்மியளவும் முன்னேற்றமில்லை. இந்தச் சந்திப்பு முறுகல் நிலையை மேலும் பன்மடங்கு உருவாக்கி விட்டது. சந்திப்புத் தோல்வி என்று குறித்த தினத்திலேயே அறிவித்தார் ட்ரம்ப். அத்துடன் வடகொரிய அதிபருடன் இணைந்து மேற்கொள்ளவிருந்த செய்தியாளர் சந்திப்பையும் கைவிட்டார். இதையடுத்து வடகொரியாவை மேலும் வலுகாகக் கண்காணிக்க ஆரம்பித்தது அமெரிக்கா.

### இன்று என்ன நடக்குமோ?

இதையடுத்து இன்னுமொரு சந்திப்புச் சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டுக்கு இரு தரப்பும் வந்தது. ஆனால் மற்றொரு சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது. கிம் ட்ரம்ப் அல்லாமல் இரண்டாம் தரப்புப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்கள் கிம் - ட்ரம்ப் இடையிலான சந்திப்புக் குறித்துக் கலந்துரையாட வாய்ப்புக்கள் மிகவும் அதிகம். இன்று அமெரிக்காவுடனான சந்திப்பு இடம்பெறும் நிலையில், நேற்று முன்தினமும் இரண்டு ஏவுகணைகளைச் சோதித்து அவற்றை ஜப்பானின் கடல் பரப்பிலும், தென்கொரியக் கடற்பரப்பிலும் விழவைத்துவிட்டுதான் சந்திப்புக்குச் செல்கின்றது வடகொரியா.

இதன்மூலம், ஏவுகணைகள் என்பவை எம்முடன் இரண்டறக் கலந்துவிட்டவை. பொருளாதாரத் தடைகளை நீக்கினால் மட்டுமே அவற்றைக் கைவிட முடியும் என்ற செய்தியை அமெரிக்காவுக்கும் ஐ.நாவுக்கும் உலக நாடுகளுக்கும் உரத்துச் சொல்லியுள்ளது வடகொரியா. பார்கலாம் இன்னும் அதே தோல்விதானா அல்லது அதியசம் நிகழுமா என்று.



## ஆசிரியருக்கான கடிதம்

# யாழ்ப்பாணத்தில் தெய்வப்படங்கள் படும்பாடு

எமது வீட்டில் உள்ள சுவாமி அறையில் வைத்து ஒவ்வொரு நாளும் காலையில் சாம்பிராணி காட்டிப் பூமாலை போட்டு வழிபட்ட தெய்வப்படங்களை தெரு ஓரமாகக் கொண்டு வந்து போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடுகின்ற யாழ்ப்பாண வாசிகளை என்னவென்று சொல்வது?

இது எந்தவிதத்தில் நியாயமான செயல்? சீ வெட்கக்கேடு. சைவசமயம் என்று சொல்லிக் கொண்டு சைவர்கள் செய்கின்ற காரியமா இது?

இப்படிச் செய்கின்ற நாம் உண்மையில் மனிதர்களா? அல்லது மனித உருவில் வாழும் மிருகங்களா? இவர்களை எந்த வகையில் சேர்ப்பது? இது ஒருபுறமிருக்க தெய்வப்படங்களைப் போட்டு விளம்பர நோட்டீஸ் அச்சிட்டு வெளியிடும் வர்த்தகர்களை என்னவென்பது? அதை வாங்கிப் பார்த்துவிட்டு வீதியில் வீசி அறிந்துவிட்டுப் போகும் எமது மக்களை எப்படித் திருத்துவது? யாழ்ப்பாண மக்கள் திருந்த மாட்டார்களா?

*- இராசையா் சிறீதரன்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அதைக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எல்' வலய மக்களின் காணிகளை மக்களிடமே வழங்க நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் கலந்துரையாடலில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 'எல்' வலயத்திலிருந்து மக்களுக்குக் கொடுக்கப்படாத பொதுமக்களின் காணிகளை மீண்டும் அரசிதழ் மீளறிவித்தல் மூலமாக மக்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் எல் வலயத்தின் கீழ் உள்ள பொதுமக்களின் காணிகளின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

1984க்கு முன்னர் இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்தனர். அந்தப் பகுதியில் மகாவலி 'எல்' வலயம் ஏற்படுத்தப்பட்டு பின்னர் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. 2012 ஆம் ஆண்டு மக்கள் தங்கள் காணிகளுக்குச் செல்லும்போது அந்தக் காணிகளைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. அந்தக் காணிகளில் சில, சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன என்றும் அந்தப் பகுதி மக்கள் கூட்டத்தில் முறையிட்டனர்.

இதுதொடர்பில் ஆளுநர் தொடர்புடைய அதிகாரிகளுடன் சிவந்தாமரைக்குளம் பகுதிக்குச் சென்று அந்தப் பகுதி நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

பொதுமக்களின் காணிகள் மகாவலி 'எல்' வலயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு சில காணிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அவற்றுக்குப் பதிலாக மாற்றுக்காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களின் கோரிக்கை ஆராயப்பட்டது.

இதேவேளை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 'எல்' வலயத்திலிருந்தும் மக்களுக்குக் கொடுக்கப்படாத பொதுமக்களின் காணிகளை மீண்டும் அரசிதழ் மீளறி வித்தலின் மூலம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மகாவலி அதிகார சபையின் அதிகாரிகளுடன் இணைந்து கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலர் ஊடாக விரைவில் நடைமுறைப்படுத்துமாறும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மகாவலி அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்வதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (த-7)

## கல் வீச்சுக்கு இலக்காகி இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஒக். 5

வீதியால் சென்ற வாகனம் மீது இனந்தெரியாதோர் கற்களை வீசியதில் வாகனத்தில் பயணித்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி தனன்களப்பு வீதியில் கடந்த முதலாம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

வீதிசீரமைக்கும் பணியை மேற்கொண்டுவிட்டு வீடு திரும்பிய வேளையில் வாகனத்தின் மீது கற்களை வீசித் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீசிய பெரிய கல் தலையைத் தாக்கியதில் காயமடைந்த புத்தூர் வாதரவத்தை விராவாணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

## வாணி விழாவும் ஆசிரியர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வாணிவிழாவும், ஆசிரியர் தின நிகழ்வும் நாளைமறுதினம் திங்கட்கிழமை கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 11மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-63)

## ஞானசாரருக்கு எதிராக யாழில் இன்று ஆர்ப்பாட்டம்

கொடிகாமம், ஒக்.5

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்றக் கட்டளையை மீறி பிக்குவின் உடலைத் தகனம் செய்வித்து, அடாவடியில் ஈடுபட்ட ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஒரணியாய் அணிதிரண்டு உறுதியுடன் கரங்கோர்க்குமாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது. (க-159)



யாழ்ப்பாணம் நல்லூர் சீரடி சாய் நாதரின் திருமஞ்ச வெள்ளோட்ட விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (க)

## வீதி விபத்தில் வயோதிபர் இருவர் காயம்

கொடிகாமம், ஒக். 5

உந்துருளியும் ஈருருளியும் மோதிக்கொண்டதில் இரு வயோதிபர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது

மீசாலைப் பகுதியிலிருந்து ஈருருளியில் வந்த வயோதிபர் மருத்துவமனைக்கு முன்பாகஉள்ள சாப்பாட்டுக் கடைக்குச் செல்வதற்காக திரும்பிய வேளையில் எதிரே வந்த உந்துருளி மோதியதில் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஈருருளியில் பயணித்த வயோதிபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-159)

## இம்முறை கூடுதலான பனை நாற்றுக்கள் நடுகை செய்ய திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.5

பனை அபிவிருத்திச் சபையின் வடமராட்சி கிழக்கு மாமுனையில் உள்ள பனம் தோட்டத்தில் இம்முறை கூடுதலான பனை நாற்றுக்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் வருடா வருடம் பனை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் இம்முறை சுமார் பத்தாயிரம் வரையிலான பனம் விதைகள் குறித்த தோட்டத்தில் நடுகை செய்யப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பனம் விதைகள் மூலம் கிடைக்கும் நாற்றுக்கள் யாவும் பனம் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. (ஐ-17)

## வெடிமருந்துப்பொதிகள் கடற்படையினரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

குருநகரில் வெடி மருந்துப் பொதிகள் சிலவற்றைக் கடற்படையினர் நேற்று முன்தினம் மீட்டனர்.

வடக்குக் கடற்படையினர் குருநகரில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கொய்யாத் தோட்டம் கடற்கரைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான 4 பொதிகளை இனம் கண்டனர். அந்தப் பொதிகளில் 1 கிலோ மற்றும் 30 கிராம் வெடி மருந்துகள் காணப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

வெடிமருந்துகளை மீனவர்கள் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்த எடுத்துச் சென்று அவ்விடத்தில்





கைவிட்டிருக்காலம் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று கடற்படையினரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-7,106)

## உலக நல்லொழுக்க தின கொடிவார நிகழ்வுகள்

உலக நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் கொடி வார நிகழ்வுகள்நடைபெறவுள்ளன.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரியில் ஆரம்பமான நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

"மது, புகை, போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம்" என்ற தொனிப் பொருளில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஐ-422)

## பற்றிக்ஸ் கல்லூரியில் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவனான சிற்றம்பலத்தின் நிதியத்தினூடாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை சிற்றம்பலத்தின் பேரனான சஞ்சீவ் திறந்து வைத்தார்.

கல்லூரியின் அதிபர் அருட்தந்தை திருமகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய யாழ். ஆயருமான யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை, யாழ். மாநகர முதல்வர் இமானுவேல்ஆர்னோல்ட், மருத்துவர் ராஜேந்திரா உட்பட கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அருட்தந்தைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமற்ற சில பெற்றோரால் பாழாவது மாணவர் கல்வியே!

## அதிபர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து அதிபர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 5

கல்விச் சூழல் மிகவும் கசப்பானதாக மாறிவருகிறது. பிள்ளைகள் மீதான அக்கறையின்பால் அதிபர்கள் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் கட்டுப்பாடு சார் எச்சரிக்கைகள், நடவடிக்கைகளுக்கு ஒழுக்கமற்ற சில பெற்றோர் அதிபர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவமானப்படுத்தி திருப்தியடைகின்றனர். இது மாணவர்களையே பாதிக்கும் என்பதைப் பெற்றோர் புரிந்துகொள்கிறார்களில்லை.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுபற்றிய கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சில வருடங்களாகப் பாடசாலை அதிபர்கள் நேரடியாகத் தாக்கப்பட்டமை கிளிநொச்சியில் நிகழ்ந்துள்ளது. பரந்தன் இ.ம.வி.அதிபர் தாக்கப்பட்டமை, கோணாவில் பாடசாலை சொத்துக்கள் தீவைக்கப்பட்டமை. இதன் தொடர்ச்சியாக 26.9.2019 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் ஒரு மாணவனின் தாயாரால் ஏனைய பெற்றோர் முன்னிலையில் தாக்கப்பட்டமை என்பன போன்றன நிகழ்கின்றன.

மாணவர்கள் எமக்கு எதிரிகளல்லர். அவர்களுடைய பெற்றோரும் எதிரிகளல்லர் என்பதைப் பெற்றோரும் மாணவர்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தப் பகுதியின் கல்விசார் பெற்றோர் சிலரால் இன்னும் இது புரிந்து கொள்ளப்படவில்லையா? என்பதே இங்கு எமது சந்தேகம்.

இது முழுக்கல்விச் சூழலையும் மனங்களையும் சிதைக்கும் பொறுப்பற்ற வன்முறை. இதனைச் சாதாரண பொதுச் சமூகம் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருப்பது கவலை தருகிறது.

### நிறுவனங்கள், அமைப்புக்கள் கண்டிக்கவேண்டும்

சமூகநிறுவனங்கள் அமைப்புக்கள் இதனைக் கண்டிக்க வேண்டும். இதற்கு எதிரான எதிர்கால எமது நடவடிக்கைகளுக்கு அமைப்புக்களும், தனிநபர்களும் புரிதலோடு எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பெற்றோர்கள் சிலரின் காட்டுமிராண்டித்தனங்களை மிக விசனத்தோடு சங்கம் கண்டிக்கின்றது.

அதிபர்கள் பாடசாலைகளில் தனிமனிதர்களாகவே பெரிய சமூகம் ஒன்றுக்காகப் பணிபுரிகின்றனர் என்பதைச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான சேவையை மனிதாபிமானத்தோடு மனங்கொள்ள வேண்டும். அதிபரின் செயற்பாடுகள் அதிருப்தியளிப்பின் அதனைப் பரஸ்பர புரிந்துணர்வோடு பேசி முடிவுறுத்துவதோ அல்லது வலயக் கல்விப் பணிமனையின் கவனத்துக்குக் கொண்டு வந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதே முறை.

அது அல்லாமல் உடலியல் தாக்குதல்களை உளவியல் நெருக்கடிகளைப் பெற்றோர் மேற்கொள்ளத் தொடங்கின் நாம் கல்வியில் ஆத்மார்த்த பணிகளை முன்னெடுக்க மாட்டோம் என்பதைச் சகலருக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்ளுகிறோம். என்றுள்ளது. (து)



## தென்மராட்சி பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி,ஒக்.5

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் சாவகச்சேரி சிவன்கோவிலடியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

"வயதுச் சமத்துவத்துக்கான பயணம் மற்றும் பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு" என்னும் தொனிப்பொருளில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதேச சிறுவர் கழகங்களின் கலை நிகழ்வுகளும், முதியோர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச சமூகசேவைகள் அலகால் நடாத்தப்பட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும், பிரதேச சமுர்த்தி பிரிவினரால் சிறுவர் கழகங்களிடையே நடாத்தப்பட்ட கலைஞர் இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத் திட்டமிடல் அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ல. லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சிறுவர் மேம்பாட்டு அலுவலர் கந்தசாமி மனோகரன், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.யேரின்பநாதன், தென்மராட்சி முதியோர் பேரவைத் தலைவர் இராமு கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9,131)





யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் முன்னணி இயக்குநர்களான பாரதிராஜா மற்றும் அமீர் ஆகியோர், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில்நேற்றுமுன்தினம்சந்தித்தனர். இதன் போது ஆளுநர் புத்தர் சிலை மற்றும் திருக்குறள் தபால் தலை உள்ளிட்ட நினைவு பொருள்களை அவர்களுக்கு வழங்கினார். (க-7)

## மாற்றுத்திறனாளிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி,ஒக்.5

பன்னாட்டு மாற்று திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவை கள் அலகால், பிரதேசத்தில்உள்ளமாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் பத்தாம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி டிறிபேக்கல்லூரிமைதானத்தில்போட்டிகள்நடைபெறும்.

நடமாட முடியாதவர்களுக்கு முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி, விழிப்புலன் அற்றோருக்குபலூன் ஊதிஉடைத்தல், முழங்காலுக்கு கீழ் செயற்கைகால்பொருத்தியுள்ளவர்கள், முழங்காலுக்குமேல்செயற்கை கால்பொருத்தியுள்ளவர்கள் ஆகியோருக்கு வேகநடைப் போட்டி, காதுகேளாதவாய்பேசமுடியாதவர்களுக்கு 100மீற்றர் ஓட்டப்போட்டி, உளநலம்பாதிக்கப்பட்ட மந்த புத்தியுள்ளவர்களுக்கு போத்தலில் நீர் நிரப்புதல், முழங்காலுக்கு கீழ் துண்டிக்கப் பட்ட வர்களுக்கு 100 மீற்றர் ஓட்டப் போட்டி, தோள்மூட்டின் கீழ் ஒரு கை துண்டிக்கப்பட்டவர்கள, தோள்மூட்டின் கீழ் இருகைகள் துண்டிக்க பட்டவர்கள் ஆகியோருக்கு வேகநடைப் போட்டி என்பன நடாத்தப்படவுள்ளன.

பிரதேசமாற்றுத். திறனாளிகள் போட்டிகளும்பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## சூடுபிடித்துள்ளது நாவற்பழ விற்பனை

யாழ்ப்பாணக் குடா நாட்டில் தற்போது நாவற்பழங்கள் பரவலாக விற்பனைசெய்யப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கில் அம்பன், குடத்தனை, நாகர்கோவில் போன்ற பகுதிகளிலும் தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து அதிகளவாக நாவற்பழங்கள் விற்பனைக்காக எடுத்து வரப்படுகின்றன.

ஒரு சுண்டு நாவற்பழம் 100 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஜ-173)



பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் தினக் கொண்டாட்டம் யாழ்ப்பாண மாநகர பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், மாநகர ஆணையாளர், பொறியியலாளர், பொது நூலக முதன்மை நூலகர், நூலக அலுவலர்கள், மாநகர அலுவலர்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர். (க)



பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு முல்லைத்தீவு குமுழமுனை சத்தியன் முன்பள்ளியில் அண்மையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைத்துறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக சிவம் அறக்கட்டளை பணிப்பாளர் வர்மன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கான நிதி அனுசரணையை பிரித்தானி[illegible] யாவில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலபன வழங்கி வைத்தார். (ஜ-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் அதிக காணிகளை கையகப்படுத்திய திணைக்களம்

யாழ்ப்பாணம், ஒக். 5

2 ஆயித்து 2 சதுரக்கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 350 சதுரக் கிலோ மீற்றர் நிலம் அந்த மாவட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டில் இல்லை எனக் கண்டறியப் பட்டுள்ளது.

படையினர் வசம் உள்ள நிலங்களை விட மேலதிகமாக நில அபகரிப்பில் ஈடுபடும் 4 திணைக்களங்களில் ஒன்றான வனஜீவராசிகள் திணைக்களத்தின் வசம் அதிகமான நிலம் மன்னார் மாவட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் நிலங்களில் மிக அதிகமானவை 2009 ஆம் ஆண்டு இறுதிப்போரின் பின்னரே அரச இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மட்டும் வன உயிரினங்கள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் அடம்பன் பகுதியில் உள்ள தேசிய பூங்காவின் பெயரில் 18 ஆயிரத்து 990 கெக்ரேயர் நிலம் உள்ளது. இந்த நிலத்துக்காக 2015.06.22 அன்று அரச இதழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மடுவீதியில் உள்ள தேசிய பூங்காவுக்கென 63 ஆயிரத்து 67 கெக்ரேயரும், 2015.06.15 விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கம் பிரதேசமாக 29 ஆயிரத்து 180 கெக்ரேயர் நிலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2016.03.01 அன்று அரச இதழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வங்காலை சரணாலயத்துக்காக 4 ஆயிரத்து 838.95 கெக்ரேயர் நிலம் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அரச இதழ் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, கட்டுக்கரைக் குளத்தின் அருகே ஜோதவாவி சரணாலயம் என்னும் பெயரில் 10 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரச இதழ் 1954 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 97 ஆயிரத்து 407 ஏக்கர் நிலம் வன உயிரினங்கள் காப்புத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளது.

தற்போது மடு தேசிய பூங்காவுக்காக 2015 ஆம் ஆண்டில் 63 ஆயிரத்து 67 கெக்ரேயர் நிலம் அரச இதழ் வெளியிடப்பட்ட நிலையில், உண்மையில் 29 ஆயிரம் கெக்ரேயர் பிரதேசமே 1938 ஆம் ஆண்டு முதல் குறித்த திணைக்களத்தால் ஆளுகை செய்யப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் மன்னார் மாவட்டம் முழுமையாக 2002.07 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட மாவட்டம். அதன் அடிப்படையில் 2 லட்சத்து 206.74 கெக்ரேயர் அல்லது 4 லட்சத்து 94 ஆயிரத்து 767.25 ஏக்கர் நிலம் உள்ள நிலையில், 4 லட்சத்து ஆயிரத்து 407 ஏக்கர் நிலம் திணைக்களங்களின் பிடியில் உள்ளது.

எஞ்சிய 93 ஆயிரத்து 360 ஏக்கர் நிலம் மட்டுமே மக்களின் வாழ்விடம், வாழ்வாதாரம் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளுக்காக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (க-105)

## யாழ்ப்பாணம் வருகை தரும் மைத்திரி, ரணில் குழுவினர்

*பலாலி வானூர்தி நிலைய திறப்பு விழாவுக்கு*

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத் திறப்பு விழாவுக்காக எதிர்வரும் 17 ஆம் திகதி அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இந்த நிகழ்வில் அழைக்கவேண்டிய அதிதிகளின் விபரங்களும் மாவட்டச் செயலகத்திடம் கோரப்பட்டுள்ளன.

பலாலி வானூர்தி நிலையம் முதல்கட்டமாகப் பிராந்திய விமான நிலையமாக மாற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து பன்னாட்டு வானூர்தி நிலையமாக மாற்றும் நோக்கில் துரித அபிவிருத்தி இடம் பெற்ற வருகிறது.

குறித்த வானூர்தி நிலையம் எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு பலாலி வானூர்தி நிலையத்தை யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்திநிலையம் எனப் பெயர் மாற்றுவதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டது.

இந்த நிலையில் முதற்கட்டப் பணிகள் நிறைவுறுத்தப்பட்டு, 17 ஆம் திகதி இந்தியாவுக்கான வானூர்தி சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், ஆரம்ப நிகழ்வுக்காக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனா மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகள், சிவில் வானூர்தி போக்குவரத்து அதிகார சபையின் உயர் அதிகாரிகளும் சமூகமளிக்கவுள்ளனர்.

இதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்க வேண்டிய பிரமுகர்களின் பெயர் விபரம் மாவட்டச் செயலகத்திடம் கோரப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. (க-105)

*நீராவியடிப்பிள்ளையார்கோவிலில்*

## பிக்குகளின் மீறல்களுக்கு நற்பணிமன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 5

முல்லைத்தீவு, நீராவியடிப்பிள்ளையார்கோவில் வளாகத்தில் பௌத்தபிக்குகள் தலைமையில் நடந்த அத்துமீறல்களையும் இந்து மக்களைப் புண்படுத்தி நடந்த சம்பவங்களையும், இலங்கை ஜனநாயகஐக்கியமக்கள் நற்பணிமன்றக் கட்சி கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதுபற்றி கட்சி அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீதிமன்றத்தை அவமதித்து நடத்திய சிங்கள பௌத்த ஆதிக்கத்தைத் தமிழ் மக்களும் தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டும். சிவபக்தன் இராவணேஸ்வரன் ஆண்ட இலங்கை மண்ணில் பிக்குகளின் அடாவடித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் எல்லா மதத்துக்கும் சம உரிமை வேண்டும். அரசியல் அமைப்பில் எந்த மதத்துக்கும் முன்னுரிமை கிடையாது. எல்லா மதத்தினருக்கும் சம உரிமையுடன் வாழ்வதற்கு இனிவரும் அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். என்றுள்ளது. (து)

## கிராம அபிவிருத்திக்கு ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு

*சிவமோகன் எம். பி. வழங்கினார்*

மன்னார், ஒக். 5

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்திக்கு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம பொது அமைப்புகளின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு நடந்த மக்கள் சந்திப்பில் இந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

அதன்படி பாடசாலை அபிவிருத்திக்காகப் 10 லட்சம் ரூபாவும், முன்பள்ளிக்கான சிறுவர் பூங்காவுக்கு 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது என்று தெரிவிக் [illegible] பட்டது. (து-213)

## தேசிய மட்டப் புத்தாக்க போட்டியில் வடமாகாணத்துக்கு 5 வெற்றிகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட புத்தாக்க போட்டியில் (சில்ப நவோதா) வடக்கு மாகாணத்துக்கு 5 வெற்றிகள் கிடைத்துள்ளன.

தேசிய அருங்கலைகள் பேரவையும், கல்வித்திணைக்களமும் இணைந்து மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தாக்க போட்டியை நடத்தி வருகிறது நவீன காலத்துக்கு ஏற்றது போல மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் வளர்ப்பதற்கு ஏதுவாக இந்த போட்டி நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டிகளில் வடக்கு மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 5 மாணவர்களின் ஆக்கங்கள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பிடித்துள்ளன.

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவன் சி. லக்சன், வவுனியா காமினி மகா வித்தியாலத்தைச் சேர்ந்த மாணவி ச. மோனிஷா, வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி நா. சதுர்சிகா ஆகியோர் முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கல்லூரி மாணவன் ம. கேதுஷன், வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் சி. சுகந்தன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஐ-7)

## பெயர்ப்பலகையிலுள்ள ஹிந்தி மொழியை நீக்கு

*சமூக ஆர்வலர்கள் கோரிக்கை*

வவுனியா, ஒக். 5

கண்டிவீதி, வவுனியாவிலுள்ள உணவகம் ஒன்றில் ஹிந்தி மொழியில் பெயரிடப்பட்டு பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை சமூக ஆர்வலர்கள் கண்டித்துள்ளனர். அந்தப் பெயர்ப்பலகையை [illegible] அகற்றுமாறும் கோருகின்றனர்.

வவுனியாவிலுள்ள அதிகளவானோர் தமிழர்களாகவுள்ள நிலையில் உணவகம் ஒன்றுக்கு ஹிந்தி மொழியில் பெயரிடப்பட்டுள்ளதை எதிர்ப்பதாகவும் இதற்கு நகரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர். இந்தவிடயம் குறித்து நகரசபை [illegible] உப தவிசாளர் சு. குமாரசாமியிடம் கேட்டபோது, இது குறித்து நகரசபையில் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (து)



[illegible] வட்டத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் கணுக்கேணி

யாழ்ப்பாணம்,ஒக்.5

முல்லைத்தீவு மாவட்டம் கணுக்கேணி கிராமத்தில் இராணுவத்தினர் அதிகளவு தண்ணீரைப் பயன்படுத்துவதால் அந்தப் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைவடைந்து வருவதாகப் பிரதேச மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

கணுக்கேணி கிராமத்தில் குழாய்க் கிணறு மூலமாக இராணுவத்தினர் அதிகளவு தண்ணீரைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அந்தப் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைவடைந்து வருகிறது என்று பிரதேச மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் இந்த விடயம் தொடர்பில் ஆராயும் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. கணுக்கேணிக் கிராமத்தில் நீர் எடுப்பதற்கு மாற்றீடாக நீர் எடுக்கக்கூடிய வேறு மூன்று இடங்களைக் கண்டறிந்து அதில் மிகப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து அதிலிருந்து நீரை எடுக்கக்கூடிய வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இதனை ஏற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்வு காண்பதாகத் தெரிவித்தனர்.

கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர், இராணுவத்தினர், பிரதேசத்தின் மக்கள், பிரதேச சபைத் தவிசாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர். (க-7)



## வாகனங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஒக்.5

முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு விவசாயக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கம் ஆகியவற்றுக்கு உழவு இயந்திரங்களும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு வாகனம் ஒன்றும் கையளிக்கப்பட்டன.

தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்றம் மறுவாழ்வளிப்பு வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் இவை வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் கடந்த புதன்கிழமை மாவட்டச் செயலகத்தில் வைத்து சங்கங்களிடம் வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

கூட்டுறவு சங்கங்களின் கோரிக்கைக்கு அமைவாக வாகனங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி3.222,70)

## கலைப்பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கோரல்

வவுனியா,ஒக்.5

பாடசாலை மாணவர்களுக்கான கலைத்துறை சார்ந்த பயிற்சி வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழர்களுடைய கலைகளோடு சார்ந்த சங்கீதம், பண்ணிசை, பரதநாட்டியம், வீணை ,வயலின் புல்லாங்குழல், மிருதங்கம், கடம் ஆகிய இசை நடனப் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வவுனியா இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்துமாமன்ற வளாகத்தில் அமைந்திருக்கும் கட்டடத்தொகுதியில் இன்று பிற்பகல் 3.02 தொடக்கம் 4.32 வரை ஆரம்ப வகுப்புக்கள் இடம்பெறும்.

ஆர்வமுள்ள மாணவர்கள் வவுனியா இந்துமாமன்றத்தில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரையான காலப்பகுதியில், அங்கு கடமையிலிருக்கும் அலுவலருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என்று வவுனியா மாவட்ட இந்து மாமன்றத்தின் தலைவர் வி. முத்துராஜா தெரிவித்தார்.

மேலதிக தகவல்களை 024.2228119, 077 0894836 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

# வீதியைக் கடக்க முற்பட்ட மாடுகளை மோதித் தள்ளியது சொகுசுப் பேருந்து

*பசுவொன்று உயிரிழப்பு*

மன்னார்,ஒக்.5



வேகமாகப் பயணித்த சொகு சுப் பேருந்து, வீதியைக்கடக்கமுற்பட்ட மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பசுவொன்று உயிரிழந்தது.

இந்தவிபத்து மன்னார் மதவாச்சி பிரான வீதி, உயிலங்குளம் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

கொழும்பில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு மன்னார் நோக்கிப் பயணித்த தனியார் சொகுசுப் பேருந்து உயிலங்குளம் பகுதியில் வீதியைக் கடக்கமுற்பட்ட மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் ஒரு மாடு உயிரிழந்தது.

பேருந்தின் சாரதி சாதுரியமாகச் செயற்பட்டதால் பெரும் விபத்து தடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கால் நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்காமல் கட்டாக்காலிகளாக அவிழ்த்து விடுவதால், இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-56,60)

## நகர சபை நிதி ஒதுக்கீட்டில் வீதிகளுக்கு மின்விளக்குகள்

வவுனியா,ஒக்.5

வவுனியா நகரப்பகுதியில் உள்ள வீதிகளுக்கு நகர சபையால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வவுனியா நகரப்பகுதியை அண்டியுள்ள பல பகுதிகளில் உள்ள வீதிகள் இரவு நேரங்களில் மின் விளக்குகளின்றி இருட்டாகக் காட்சியளித்தன. இந்நிலையில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக வவுனியா நகரசபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.



வைரவபுளியங்குளம் கதிரேசுவீதி, குருமன்காடு காளிகோவில் வீதி, தொடருந்து நிலைய வீதி, குட்செட் வீதி, மன்னார் வீதி, பண்டாரிக்குளம் குளக்கட்டு வீதி ஆகிய இடங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. (ஐ-ரி4)

# இரு வாகனங்கள் நேருக்கு நேர் விபத்து இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஒக்.5

டிப்பரும் உந்துருளியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளா கின. அதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மட்டக்களப்பு, செங்கலடி பதுளை நெடுஞ்சாலையில் முதிரையடி ஏற்றம் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

செங்கலடி அம்மன்புரம் கிராமத்தைச் சேர்ந்த மதியழகன் மனோராஜ் (வயது -26) என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடி அம்மன்புரத்திலிருந்து கார்மலையிலுள்ள தனது மாட்டுப் பட்டிக்கு உந்துருளியில் சென்ற போது கித்துள் கிராமத்திலிருந்து செங்கலடி நோக்கி வந்த டிப்பருடன் முதிரையடி ஏற்றம் பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. உந்துருளியில் பயணித்த இளைஞன் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பாக கரடியனாறுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க)

# காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு

கிளிநொச்சி,ஒக்.5



குடிமனைக்குள் புகுந்த காட்டு யானையை விரட்ட முயன்ற முதியவர், யானை தாக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரியான் 3 ஆம் யுனிற் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

குடிமனைக்குள் புகுந்த காட்டுயானை வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல் மூடைகளைச் சேதப்படுத்தியுள்ளது. அதனை அவதானித்த வீட்டின் உரிமையாளர் யானையை விரட்ட முயன்றுள்ளார். இதன் போது யானை தாக்கியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரியான் முரசுமோட்டையைச் சேர்ந்த 74 வயதுடையவரே யானை தாக்கி உயிரிழந்துள்ளார். (க-105,222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோதலில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.5
புடவை வியாபாரிகளுக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் மூவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நெல்லியடி பொதுச்சந்தையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
காத்தான்குடியைச் சேர்ந்த 24, 29 மற்றும் 26 வயதுடைய இளைஞர்களே காயமடைந்தனர். சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-173)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து ஒரு கிலோ 855 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கொண்டு செல்வதற்கு குறித்த நபர் கஞ்சாவை எடுத்து வந்துள்ளார்என்றுபொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு கிரான்பாஸ் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.
மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-222)

# அடிப்படை வசதிகள் இன்மையால் இல்லாமல் போகிறது ஒரு கிராமம்

## வவுனியா வடக்கில் இப்படியொரு நிலைமை

வவுனியா,ஒக்.5
வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதுவிளாங்குளம் கிராமத்தில் மக்கள் வாழ்வதற்கு அடிப்படை வசதிகள் இன்மையால் மக்கள் வெளியேறி அந்தக் கிராமமே இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



கனகராயன்குளம் நகர்ப்பகுதியிலிருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் விவசாயக் கிராமமான புதுவிளாங்குளம் உள்ளது. மக்கள் விவசாயச் செய்கையினூடாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்த நிலையில் போரின்போதான இடப்பெயர்வுக்குப் பின்னர் மக்கள் மீள் குடியமராத நிலையில் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.
விவசாய காலத்தில் மட்டும் யானைகள் மற்றும் வனவிலங்குகளுடன் போராடி விவசாய செய்கை மேற்கொண்டு அறுவடை முடிந்த பின்னர் குறித்த கிராமத்தில் ஆள் நடமாட்டமே இருக்காது. யானைகள் மற்றும் காட்டு விலங்குகள் மட்டுமே கிராமத்தில் நடமாடி வருகின்றன என்று கிராமவாசியொருவர் தெரிவித்தார்.
புதுவிளாங்குளம் மக்கள் போர்க்காலத்தில் கனகராயன்குளம், வவுனியா மற்றும் புலம்பெயர் தேசங்களுக்குப் புலம்பெயர்ந்தனர்.
தற்போது மீள்குடியேற்ற காலப்பகுதியில் அடிப்படை வசதிகளான போக்குவரத்து, மின்சாரம், பாடசாலை, வீதி சீரின்மையால் கிராமத்தில் மக்கள் மீள குடியமர்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.
அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் தாம் தமது பூர்விகக் கிராமத்தில் வாழ்வதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவிக்கின்றனர்.
தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டுவரும் நிலையில் தமிழ்க் கிராமமான புதுவிளாங்குளம் கிராமத்தில் மக்கள் மீண்டும் வாழ்வதற்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-110)

## வீதி சீரமைப்பு பணி அரம்பம்

கொடிகாமம், ஒக். 5
யாழ்ப்பாணம் கச்சாய் வாகையடி வீதி சீரமைப்பு பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சமூக மட்ட பிரதிநிதிகள் கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
குறித்த வீதியின் சீரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் 8.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட வுள்ளது. (ஐ-159)





தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயிலிட்டித்துறை வடக்குப் பிரிவில் உள்ள மகளிர் விவகாரக் குழுவின் குழு நிலையிலான உற்பத்திச் செயற்பாடுகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (க-9)

# உறுப்பினரின் அடாவடிகளை நிறுத்துமாறு பலருக்கு மனு

வவுனியா, ஒக். 5
வவுனியா புதிய கற்பகபுரம் கிராம வட்டாரத்திலுள்ள பிரதேச சபை உறுப்பினரின் அத்துமீறிய அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்தி தமது கிராமத்துக்கு நீதியானதீர்வைப்பெற்றுத்தருமாறு அந்தப்பகுதி மக்கள் மாவட்டச் செயலர் உட்பட 10பேருக்கு மனுக் கையளித்துள்ளனர்.
அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வவுனியா புதிய கற்பகபுரம் கிராமத்தில் உட்கட்டுமான அபிவிருத்திகள், வாழ்வாதார உதவிகள், சன சமூக நிலையம் மற்றும்விளையாட்டுக்கழகம் என்பனசெயற்படமுடியாமல்முடக்கப்பட்டுள்ளன. வீதிச்சீரமைப்பு, குடிதண்ணீர் போன்ற அத்தியாவசிய பிரச்சினைகள் எமது கிராமத்தில் காணப்படுகின்றன. கிராம அபிவிருத்திச் சங்கம் மூன்று வருடங்களாகச் செயற்படாமலிருக்கின்றது. அதனைப் புதுப்பித்துத் தருமாறு பல தடவைகள் மாவட்டச் செயலர் உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக் கப்பட்டும் அந்தக்கோரிக்கைக்கு எவரும் செவிசாய்ப்பதாக தெரியவில்லை. இதனைப்பெற்றுக்கொடுப்பதற்கு முன்னின்று செயலாற்றும் போது அங்குள்ள சிலர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். இதனால் கிராமத்திலுள்ள அமைப்புக்கள் செயலாற்ற தடை ஏற்படுத்துகின்றனர்.
புதிய கற்பகபுரம் முன்னாள் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட ஏழாம்வட்டாரஉறுப்பினரின் அடாவடித்தனமான செயற்பாடுகள் இங்கு காணப்படுகின்றன. இதனால் கிராமத்துக்கு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் இங்கு கிடைப்பதில்லை.
இந்த விடயம் குறித்து மாவட்டச் செயலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலமாக எமது பிரச்சினைகளைத் தெரிவித்திருக்கின்றோம். இன்று வரையிலும் இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்படவில்லை. எம்மக்களுக்குநீதியானதீர்வைப் பெற்றுத்தருமாறு கோருகின்றாம் - என்றுள்ளது.
மனுவின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்டச் செயலர், தலைமைச் செயலர், மாகாண தலைமை பொதுச்சேவைகள் ஆணைக்குழுச் செயலர், முதலமைச்சரின் அலுவலகம், வன்னித் தேர்தல்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பத்துப்பேருக்கு பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து குற்றஞ்சாட்டப்படும்உறுப்பினரிடம் கேட்டபோது, "குறித்தகுற்றச்சாட்டுக்கள்தவறு. அரசியல் பின்புலத்துடன் செயற்படும் சிலரின் திட்டமிட்ட சதியே இந்தக் குற்றச்சாட்டுக்கள். அவற்றை முற்றாகமறுக்கின்றேன்" - என்று தெரிவித்தார். (து)

# மதீனாநகர் சந்தியில் மீண்டும் இராணுவச் சோதனைச் சாவடி

வவுனியா,ஒக்.5
வவுனியா, பூந்தோட்டம் மதீனாநகர் சந்தியில் மீண்டும் இராணுவச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் ஒரு சில வீடுகளில் சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.
இந்த நிலையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தால் குறித்த சோதனைச் சாவடி நேற்று அமைக்கபட்டுள்ளது.
சாவடி மறுபடி அவ்வீதியால் பயணிக்கும் ஒரு சில வாகனங்கள் மறிக்கப்பட்டு பதிவு நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.
நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது குறித்த பகுதியில் இராணுவச் சோதனை சாவடி அமைக்கபட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டு வந்தன. பின்னர் அது அகற்றபட்டிருந்தது.
தற்போது குறித்த சோதனை சாவடி அவ்விடத்தில் மீண்டும் அமைக்கபட்டுள்ளமை பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. துண்டாகிப்போக ஒருபோதும் இடமளியேன்

## சிறப்பு மாநாட்டில் ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஓக்.5
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நான் இருக்கும்வரை கட்சி பிளவுபட ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச தலைவர் தேர்தல் வெற்றியுடன் நாடாளுமன்றத் தேர்தலில் பெருபான்மை உறுப்பினர்களுடன் வெற்றிகொள்வதே எமது நோக்கமாகும்

1981இல் இந்த இடத்தில் இருந்து ரணசிங்க பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராகப் பெயரிடப்பட்டார். அப்போது இந்தக் கட்டடம் இங்கு இருக்கவில்லை. பிரேமதாச அரச தலைவரான பின்னர் இந்தக் கட்டடத்தை அமைத்தார். தற்போது இந்த இடத்தில்தான் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக நாட்டு மக்கள் முன்னிலையில் பெயரிட்டிருக்கின்றோம். ஜே.ஆர் மற்றும் பிரேமதாச ஆகியோருடன் நீண்டகாலம் சேவை செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. டட்லி சேனாநாயக்கவுடன் சிறிது காலமே இணைந்து செயற்படக் கிடைத்தது. பிரேமதாசவின் காலத்தில் சிரமமான சந்தர்ப்பங்களில் நாங்கள் இணைந்து செயற்பட்டு கட்சியை மேன்படுத்திக்கொண்டு சென்றோம். ஒருபோதும் விலகி இருக்கவில்லை. துரதிஷ்டவசமாக அவர் இறந்துவிட்டார். அதன் பின்னர் விஜேதுங்க, அரச தலைவர் காமினி திஸாநாயக்கவை அரச தலைவர் வேட்பாளராக முன்னிறுத்தி நாங்கள் தேர்தலுக்கு முகம்கொடுத்தோம். எனினும், ஏற்பட்ட குண்டுவெடிப்பில் என்னைத் தவிர கட்சியின் பிரதான தலைவர்கள் அனைவரும் இல்லாமல்போனார்கள்.

நான் கட்சியின் தலைவரானபோது நான் எதிர்கொண்ட முதலாவது சவால்தான் தலைத்துவத்தை உருவாக்குவது. தலைவர் ஒருவரை நியமிப்பது கடினம் இல்லை. ஆனால் தலைமை தாங்கக்கூடியவர்களை அவசரமாக உருவாக்க முடியாது. காலம் செல்லும். அந்தக் காலப்பகுதியில் இந்தக் கட்சி இல்லாமல் போயிருந்திருக்கலாம். என்றாலும் நாங்கள் கட்சியை மேன்படுத்திக் கொண்டு சென்றோம். தற்போது புதிய தலைமைத்துவங்களை உருவாக்கி இருக்கின்றோம். அதுதான் நாங்கள் செய்த பிரதான விடயம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அதில் ஒருவர்தான் சஜித் பிரேமதாச.

நாட்டின் சனத்தொகையில் அரைவாசி பெண்கள். என்றாலும் ஒரு பெண்கூட அந்தத் தலைமைத்துவத்தில் இல்லாமல் இருப்பது கவலைக்குரிய விடயம். அதனால் அந்தக் குறைபாட்டை இல்லாமலாக்க கட்சியின் இளம் தலைமைகள் அடுத்துவரும் 5 வருடங்களுக்குள் அதனை மேற்கொள்ள வேண்டும்.

நாங்கள் பிளவுபட்டு சென்ற போதெல்லாம் எமது கட்சி தோல்வியடைந்தது. 1955இல் பிளவுபட்டோம்; 1956இல் தோல்வியடைந்தோம். 1969இல் நாங்கள் பிளவுபட்டோம்; 1970இல் தோல்வியடைந்தோம். அதே போன்று 1991இல் பிளவுபட்டோம்; 1994இல் நாங்கள் தோல்வியுற்றோம். அதனால்



நாங்கள் பிளவுபட்டால் தோல்வியடைவோம். யாருடைய பேச்சையும் கேட்டு பிளவுபடவேண்டாம். நான் கட்சித் தலைவராக இருக்கும்வரை பிளவுபட இடமளிக்கமாட்டேன்.

17வருடங்கள் நாங்கள் ஆட்சி செய்திருக்கின்றோம். அதையும்விட அதிக காலம் எதிர்க்கட்சியில் இருந்திருக்கின்றோம். தற்போது ஆட்சியைக் கைப்பற்றி தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றிருக்கின்றோம். எமது அரசை இல்லாமாலாக்குமாறு தெரிவித்தும் நாங்கள் தவழ்ந்தேனும் அரச தலைவர் தேர்தல்வரை தற்போது வந்திருக்கின்றோம். அதனால் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் கைவிட வேண்டாம்.

இந்தப் பெரும்பான்மையற்ற அரசில் ஒவ்வொரு பந்து ஓவருக்கும் குறைந்த பட்சம் 6 ஓட்டங்களையாவது விளாசி இருக்கின்றோம். பாதைகளை அமைத்திருக்கின்றோம். சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தை மேற்கொண்டு செல்கின்றோம். 13 வயது வரை கட்டாயக் கல்வியை அனைத்துப் பிள்ளைகளுக்கும் வழங்குவோம். கடந்த அரசு இதனை இல்லாமலாக்கியது. பெற்றோல் விலை கடந்த காலத்தைவிட குறைந்துள்ளது. சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றாலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆட்சியில் நாட்டின் பொருளாதாரத்தை பாதாளத்துக்குள் கொண்டு சென்றவர்களுக்கு மீண்டும் அரசு ஒன்றை வழங்கு முடியுமா? இன்று உங்கள் வீட்டுக்கு வெள்ளை வான் வருகின்றதா? அம்புலன்ஸ் வருகின்றதா?. நல்தொரு ஆட்சியை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். கடந்த நான்கு வருடங்கள் நாங்கள் பெருமளவு சிரமப்பட்டோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியுற்றோம் ஆனால் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளோம். அதற்கான சிறந்த அடித்தளத்தைப் போட்டிருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை நாங்கள் திறக்க இருக்கின்றோம். ஒரு ரூபா கூட கடன்படவில்லை. இவ்வாறு அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் புத்தகம் வெளியிட இருக்கின்றோம்.

நாங்கள் அரசை அமைத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி இருக்கின்றோம். அதனால் இன்று யாரும் சிறைக்குச் செல்வதில்லை. எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றது.

அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று அடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையுடன் பெற்றிபெறுவதே எமது நோக்கம். அதற்காக நாங்கள் கடுமையாக உழைக்கவேண்டும். அரச தலைவரையும், அமைச்சரவையும் நாங்கள் அமைப்பதற்கு125 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ள உறுதி கொள்ளவேண்டும்- என்றார். (எ-22,31)

# பிரான்ஸ் தூதுவருடன் ஹக்கீம் பேச்சு

கொழும்பு, ஓக்.5
இலங்கைக்கும் மாலைதீவுக்குமான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் எரிக் லவெர்டுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் சந்திப்பொன்று நடந்துள்ளது.

ரவூப் ஹக்கீமுடைய இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் நீர் வழங்கல், கழிவு நீர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பிரான்ஸ் நாடு அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி குறிப்பிட்ட அந்த நாட்டு தூதுவர், நவீனமயமாக்கல் பற்றியும் நிபுணத்துவத்தை இரு நாடுகளும் பரிமாறிக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றியும் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் நீர் முகாமைத்துவம், நீரியல் தொடர்பான பாடநெறிகளின் ஊடாக பிரான்ஸ் நாட்டு மாணவர்களும் நன்மையடைவதற்கான வழிவகைகள் பற்றியும் பேசப்பட்டது.

பிரான்ஸ் நாட்டு அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் நீர் கொழும்பு, காலி உனவட்டுன, களனி பேலியகொட, யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டங்கள் குறித்தும் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் இலங்கைக்கும் மாலைதீவுக்குமான பிரான்ஸ் தூதரகத்தின் பொருளாதார ஆலோசகர் ஹேர்வே சர்னலியும் கலந்துகொண்டார். (எ)





முல்லைத்தீவு நெடுங்கேணி வெள்ளைப்பிள்ளையார் ஆலய "கற்பகா" அறநெறிப்பாடசாலை மாணவர்கள் 75 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். அட்நிறுவனத்தால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-222)

# சிறுமி கர்ப்பமானார் 62வயது நபர் கைது

யாழ்ப்பாணம், ஓக். 5
நண்பனின் மகளைக் கர்ப்பமாக்கினார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த 62 வயதுடையவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இனிப்பு வகைகளை வாங்கி கொடுத்து சிறுமியை தனது இச்சைக்கு பயன்படுத்தி வந்துள்ளார். சில நாள்களுக்கு முன்னர் சிறுமி தலைசுற்றி வாந்தி எடுத்தார். அவரைப் பெற்றோர் மருத்துவமனையில் சேர்த்தனர். பரிசோதனையின் போது சிறுமி கர்ப்பமாகவுள்ளார் என்பது தெரியவந்தது. சிறுமியிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர். சிறுமி நடந்தவற்றைக் கூறியுள்ளார். அதன்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-106)

# அரச தலைவர் தேர்தலுக்கு 450 கோடி ரூபா ஒதுக்கீடு

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக்.5
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்காக 450 கோடி ரூபாவுக்கும் அதிக நிதி ஒதுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று இராஜகிரியவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
தேர்தல் ஊக்குவிப்பு பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கான தினம் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த நடவடிக்கையில் எவரேனும் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அந்த விடயம் குறித்து அரசியல் கட்சிகள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளுக்கு தெளிவுப்படுத்தியுள்ளோம்.

இந்தக் கால கட்டத்தில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் மற்றும் மாநில விழாக்களுக்கு தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அரச தலைவர் தேர்தலுக்காக சுயாதீன குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஊடாக 23 வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இலங்கை வரலாற்றில் அதிக எண்ணிக்கையானவர்கள் கட்டுப்பணம் செலுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அரச தலைவர் தேர்தலுக்கான அஞ்சல் ஊடாக வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்கும் காலம் இன்றுடன் (நேற்றுடன்) நிறைவடைந்தது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைக் கண்காணிக்க பத்து ஆயிரம் பேர் களத்தில்

## பெப்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5

அரச தலைவர் தேர்தல் கண்காணிப்பு மற்றும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்தும் பணிகளில் சுமார் 10 ஆயிரம் பேரை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அத்தோடு தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஆசிய தேர்தல் கண்காணிப்பு குறித்த அமைப்பிலிருந்து 35 பேர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவ்வாறு பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச தலைவர் தேர்தல் நெருங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தலுக்கு முன்னர், தேர்தல் இடம்பெறும் தினத்தன்று, தேர்தலுக்குப் பின்னர் என்ற மூன்று அடிப்படைகளில் எமது கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம். அதேபோன்று நேரடி வாக்குப் பதிவின் போதும், தபால் மூல வாக்குப் பதிவின் போதும் கண்காணிப்பு இடம்பெறும். நடமாடும் கண்காணிப்பு மற்றும் நீண்டகால கண்காணிப்பு என்பவற்றுக்கும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தல் கண்காணிப்பு மற்றும் தேர்தல் முறைகேடுகளைக் கட்டுப்படுத்தும் பணிகளில் சுமார் 10 ஆயிரம் பேர் வரை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதே போன்று ஆசிய தேர்தல் கண்காணிப்பு தொடர்பான அமைப்பிலிருந்தும் 35 பேர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்த அரச தலைவர் தேர்தலைப் பொறுத்தவரை தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி தொடர்பில் வெகுவாக அவதானம் செலுத்துகின்றோம். ஏனெனில் தேர்தலுக்கு முன்னர்தான் அரச நிதி மற்றும் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன.

வாக்காளர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள், பொதுமக்களுக்குப் பொருள்களை வழங்குதல், தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமத்துவ வாய்ப்பு இல்லாதுபோதல் என் பவை தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலேயே இடம்பெறும். அவற்றைக் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளோம்.

இந்தத் தேர்தலில் சிறப்பு அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றொரு விடயமாக சமூகவலைத்தளங்கள் உள்ளன.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுடனும், குறிப்பாக முகநூல் நிறுவனத்துடனும் கலந்துரையாடி உரிய வரையறைகளைத் தீர்மானிப்போம்.

நியாயமானதும், சுயாதீனமானதுமான தேர்தலை உறுதிசெய்வதற்கு சமூகவலைத்தளங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் 10ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்க முடியும். தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் இந்தமாதம் 2ஆம் திகதி வரை 24 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (எ-22,71)

# இது அமெரிக்க தேர்தல் அல்ல!

## ஹெஹான் சேமசிங்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.5

அமெரிக்க தூதரக அதிகாரிகள் ஆறுமுகன் தொண்டமானை சந்தித்துள்ளனர். ஏன் சந்திக்கின்றனர்?. அரச தலைவர் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சந்திக்கின்றனர். இது அமெரிக்க அரச தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தல் அல்ல.

இவ்வாறு மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான ஹெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைக்கான அமெரிக்க பிரதி தூதுவர் மார்டின் டீ கெலி மற்றும் அரசியல் தலைமை அதிகாரி ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமானை சந்தித்தமை தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ)

# சவால்களை எதிர்கொண்ட கட்சி ஐ.தே.கட்சி மட்டுமே

## கபீர் ஹாசீம் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.5

ஜனநாயக ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட ஒரு கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக்கட்சி மாத்திரமே என அந்தக் கட்சியின் உதவித் தலைவர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசிய கட்சியின் 77ஆவது மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 2015ஆம் ஆண்டு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் அரசை அமைத்தோம். ஆனாலும் போதிய அதிகாரம் கிடைக்கவில்லை. எம்மால் முடிந்த சேவைகளை மக்களுக்கு செய்தோம்.

எமக்கு எதிரானவர்களினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளையெல்லாம் முறியடித்து வெற்றியடைந்தோம். ஐக்கிய தேசியக் கட்சியை போன்று ஜனநாயக ரீதியில் சவால்களை எதிர்கொண்ட கட்சியை வேறு எங்கேயும் பார்க்க முடியாது. நாங்கள் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டே செயற்பட்டு வருகின்றோம். அந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சியியைச் சேர்ந்த ஒருவரே இந்த முறை அரச தலைவரின் ஆசனத்தில் அமர்வார் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது- என்றார். (எ)

# செயலகங்களின் ஊடாக பரப்புரை செய்யத் தடை

கொழும்பு, ஒக்.5

அரச தலைவர் செயலகம், தலைமை அமைச்சர் செயலகம், எதிர்க்கட்சித் தலைவர் செயலகம் ஆகியவற்றை அரச தலைவர் வேட்பாளர்களின் பரப்புரைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

அரச தலைவர் வேட்பாளர்களுக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடுகளுக்கு இந்த மூன்று செயலகங்களையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுக்கள் வரும் 7ஆம் நாள் ஏற்றுக் கொள்வதற்கிடையில், அனைத்து வேட்பாளர்களினதும் பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார். (எ)

# மகிந்தவை விவாதத்துக்கு அழைக்கின்றார் மங்கள!

கொழும்பு, ஒக்.5

நாட்டின் நிதி நிலவரம் தொடர்பாக நேரடி விவாதத்துக்கு வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் நிதியமைச்சர் மங்கள சமரவீர. தற்போதைய அரசுக்கு எதிராகத் தொடர் குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச முன்வைத்து வருகின்றார்.

அவர் அண்மையில் நாட்டின் நிதி நிலைமையைச் சாடிக் கருத்துத் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மங்கள சமரவீர மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் அனைத்தும் பயனற்றவை. தங்களின் அதிகாரத்தையும், ஆட்சி பெருமைகளையும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே பெரும் நிதிச் செலவில் கடந்த அரசால் சில அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட அபிவிருத்திகள் ஏதும் தேசிய வருமானத்தை ஈட்டும் விதமாக அமையவில்லை.

தற்போதைய அரசுக்கு எதிராகத் தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் மகிந்த நாட்டின் நிதி நிலவரம் தொடர்பான நேரடி விவாதத்துக்கு வர தயாரா? - என்றார். (எ)

# அதிகளவு வேட்பாளர்களால் நெருக்கடி

இந்தமுறை அரச தலைவர் தேர்தலில் அதிகளவு வேட்பாளர்கள் களமிறங்குவதால் வாக்களிப்பு நிலையங்களில் இடவசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த முறை தேர்தலில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். கடந்த புதன்கிழமை வரை 20 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இலங்கை அரசியல் வரலாற்றில் அதிகளவான வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்குவது வரலாற்றில் முதல் முறையாகும். ஒவ்வொரு வேட்பாளரின் சார்பிலும் வாக்களிப்பு நிலையங்களில் இரண்டு முகவர்களை நியமிக்க முடியும். 20 வேட்பாளர்கள் போட்டியிட்டால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் 40 முகவர்களுக்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். முதலில் வருபவருக்கு முதலில் இடம் என்ற அடிப்படையிலேயே அவர்களுக்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இடவசதிப் பிரச்சினை இருந்தால் ஏனையவர்களுக்கு வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியிலேயே இடமளிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.கட்சி பிளவுபடும் என்று நினைத்தோருக்கு ஏமாற்றம்

*அகிலவிராஜ் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.5

வேட்பாளர் தெரிவின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டு அரசு வீழ்ச்சியடையும் என எதிர்பார்த்திருந்தவர்கள் தற்போது வாயடைத்துப்போயுள்ளனர். அரச தலைவர் தேர்தலுடன் பொதுத்தேர்தலையும் வெற்றி கொள்ள ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

இவ்வாறு அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலளருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி சம்மேளனம் மற்றும் அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்கும் சிறப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வேட்பாளரை தெரிவுசெய்யும்போது கட்சிக்குள் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தன. இவை அனைத்தையும் சமாளித்து கட்சியை ஒற்றுமைப்படுத்தும் தீர்வொன்றை வழங்க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடிந்துள்ளது. அதிகாரப் போராட்டங்கள் இடம்பெறும்போது பல கட்சிகள் பிளவுபட்ட வரலாறு இருக்கின்றது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் பெரும் அர்ப்பணிப்பால் அந்த நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படவில்லை. கட்சியின் ஒற்றுமையே எமக்குரிய ஒரே பலமாக இருக்கின்றது. எமது ஆதரவாளர்களும் என்ன நடக்கும் என்ற அச்சத்திலேயே இருந்தனர். தற்போது எமக்கு சிறந்த முடிவு கிடைத்திருக்கின்றது.

அரச தலைவர் வேட்பாளர் தெரிவில் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த சலசலப்பு காரணமாக எமது கட்சி பிளவுபடும். இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடும் என்றும் எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்திருந்தனர். வேட்பாளர் தெரிவில் கட்சிக்குள் ஏற்படும் பிளவு காரணமாக அரசுக்கு ஆதரவளித்துவரும் பங்காளிக் கட்சிகள் பிரிந்துவிடும் என்றும் அதன்மூலம் அரசு வீழ்ச்சியடையும் என்றும் எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்தனர். தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த சவால்கள் அனைத்தையும் வெற்றிகொண்டு வழங்கிய தீர்வு காரணமாகச் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வாயடைத்துப் போயுள்ளது- என்றார். (எ)

## அத்தியாவசிய சேவையானாலும் போராட்டம் நிறுத்தப்படமாட்டாது

*தொடருந்துத் தொழிற்சங்கங்கள் திட்டவட்டம்*

கொழும்பு, ஒக்.5

தொடருந்துச்சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பது தற்போதைய பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று தொடருந்துத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாகத் தொடருந்து இயந்திர இயக்குநர் சங்கச் செயலர் இந்திக தொடாங்கொட தெரிவித்ததாவது

எமது வேலை நிறுத்தப் போராட்டம் தடையின்றி தொடரும். தொடருந்துத் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு கருத்தில் கொள்ளவில்லை. பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் கூடி, தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றார். சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகள், சாரதிகள், கட்டுப்பாட்டாளர்களின் தொழிற்சங்கங்களின் சுமார் 15 ஆயிரம் ஊழியர்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்பதாவது நாளாகவும் தொடர்கின்றது. இந்த நிலையில் தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து சிறப்பு அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (எ)

## தொடருந்து பணியாளர் நடத்தும் போராட்டத்தால் ரூ.700 கோடி இழப்பு

*கொழும்பு, ஒக்.5*

*தொடருந்துப் பணியாளர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாகத் தொடருந்துத் திணைக்களத்துக்கு 700 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.*

தொடருந்துச்சேவையை அத்தியாசிய சேவையாக அறிவித்துள்ளதன் காரணமாகப் பணியாளர்கள் சேவைக்குத் திரும்புவர் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தொடருந்துச் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பது தற்போதைய பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று தொடருந்துத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (எ)

## ஸஹ்ரானுடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.5

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலை குண்டுதாரி மொஹமட் ஸஹ்ரானுடன் பயிற்சி பெற்றவர் என்று கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவனல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே நேற்றுமுன்தினம் இரவு பேருவளை, அம்பேபிட்டிய பிரதேசத்தில் வைத்துக் கைதாகியுள்ளார்.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் பயிற்சி பெற்றிருந்த காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் ஜெம்சிட் என்பவர் அண்மையில் கைது செய்யப்பட்டு கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அவரின் தொலைபேசி இலக்கத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் பின்னர் பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மற்றையவர் கைதாகியுள்ளார்.

சந்தேகநபர் அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற பயிற்சிகளில் தொடர்புடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும், அவர் தொடர்பாகக் கொழும்பு குற்றவியல் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## பனை, தென்னை வள அபிவிருத்திகள் பற்றி சங்கங்களின் பிரதிநிதிகள் குழு வேட்பாளர்களுடன் பேசவுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.5

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி மற்றும் போத்தல் கள்ளுக்கான உற்பத்தி வரி குறைப்பு ஆகியன தொடர்பாகச் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு விரைவில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாட தீர்மானித்துள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தலில் கள் அடைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. இந்தப் போத்தல் கள்ளுக்கான உற்பத்தி வரியை அரசு குறைக்க வேண்டும் எனப் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தன. இதுதொடர்பில் இதுவரை அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“போத்தல் கள்ளுக்கான உற்பத்தி வரி அதிகரிப்பால் சங்கங்கள் பெரும் இழப்பைசந்தித்துள்ளன. சங்கங்களின் இந்த வருமான பாதிப்பால் அங்கத்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த வரி குறைப்பு மற்றும் பனை, தென்னை வள கூட்டுறவு அமைப்புக்களின் அபிவிருத்தி தொடர்பாக ஏற்கனவே அரச தலைவர், நிதி அமைச்சர் போன்றோரையும் சந்தித்து கலந்துரையாடினோம். அதனைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவையும் அண்மையில் சந்தித்து எமது குறைகளை எடுத்துக் கூறியி ருக்கின்றோம். கடந்த வாரத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து எமது பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறுமாறு கேட்டிருந்தோம்.

அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் எமது பனை, தென்னை வள அபிவிருத்தி மற்றும் போத்தல் கள்ளுக்கான வரியை அரசு குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த கோரிக்கைகள் தொடர்பில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையா[illegible] மேற்கொள்ள[illegible] என்றார். (ஐ-17)

## பெண்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்துவார் கோத்தபாய

*பசில் ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.5

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானவுடன் பெண்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்துவார் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிலர் கூறுகின்றனர் எங்களுக்கு உள்ள கட்டில் கடன்களை இல்லாது செய்து தாருங்கள் என்று. அது என்னவென்று நான் ஆராய்ந்ததில், கடனைச் செலுத்த சற்று தாமதம். ஆனால் கடன் கொடுத்தவர்கள் வீட்டுக்கு வந்து வீட்டு அறைக்குள் நுழைந்து கடனைச் செலுத்தும் வரையில் கட்டிலில் அமர்ந்துக் கொள்வார்களாம். அதனால் தங்க மாலையை கழற்றி கொடுக்கின்றனர். பல பெண்களுக்குத் தங்க மாலை இல்லை.

வீட்டின் முதலிடம் பெண்களுக்கு என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தினார். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்துவாறு ஏதாவது விதத்தில் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக சுய வேலை வாய்ப்பை உருவாக்கினார். அன்று எமது பெண்களை லட்சுமி என்றார்கள். இன்று அப்படி இல்லை.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ச வெற்றிப் பெற்று அரச தலைவர் ஆனதன் பின்னர், நுண்நிதிக் கடன்கள் இல்லாது செய்து இந்தநாட்டு பெண்களை மீண்டும் [illegible] ஆக்கப்படுவார்கள் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாலை வேளைகளில் மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஒக்.5
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு சாத்தியம் தற்போதும் உயர்வாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் எதிர்வு கூறியுள்ளது.
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
மத்திய, சப்ரகமுவ வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.
மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.
மின்னல் தாக்கத்தாலும் பலத்த காற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.
அதேவேளை மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தெற்கு அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.
இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# ஐஸ் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.5
ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்திய நாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. 53 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடமிருந்து ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் [illegible] விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# ஆளுநர் சந்திப்பில் சம்மதம் கூறிய இராணுவம் தற்போது நாடகமாடுகிறது

## கேப்பாப்பிலவு நிலவிடுவிப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 5
கேப்பாபிலவு நிலம் தொடர்பில் இத்தனை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இறுதிக் கட்டத்திலும் அந்த மக்களை ஏமாற்றும் முயற்சியே இடம்பெறுவதாகத் தற்போது அறியக் கிடைப்பது மன வேதனையைத் தருகின்றது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்த காலம் தொடக்கம் பல போராட்டங்களையும் தற்போது 3 ஆண்டுகளாகத் தொடர் போராட்டங்களையும் நடத்தி வரும் 58 குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்களை விடுவிப்பது தொடர்பில் காலத்துக்குக் காலம் புதுக் கதைகள் கூறப்பட்டன.
இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பில் கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் சந்திப்பு இடம்பெற்றது.
இவற்றின் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கேப்பாபிலவு பகுதியில் உள்ள மக்களுக்குச் சொந்தமான தனியார் நிலம் 72 ஏக்கர் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்ற பொழுதும் அந்த இடத்தில் தமது வசம் 59. 9 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாகப் படையினரால் தெரிவிக்கப்பட்டது. குறித்த நிலத்துக்குப் பதில் நிலம் அல்லது பணத்தை பெறுவதற்கு பலர் சம்மதம் தெரிவித்தனர் என்று படையினர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் படையினருக்கு எந்தச் சம்பந்தமும் வழங்கவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.
இதனையடுத்து கேப்பாப்பிலவு நிலம் தொடர்பில் கேப்பாப்பிலவு முகாமுக்கு முன்பாக 21ஆம் திகதி உரிய மக்களுடன் உரையாடி இறுதித் தீர்வை எட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அங்கேயுள்ள நிலங்களின் உரிமையாளர்களையும் நிலத்தையும் அடையாளம் காணவேண்டும். அதன் அடிப்படையில் வரைபடம் தயார் செய்ய வேண்டும். இதற்காக நிலத்தின் உரிமையாளர்களை முகாம் பகுதிக்கு அழைத்து செல்ல வேண்டும் என்றெல்லாம் இராணுவம் கூறியது.
இதன்பிரகாரம் 58 குடும்பங்களையும் ஒரே தடவையில் அன்றி ஒரு நாளில் 3 தடவையாக அழைத்துச் செல்ல படையினர் இணக்கம் தெரிவித்தனர்.
தற்போது கேப்பாபிலவின் 72 ஏக்கரில் ஒரு ஏக்கர் நிலம்கூட விடுவிக்க முடியாது எனவும் அதற்குப் பதிலாக மாற்றுக் காணி இரட்டிப்பாகவும் செலவீனத்துக்காக இழப்பீட்டுப் பணம் தலா ஒரு மில்லியன் ரூபாவும் வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இவ்வாறு காலத்துக்குக் காலம் மாறுபட்ட கருத்தைப் படையினர் தெரிவிப்பது தொடர்பில் மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.
இறுதி முடிவையும் அவர்களே எடுக்கும் நிலமைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (த-105)

# முல்லை. நிலவிடுவிப்பு நடவடிக்கைக்கு அதிகாரிகள் ஏனோதானோ என்றுள்ளனர்

## மக்களுக்கான சேவை இதுதானா என்று சாந்தி எம்.பி. கவலை

யாழ்ப்பாணம், ஒக். 5
முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபை மற்றும் வன உயிரினங்கள் பாதுகாப்புத் திணைக்களம் என்பனவற்றின் பிடியிலுள்ள நிலங்கள் தொடர்பில் கலந்துரையாட மாகாண ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூகமளித்தாலும் அதிகாரிகள் தலைமறைவாகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.
இது தொடர்பில் சாந்தி மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் நிலத்தை மகாவலி அதிகார சபை அரசிதழ் பிரசுரித்தமை போன்று வன உயிரினங்கள் பாதுகாப்பு திணைக்களம் அரசிதழ் மூலம் தமது ஆளுகையில் காணிகளை எடுத்தமை மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பது தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் முல்லைத்தீவுக்கு வந்திருந்தார்.
குறித்த கலந்துரையாடலுக்கு இரு திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் சமூகமளிக்க வேண்டும் என்று ஆளுநர் அறிவித்திருந்த நிலையில் இரு திணைக்களங்களினதும் கீழ்மட்ட அதிகாரிகளே சமூகமளித்தனர்.
அதாவது உடனடி முடிவை மேற்கொள்ளும் அதிகாரம் அற்றவர்களே சமூகமளித்திருந்தமை வேதனை அளித்தது. இந்த வேதனையை வெளிப்பாட்டை ஆளுநரும் புரிந்துகொண்டார். இங்கே எமது மக்களின் பிரச்சினையில் திணைக்கள அதிகாரிகள் எந்த மனப்பான்மையில் உள்ளனர் என்பதனை ஆளுநரும் புரிந்து கொண்டார் எனத் தெரிவித்தார். (த-105)



அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட தமிழறிவு வினா விடைப் போட்டியில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (க-63)

# மின் வேலியில் சிக்கி இருவர் உயிரிழப்பு

மகாஓயா பகுதியில் காட்டு யானைகளை விரட்டுவதற்காக இணைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்குண்டு இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
மகஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகஸ்பிட்டி, பென்தொட்ட பகுதியில் ஆண்கள் இருவரின் சடலங்கள் உள்ளன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
சம்பவத்தில் வாகஸ்பிட்டி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். காட்டு யானைகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுவுக்கு 5 ஆயிரம் ஏக்கர் ஒதுக்க மக்கள் எதிர்ப்பு

## சைவ மக்கள் பேரவை கடிதம்

மன்னார், ஒக். 5

மடு புனித பிரதேச திட்டத்துக்கு 5ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளீர்க்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மடு பிரதேச சைவ மக்கள் பேரவையினர் அரசதலைவர், தலைமைஅமைச்சர் உட்பட எட்டு அரச நிர்வாக உயர் அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நான்கு சமயத்தினர் வாழ்கிறார்கள். கிறிஸ்தவ சமயத்தின் புனித பூமியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் மடுவில் சைவ சமய மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள். மடு புனித பூமி செயற்பாட்டுக்கு 5ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். இவற்றில் மடுத்தலத்துக்கு அருகாமையில் பூர்வீகமும் பெரும்பான்மையுமான சைவக்கிராமங்களே உள்ளன. அவை, தட்சணா மருத மடு, பாலம்பிட்டி, பண்டிவிரிச்சான், சோதிநகர் கிராமங்களே.

அத்துடன் மடுக்கோவில் இருந்த இடத்தை முன்பு தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பத்தினி அம்மன் கோவிலாக வழிபாடாற்றி வந்துள்ளார்கள் என்பதனை அறிந்து தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மடுப் பகுதியில் 2ஆயிரத்து 595 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 243 இந்துக்கள் வாழ்கின்றனர்.

இந்த எண்ணிக்கையைவிடக் குறைந்ததாக 2ஆயிரத்து142 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 285 கிறித்தவர்கள் வாழ்கின்றனர்.

ஆயிரத்து 662 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 591 முஸ்லிம்கள் வாழ்கின்றனர். 280 குடும்பங்களைச் சேர்ந்த 450 சிங்களவர்கள் வாழ்கின்றனர்.

மடுப் பகுதியில் வாழும் மக்களின் விகிதாசாரத்தையும் குறிப்பிட்டு வடக்கு மாகாண ஆளுநர், இந்து கலாசார அமைச்சர், காணி ஆணையாளர், தேர்தல்கள் ஆணையாளர், மன்னார் மாவட்டச் செயலர், மடு பிரதேச செயலர், மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் போன்றவர்களுக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மடுப் பகுதியை புனித பூமியாக மாற்றுவதற்கு 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது தொடர்பாக மடுவில் பெரும்பான்மையாக வாழும் சைவ மக்கள் கருத்துத் தெரிவித்ததாவது:

மடுக்கோவிலை புனிதப் பகுதியாக மாற்றுவதில் எமக்குப் பிரச்சினையில்லை. ஆனால் 5 ஆயிரம் ஏக்கர் பெருந்தொகை நிலப்பரப்பு ஒதுக்கப்படுவது அந்த இடத்தில் சைவ மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும்.

புனித பூமியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் கிறித்தவர்கள் குடியேற்றப்படுவார்கள். எதிர்காலத்தில் பெருகும் எமது சந்ததியினர் குடியிருக்க நிலம் இல்லாமல் அவதிப்படுவார்கள். சைவ மக்கள் திட்டமிட்டுப்புறக்கணிக்கப்படுவதுடன் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். எனவே மடுக்கோவில் பகுதியை மாத்திரம் புனித பூமியாக அறிவித்து இதன் மூலம் பெருந்தொகையான நிலம் ஒரு மதத்துக்கு வழங்குவதை நிறுத்த அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தெரிவித்தனர். (து-213)



## விவசாயிகளின் பிள்ளைகளுக்கு கார்கில்ஸ்ஸின் புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணத்திலுள்ள கார்கில்ஸ் நிறுவனத்தினர், விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வை நடத்தினர்.

நிறுவனக் கட்டடத் தொகுதியில் நேற்றுக்காலை இது நடைபெற்றது. புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 88 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், புலமைப் பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கு புலமைப் பரிசில், பாடசாலை உபகரணங்கள், கல்வி ஊக்குவிப்புத் தொகை, மடிக்கணினிகள் என்பன வழங்கப்பட்டன.

நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும், ஏனைய விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவன், கார்கில்ஸ் பூட்சிற்றி உயர் அதிகாரிகள், மற்றும் யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர். (து-7,106)

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் பகுதியில் உருக்குலைந்த ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பூட்டப்பட்ட வீடு ஒன்றிலிருந்தே சடலத்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நிதர்சன் (வயது-29 ) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார். குறித்த நபர் தொடர்பில் 5 நாள்களாக தேடி வந்த நிலையில் உறவினர்கள் வீட்டிற்கு சென்றுள்ளனர். வீடு பூட்டப்பட்டிருந்த நிலையில் துர்நாற்றம் வீசியுள்ளது. பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழப்பு தொடர்பில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-35)

## மன்னாரில் சிறப்பாகச் செயற்பட்ட விவசாயிகள் மதிப்பளிக்கப்படுவர்

### விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரிக்கை

மன்னார், ஒக். 5

மன்னார் மாவட்டத்தில் சிறப்பாக செயற்பட்ட வீட்டுத் தொட்டச் செய்கையாளர்கள், சேதனச் செய்கையாளர்கள், சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றிய விவசாயிகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர். இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட பிரதி மாகாணப் பணிப்பாளர் கே.எம்.ஏ. சுகூர் தெரிவித்தார். செய்கையாளர்களிடம் போட்டி மூலமாக ஊக்குவிப்பை ஏற்படுத்தி சூழலுக்கு இசைவான தொழிநுட்பத்தை விவசாயிகளிடையே பரவச் செய்து உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் நஞ்சற்ற உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக இவ்வாறான மதிப்பளிப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாவட்டரீதியில் நெருக்கமான முறையில் மாமரச் செய்கையில் ஈடுபடுவோர், சிறந்த நிலக்கடலை செய்கையாளர்கள், சிறந்த வீட்டுத் தொட்டச் செய்கையாளர்கள், சேதனச் செய்கையாளர்கள் என நான்கு பிரிவுகளின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளன.

பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பிரதேச விவசாய போதனாசிரியர்கள் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பங்களைப் பெற்று முழுமைப்படுத்தி கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் 'சிறந்த விவசாயிகள் தெரிவு 2019' எனக் குறிப்பிட்டு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயத் திணைக்களம், உயிலங்குளம், மன்னார்' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

அல்லது தங்களுடைய பகுதி விவசாய போதனாசிரியர் அலுவலகத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம்.

அனைத்து போட்டியாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் மதிப்பளிக்கப்பட்டவர்கள் கலந்துகொள்ள முடியாது. என்று மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு கிளிநொச்சி விவசாயிகளும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (து-213)

## வெடுக்குநாரி ஆலயத்தினர் மீது பொலிஸார் நேற்று விசாரணை

வவுனியா, ஒக்.5

முல்லைத்தீவு வெடுக்குநாரி மலையில் பக்தர்கள் ஏறுவதற்கு வசதியாக இரும்பால் அமைக்கப்பட்ட ஏணிப்படி மக்களால் அண்மையில் பொருத்தப்பட்டது. அதைப் பொருத்தியது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரைப் பொலிஸார் நேற்று விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அங்கு ஏணிப்படி பொருத்தியதையடுத்துக்கு எதிராக தொல்பொருள் திணைக்களத்தினர் ஆலய நிர்வாகம் மீது எதிராக நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்திருந்தனர். அதையடுத்து ஆலய நிர்வாகத்தினரை நேற்று மாலை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு பொலிஸார் அழைத்து பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

நெடுங்கேணி வெடுக்குநாரி மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று தெரிவித்து ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டது. பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை, நீதிமன்றால் நீக்கப்பட்டது. எனினும் ஆலய வளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் தடைவிதித்திருந்தனர். அங்கு படிக்கட்டுப் பொருத்தியதே அவர்களுக்குப் பிரச்சினையாகவுள்ளது.

இதேவேளை, படிக்கட்டுகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று கடந்த முறை நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் முறைப்பாடு செய்ய பொலிஸார் விசாரித்துள்ளனர். (து-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனஉயிரிகள் திணைக்களத்திடமிருந்து காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 5

**நா**யாறு களப்பு மற்றும் நந்திக்கடல் களப்பு பகுதியில் அரசிதழ் அறிவித்தலின் படி காணிகள் வன உயிரிகள் திணைக்களத்தின்கீழ் கொண்டுவரப்பட்டதால் மக்களின் காணிகள் பறிபோயுள்ளன. இதனை மீள் அரசிதழ் அறிவிப்பின் ஊடாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2017ஆம் ஆண்டு வனஉயிரிகள் திணைக்களத்தினர் நாயாறு மற்றும் நந்திக்கடல் பகுதியை அரசிதழ் அறிவித்தல் மூலம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனாலும் அந்தப் பிரதேசத்தினுள் மக்களுடைய தனியார் காணிகளும் வயல்காணிகளும் இருந்தமையால் தற்பொழுது வனஉயிரிகள் திணைக்களத்துக்கும் அந்தப் பகுதி மக்களுக்குமிடையில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர், வன உயிரிகள்திணைக்களத்தினுள்கொண்டுவரப்பட்டமக்களின்காணிகளின்அளவை இனங்கண்டுஅவற்றைமீளவும்அரசிதழ் அறிவித்தலின் படி பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இவ்இரண்டுகளப்புபகுதிகளிலும்மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு வனஉயிரிகள் திணைக்களம் தடைவிதித்துவருவதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தமை தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அந்தப் பகுதி மக்கள் காலாகாலமாக செய்து வந்த பாரம்பரிய மீன்பிடிமுறையைச் செய்யமுடியும் என்றும் இந்த இரு களப்பு பகுதிகளையும் சுத்தம் செய்ய 2018ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலர் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதனைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் துறையைத் தொடர்புகொண்டு களப்பு பகுதி மீன்பிடி தொடர்பில் ஆய்வு செய்து உடனடியாக வனவிலங்குத்திணைக்களத்துக்குச் சமர்ப்பித்துநந்திக்கடல்பகுதியில்துப்பரவுப்பணியைமேற்கொள்ளுமாறும்அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் வன உயிரிகள் திணைக்களத்துக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வன உயிரிகள் திணைக்கத்தால் பொது மக்களின் காணிகள் விவசாய நிலங்கள் என்பன இதற்குள் அடங்குவதால் அவற்றைமீள்அரசிதழ்மூலம்அரசதலைவரின் உதவியுடன் மக்களிடம் மீண்டும் கையளிக்கநடவடிக்கைஎடுப்பதாகஆளுநர் இதன்போது மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார், என்றுள்ளது. (ஒ.5)

---

வடக்கு அரச அலுவலக

## சாரதிகளுக்கான இலவச உடற்தகுதி மருத்துவப்பரிசோதனை

### ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

வடமாகாணவீதிபாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு முதன்முறையாகவடமாகாணத்திலுள்ளஅரசஅலுவலகங்களை சேர்ந்த சாரதிகளின்உடற்தகுதிக்கான இலவசமருத்துவபரிசோதனை நடத்தப்படவுள்ளதாகவடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

நாளை மறுதினம் 7ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள வடமாகாண வீதிபாதுகாப்பு வாரம்தொடர்பிலானகூட்டம், ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது ஆளுநர் தெரிவித்ததாவது. இந்த நிகழ்வின் முதற்கட்டமாக வீதி பாதுகாப்பு வாரத்தின் ஆரம்பநாளில்யாழ். மாவட்டத்தில் உள்ள சுமார் 500 அரச அலுவலக சாரதிகளின் உடற்தகுதிப்பரிசோதனை இடம்பெறவுள்ளதுடன் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இந்த உடற்தகுதிப்பரிசோதனைசாரதிகளுக்குபரிசோதிக்கப்படவுள்ளது.

ஆளுநரின் வழிநடத்தலில் வடமாகாண ஆளுநர் செயலகம், வடமாகாணவீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் வடமாகாண வீதி பாதுகாப்பு சபை ஆகியன இணைந்து வீதிப் பாதுகாப்பு வாரத்தின் முதல் நாள்யாழ். மாவட்டசெயலகத்திலிருந்து துரையப்பா விளையாட்டு மைதானம் வரையான விழிப்பு ணர்வு நடைபவனி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்போது ஏனைய மாவட்டங்களிலும் இந்த நடைபவனிஅந்தந்தமாவட்டச்செயலகங்களில்இடம்பெறவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாரத்தின் போது மாவட்ட ரீதியில் இரண்டுசாரதிகள்வீதம்தெரிவுசெய்யப்பட்டுசிறந்த சாரதிகள் இருவருக்கான பதக்கங்களும்ஏனையசாரதிகளுக்கு சான்றிதழ்களும்வழங்கப்படவுள்ளன.

இவ்வாரத்தை முன்னிட்டு பாடசாலை மட்டங்களில் போட்டிகளும்வீதிநாடகங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன்வீதிவிபத்து சம்பந்தமான விழிப்புணர்வு தொடர்பிலானகுறுந்திரைப்படம்மற்றும்துணுக்குபோட்டிக்கான ஆக்கங்களை அனுப்பிவைப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதியாக பிற்போட ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

---

## சு.க. – பொதுமக்கள் முன்னணி இன்று இறுதிச் சுற்றுப் பேச்சு

### மைத்திரியைச் சந்திக்கின்றார் பசில்

கொழும்பு, ஒக். 5

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும்சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் இன்று சனிக்கிழமை முக்கியத்துவமிக்க சந்திப்பு நடைபெறவுள்ளது.

புதிய அரசியல் கூட்டணி, அரச தலைவர் தேர்தலுக்கான சின்னம் உள்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் நோக்கிலேயே குறித்த சந்திப்பு நடைபெறுகின்றது என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிந்தது.

'தாமரை மொட்டு' சின்னத்தைக் கைவிட்டுவிட்டு, பொதுச் சின்னத்தின்கீழ் அரச தலைவர்தேர்தலைஎதிர்கொள்ள முன்வருமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ராஜபக்சக்கள் அண்மையில் நிராகரித்துவிட்டனர்.

இந்தநிலையில்சின்னம்தொடர்பில்மீள் பரிசீலனை செய்வதற்காக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு இம்மாதம் 5ஆம்திகதி (இன்று) வரைசுதந்திரக்கட்சி அவகாசம் வழங்கியது. இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பசில்ராஜபக்சவுக்கும் கடிதம் அனுப்பியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இருகட்சிகளினதும்உயர்மட்டத்தலைவர்கள் இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு இன்று சனிக்கிழமை இரவு அரச தலைவர் மைத்திரி தலைமையில் கூடவுள்ளது. அதற்கு முன்னரே பசிலுடன் மைத்திரி பேச்சு நடத்துகின்றார். இதன்போதுஎடுக்கப்படும்தீர்மானத்தின் அடிப்படையிலேயே அரச தலைவர் தேர்தல் குறித்து சுதந்திரக் கட்சி இறுதி முடிவெடுக்கவுள்ளது. (ஒ.5.22.31)

---

## கோத்தாவுக்கு வெல்கமவுக்கும் தனிப்பட்ட பகை

### கூறுகிறார் டிலான்

குமார வெல்கம அரச தலைவர் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடதீர்மானித்துள்ளமை முற்றிலும் தவறான முடிவு என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கோத்தபாய உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மைத்திரியுடன் இணக்கமாகசெயற்படதொடங்கினார். இவருக்கும், கோத்தபாயவுக்கும் இடையில் எவ்வித அரசியல் ரீதியிலான முரண்பாடுகளும் கிடையாது. தனிப்பட்ட பகைமையேகாணப்படுகின்றது. (ஒ.5.71)

---

## போதைப்பொருள் ஒழிப்புக்கு பதிலடியே ஏப்ரல் 21 தாக்குதல்

### மைத்திரி இப்போதும் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 5

எனது அர்ப்பணிப்பின் பெறுபேறாக கடந்த சில ஆண்டுகளாக போதைப் பொருள் ஒழிப்பில் வெற்றிகரமான பல பெறுபேறுகள் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. யார்எதைக்கூறினாலும் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற துன்பியல் சம்பவமும் நாட்டுக்கான அந்த நிகழ்ச்சித்திட்டத்தை சீர்குலைப்பதற்காகஎடுக்கப்பட்ட முயற்சி என்றே நான் நம்புகின்றேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு நாலந்தா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப்பிரிவுஅனுப்பிவைத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போதைப்பொருள்கடத்தலின்காரணமாக நாட்டுக்கு ஏற்படும் பெரிய அழிவை தவிர்ப்பதற்காக தனது அரசியல் வாழ்க்கையில் தொடர்ச்சியாக தலைமைத்துவத்தைவழங்கியதுடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குஎதிராகதூக்குத்தண்டனையை வழங்குவதற்கும்அரசதலைவர்என்ற வகையில்தான்கைச்சாத்திட்டபோதும் அரசியல்பேதங்களின்றி பொறுப்புக் கூறவேண்டியவர்கள்அதற்கெதிராக செயற்பட்ட காரணத்தால் அந்தச் செயற்திட்டத்தைவெற்றிபெறச்செய்ய முடியவில்லைஎன்றும்மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பினார்...

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவ
தற்கு கோத்தபாய ராஜபக்சவுக்கு இருந்த
தடை இதன் மூலம் நீங்கியுள்ளது.
மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை
நீதியரசர் யசந்த கோதாகொட தலைமை
யில், நீதியரசர்கள் அர்ஜுன் ஒபேசேகர,
மகிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய
அமர்வால் ஏகமனதான முடிவு எனக் கட்
டளை வழங்கப்பட்டது.

நவம்பர் 16ஆம் திகதி அரச தலைவர்
தேர்தலில் முக்கிய போட்டியாளர்களில்
ஒருவராகக் கருதப்படும் கோத்தபாய ராஜ
பக்சவுக்கு இலங்கைக் குடியுரிமை எப்
போதாவது சட்டபூர்வமாக வழங்கப்பட்
டதா என்பது பற்றிய கேள்விகளை எழுப்
பும் வகையில் மனுத் தாக்கல் செய்யப்பட்
டது. காமினிய வியாங்கொட, பேராசிரியர்
சந்ரகுப்த தெனுவர ஆகியோர் இந்த
மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த மனு 2ஆம் திகதியும், நேற்றுமுன்
தினம் வியாழக்கிழமையும், நேற்றும்
விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டி
ருந்தன.

மனுதாரர்களின் சட்டத்தரணிகள், எதிர்
மனுதாரர்களின் சட்டத்தரணிகள் நீண்ட
சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அரச தலைவரின் அதிகாரங்கள் தொடர்
பில், அரசமைப்பின் 17ஆவது திருத்தத்
துக்கு அமைவாக பொருள்கோடல் செய்
யும் அதிகாரம் உயர் நீதிமன்றுக்கே உள்
ளது என்று சட்டவாளர்கள் குறிப்பிட்டனர்.
வாதங்களின் பின்னர் கோத்தபாயவின்
குடியுரிமை தொடர்பான மனுவின்
இடைக்கால கட்டளையை வழங்குவதற்
காக அமர்வு நேற்று மாலை 6 மணி
வரையில் ஒத்தி வைக்கப்பட்டது. மாலை
6.07 இற்கு தலைமை நீதியரசர் யசந்த
கோதாகொட தலைமையில், நீதியரசர்கள்
அர்ஜுன் ஒபேசேகர, மகிந்த சமயவர்தன
ஆகியோர் அடங்கிய அமர்வு கூடி மனு
வைத் தள்ளுபடி செய்து கட்டளையை
வழங்கியது.

**பாதுகாப்பு**

நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக கோத்
தபாய ராஜபக்ச கைது செய்யப்படக்
கூடிய சூழல் நிலவியமையாலும், தீர்ப்பு
தொடர்பான எதிர்ப்பார்ப்பு பரபரப்பை ஏற்
படுத்தியிருந்தது. இதனால் மேன்முறை
யீட்டு நீதிமன்ற வளாகத்தில் நேற்று
மாலை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

**திங்களே தெரியும்**

நீதிமன்றம் மனுவை நிராகரித்தமைக்
கான காரணம், திங்களன்றே சட்டத்தர
ணிகளுக்கு வழங்கப்படும் என்று தெரி
விக்கப்படுகின்றது. (ஒ,5,22)

## சஜித்...

ளர் சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்சவின்
சகோதரரும் முன்னாள் சபாநாயகருமா
கிய சமல் ராஜபக்ச ஆகியோர் நேற்றுக்
கட்டுப் பணம் செலுத்தினர். இதுவரை 33
பேர் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர்.
அரச தலைவர் தேர்தலுக்கான வரலாற்
றில் அதிகளவானோர் கட்டுப் பணம்
செலுத்திய தேர்தலாக இது பதிவாகி
யுள்ளது.

8 ஆவது நிறைவேற்று அதிகார அரச
தலைவர் தேர்தல் எதிர்வரும் 16ஆம் திகதி
நடைபெறவுள்ளது. வேட்புமனுத் தாக்கல்
நாளை மறுதினம் திங்கட் கிழமை நடை
பெறவுள்ளது.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வேட்பா
ளர்கள், கட்சி சார்பில் போட்டியிடுபவர்கள்
50 ஆயிரம் ரூபாவும், சுயேச்சையாகப்
போட்டியிடுபவர்கள் 75 ஆயிரம் ரூபா
வும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.
நேற்று மாலை வரையில் 33 பேர் கட்டுப்
பணம் செலுத்தியுள்ளனர். ஏற்றுக் கொள்
ளப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் 16
பேரும், ஏனைய கட்சிகள் சார்பில் 3
பேரும், சுயேச்சையாக 14 பேரும் கட்டுப்
பணம் செலுத்தியுள்ளனர். (க-105)

## மேன்முறையீடு...

உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்
வது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்க
வில்லை என்று மனுதாரர் தரப்புச் சட்டத்
தரணிகள் தெரிவித்தனர்.

உயர் நீதிமன்றில் திங்கட் கிழமை மேன்
முறையீடு செய்யப்பட்டு, மேன்முறையீடு
ஏற்றுக் கொள்ளப்பட்டால் கோத்தபாய ராஜ
பக்ச தேர்தலில் போட்டியிடுவது தொடர்
பில் சிக்கல் நிலமை ஏற்படும். (ஒ,5)

## தேர்தலுக்கு...

நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்
,காலி முன்னாள் நகர பிரதா மெத்சிறி டி
சில்வா இந்த மனுவை தாக்கல் செய்தி
ருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசே
னவை 2015ஆம் ஆண்டு ஜனவரி
மாதம் 8 ஆம் திகதி அரச தலைவர் தேர்
தலின் போது அடுத்துவரும் 6 வருடங்க
ளுக்கே தெரிவு செய்ததாகவும், அவ்வா
றிருக்கையில் பதவிக் காலத்தில் 5 வரு
டங்கள் நிறைவடைந்ததும், தேர்தல்கள்
ஆணைக் குழுவின் தலைவர் அரச
தலைவர் தேர்தலுக்கான அரசிதழ் அறி
வித்தலைப் பிறப்பித்து, எதிர்வரும் 7 ஆம்
திகதி வேட்பு மனுவும் தாக்கல் செய்ய
நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்
தனது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தமை
குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## நீதிமன்றத்...

மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் கிடைத்த
வெற்றியாகும். இவ்வாறு சிறிலங்கா
பொதுமக்கள் முன்னணியின் அரச
தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜ
பக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின்
அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய
ராஜபக்சவின் இலங்கைக் குடியுரிமை
யைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறை
யீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்
பட்ட மனு நீதியரசர்கள் குழாமால் நேற்று
தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது
தொடர்பில் பன்னாட்டு செய்திச் சேவை
யொன்றின் கொழும்புச் செய்தியாளர்
கோத்தபாயவிடம் வினவியபோதே மேற்
கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மனச்
சாட்சியின் பிரகாரம் எனக்கு நீதி கிடைத்
துள்ளது. இதில் எனக்கு நம்பிக்கை
இருந்தது. எவராலும் நான் போட்டியிடுவ
தைத் தடுக்கவே முடியாது. அதேவேளை,
நான் அரச தலைவர் தேர்தலில் வெற்றி
பெறுவதையும் எந்தச் சக்தியாலும் தடுக்
கவே முடியாது. மக்கள் சக்தி - மக்கள்
பலம் எம் பக்கம் உள்ளது. எனவே, நான்
எதற்கும் அஞ்சமாட்டேன். அரச தலைவர்
தேர்தலில் மாபெரும் வெற்றிச் செய்தியு
டன் இந்த நாட்டை நான் ஆள்வேன்.
என்னை அரியணை ஏற்றக் காத்திருக்
கும் மக்களின் துயரை நான் துடைப்
பேன்- என்றார். (ஒ,5,22)

## கோத்தாவின்...

கறுப்பு உடை மாட்டிக் கொண்டு சட்டத்தர
ணிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான
செயற்பாடுகளைக் கண்டிக்கின்றேன்
என்று அவர் குறிப்பிட்டார்.

கோத்தபாய ராஜபக்சவை இலங்கை குடி
மகனாக ஏற்றுக் கொள்வதை தடுக்கும்,
உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி, மேன்மு
றையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்
பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது.
மன்றின் கட்டளையை மேன்முறையீட்டு
நீதிமன்றின் தலைமை நீதியரசர் யசந்த
கோதாகொட தலைமையிலான, நீதியர
சர்கள் அர்ஜுன் ஒபேசேகர, மகிந்த சமய
வர்தன ஆகியோர் அடங்கிய குழாம்
வழங்கியது. கட்டளையை தலைமை
நீதியரசர் யசந்த கோதாகொட அறிவித்
தார்.

இந்த மன்று மனுவைத் தள்ளுபடி செய்
கின்றது என்று அவர் அறிவித்ததும்,
கோத்தபாய ராஜபக்ச சார்பில் முன்னி
லையான சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா
உள்ளிட்டோர் கைகளைத் தட்டியதுடன்
ஒருவர் மற்றவரின் கையைத் தட்டி
கொண்டாடினர். அத்துடன் கூக்குரலும்
எழுப்பினர். அப்போது தலைமை நீதியர
சர் யசந்த கோதாகொட மன்றின் கட்
டளை என்று சட்டத்தரணிகளை அமைதி
பேணப் பணித்தார். தாம் அவ்வாறு
நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்
கின்றேன் என்று சட்டத்தரணி ருமேஸ் டி
சில்வா மன்றிடம் மன்னிப்புக் கோரினார்.
இந்தச் செயற்பாடு கவலைக்குரியதும்
அதிர்ச்சியானதும் வெறுக்கத் தக்கதுமா
கும் என்று தலைமை நீதியரசர் யசந்த
கோதாகொட தனது கரிசனையை
வெளிப்படுத்தினார்.

நான் இதற்கு உடன்படுகின்றேன். அவ
மானப்படுகின்றேன், என்று சட்டத்தரணி
ருமேஸ் டி சில்வா வருத்தம் தெரிவித்தார்.
நான் ஊகிக்கிறேன், எந்தவொரு சட்டத்த
ரணியும் வரவேற்கத்தகாத நடத்தையில்
ஈடுபடமாட்டார்கள். அதற்கு ஏதேனும்
ஆதாரம் இருந்தால், சட்டத்தரணிகள்
சட்ட திட்டங்களை மதித்துச் செயற்பட
வேண்டும், என்று தலைமை நீதியரசர்
யசந்த கோதாகொட, கோத்தபாய தரப்புச்
சட்டத்தரணிகளின் இந்தச் செயற்பாட்
டைக் கண்டித்தார். (ஒ,5,105)

## எரிவாயு...

நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்
டுள்ளது.

வாழ்க்கைச் செலவு குழுவால் எடுக்கப்
பட்ட முடிவுக்கு அமைய விலை குறைக்
கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார
சபை அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 12.5 கிலோ
கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு
சிலிண்டர் ஒன்றின் விலை 240 ரூபாவா
லும் ஏனைய மாவட்டங்களில் 12.5 கிலோ
கிராம் எரிவாயு சிலிண்டர் ஒன்றின்
விலை 251 ரூபாவவாலும் குறைக்கப்பட
வுள்ளது. (ஒ,5,71)

## மல்லாகம்...

யில் நேற்று மாலை 6.30 மணிக்கு இடம்
பெற்ற விபத்தில் அளவெட்டி வடக்கைச்
சேர்ந்த சௌந்தராஜன் விதுசன் (வயது-
19) என்ற இளைஞனே உயிரிழந்தான்.

பாரவூர்தியின் பின்னால் பயணித்துக்
கொண்டிருந்த இளைஞன், அதனை
முந்திச் செல்வதற்கு முயன்றுள்ளான்.
எதிர்பக்கத்தில் மற்றொரு வாகனம் வரு
வதைக் கண்ட இளைஞன் சடுதியாக
திரும்ப முற்பட்டபோது பாரவூர்தியுடன்
மோதுண்டதாக, தமது முதற்கட்ட விசார
ணைகளில் தெரியவருவதாக தெல்லிப்
பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இளைஞனை
உடனடியாக தெல்லிப்பழை மருத்துவம
னைக்கு எடுத்துச் சென்றபோதும், அவர்
உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்
டது. (ஒ,5,26)

## மட்டுவிலில்...

லப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில்
இடம்பெற்றது.

வீட்டின் வீதி மதில் மேலால் ஏறி உள்நு
ழைந்த நபர்கள் வெளி விறாந்தைக்குச்
சென்றனர். அங்கு நபர்களின் சத்தங்
களை கேட் [illegible] வீட்டுக்காரர் உறக்கத்திலி
ருந்து எழுந்து விறாந்தையின் மின்
விளக்கை ஒளிரவிட்டார். அங்கு நின்ற
இனம் தெரியாத நபர்கள் மின்குமிழை
அடித்து நொருக்கினர்.

வீட்டுக்காரர் உட்கதவுகளை நன்றாகப்
பூட்டியதுடன் வெளியே வராது கூக்குரல்
எழுப்பினர். இதனால் நிலை குலைந்த
கும்பல் அங்கு நிறுத்தப்பட்டிருந்த உந்து
ருளியைத் தள்ளி வீழ்த்தியதுடன்
அதனை அடித்துச் சேதப்படுத்தியது.
வீட்டு யன்னல் கண்ணாடிகள் அடித்து
நொருக்கப்பட்டன. அட்டகாசம் புரிந்த
அந்தகுழு10நிமிடங்களில்வெளியேறியது.
சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலி
ஸார் விசாரணைகளை மேற்கொண்ட
னர். (ஒ,5,9,131,ரி1)

## மீண்டும்...

உயிர்த்த ஞாயிறு போன்று மீண்டும்
ஹோட்டல்களில் தாக்குதல்கள் இடம்பெ
றலாம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்
கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை பொலிஸாரால்
அனுப்பப்பட்ட கடிதம் என்று அதில் குறிப்
பிடப்பட்டுள்ளதாகவும் பல ஹோட்டல்க
ளுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்
டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்
ளன. கடிதம் தொடர்பில் விசாரணைகள்
ஆரம்பமாகியுள்ளதாக பொலிஸ் தலை
மையகம் தெரிவித்துள்ளது.

பொய் தகவல்களை பரப்பி மக்களை
குழப்பும் முயற்சிகள் இடம்பெறுகின்ற
னவா என்ற கோணத்தில் விசாரணைகள்
ஆரம்பமாகியுள்ளன என்று பொலிஸார்
தெரிவித்துள்ளனர். (ஒ,5)

## கோத்தாவுக்கு...

தாக்கல் செய்யப்பட்ட மனு மூன்று நாள்
கள் நடைபெற்ற விசாரணையின் பின்
னர் தள்ளுபடி செய்யப்பட்டமையை
நினைத்து நாம் பெருமிதம் அடைகின்
றோம். இந்தத் தீர்ப்பு கோத்தாவுக்கு
கிடைத்த முதல் வெற்றியாகும். இவ்வாறு
எதிர்க்கட்சித் தலைவரும் சிறிலங்கா
பொதுமக்கள் முன்னணியின் தலைவரு
மான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் பன்னாட்டு செய்திச்
சேவையொன்றின் கொழும்புச் செய்தியா
ளரிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரச தலைவர் தேர்தலில் கோத்தாவை
நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாதவர்
கள் திரைமறைவில் நின்று அவருக்கு
எதிராக போலிக் குற்றச்சாட்டுக் களை
முன்வைத்து வழக்குத் தொடுத்தனர்.
ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்கள்
அனைத்தையும் அடியோடு நிராகரித்து
வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது மேன்
முறையீட்டு நீதிமன்றம். இது அவருக்கு
எதிராகச் சதிவேலைகளைச் செய்ய
முயன்றவர்களின் முகத்தில் அடித்தால்
போன்றுள்ளது. எமது அணியின் வெற்
றிப் பயணம் தொடரும். நவம்பர் மாதம்
16ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில்
பெரும்பான்மையுடனான வாக்குகளு
டன் கோத்தா அரச தலைவராகப் பதவி
யேற்பார். இதில் மாற்றுக் கருத்துக்கு
இடமில்லை. ரணில் அரசின் ஆட்சி
கவிழ்வது உறுதி - என்றார். (ஒ,5,22)

## தீர்ப்பையடுத்து...

டங்கள் இடம்பெற்றன.

கோத்தபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்
உள்ளிட்ட பொதுமக்கள் முன்னணியி
தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மகி
தவின் இல்லத்தில் கேக் வெட்டிக் கொண்
டாடினர். மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு
முன்பாகக் கூடியிருந்த ஆதரவாளர்கள்
வெடி கொழுத்தி ஆர்ப்பரித்தனர். இதே
போன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்
[illegible] வெடி கொழுத்தி நீதிமன்றத் தீர்ப்பைக்
கொண்டாடினர். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையத்தில் நால்வர் குத்திக்கொலை

*பிரான்ஸில் துணிகரம்!*

பாரிஸ்,ஒக்.5

பிரான்ஸின் தலைநகர் பாரீசிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் பணிபுரியும் ஒருவர் மூன்று பொலிஸ் அதிகாரிகள் உட்பட நால்வரை கத்தியால் குத்திக் கொன்றார். இந்தச் சம்பவம் பிரான்ஸ் முழுதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதலாளியின் பெயர் வெளியிடப்படாத நிலையில், சம்பவ இடத்திலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பிரான்ஸ் பொலிஸ் தரப்பினர் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்த விசாரணையைப் பிரான்ஸ் பொலிஸார் ஆரம்பித்தனர். தாக்குதலாளியின் நோக்கம் குறித்து இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏதும் இல்லை. எனினும், பணியிடத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டுப் பிரான்ஸ் பொலிஸார் சில கோரிக்கைகளை முன்வைத்து அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் போராட்டத்துக்கு அடுத்த நாள் இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வடகொரியா– அமெ. இடையே இன்று சுவீடனில் பேச்சுக்கள்?

பியோங்ஜாங்,ஒக்.5

வடகொரியா அமெரிக்கா இடையேயான பேச்சுக்கள் சுவீடனில் நடக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரிய, அமெரிக்க அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நிகழ்வு சுவீடனின் தலைநகர் ஸ்டோக்ஹோமில் இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது.

அந்தச் சந்திப்பு குறித்த நேரம் இதுவரை வெளியாகவில்லை என்று தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அமெரிக்காவின் அணுசக்தித்துறைசார் பேச்சாளரான ஸ்ரீபன் பாய்கன், வடகொரியாவின் அணுசக்தி துறைசார் பேச்சாளரான கிம் மையாங் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கின்றனர். இவர்கள் தவிர இரு நாடுகளைச் சேர்ந்த சில முக்கிய அதிகாரிகளும் இந்தப் பேச்சில் பங்கேற்க உள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணு ஆயுதப் பாவனை தொடர்பாக அமெரிக்கா வடகொரியா இடையே ஒக்ரோபர் 5ஆம் திகதி பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாக வடகொரியா ஏலவே தெரிவித்திருந்தது. இதற்கு அமெரிக்கா தரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வடகொரியா தெரிவித்த நிலையில் கடல் வழியாகப் புதிய ஏவுகணைச் சோதனையை வடகொரியா நடத்தியது.

இதன் காரணமாக அமெரிக்கா -வடகொரியா இடையேயான இந்தப் பேச்சு நடைபெறாமல் போகலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பேச்சு நடைபெறுவதற்கான இடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் மோதல்கள்

*34பேர் சாவு 1500 பேருக்குக் காயம்*

பக்தாத்,ஒக்.5

ஈராக்கில் அரசுக்கு எதிராக நடந்த பேரணியில் மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்களால் 34பேர் சாவடைந்தனர். கிட்டத்தட்ட ஆயிரத்து 500 பேர் வரை காயமடைந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஈராக்கில் ஊழல், வேலையின்மை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அரசுக்கு எதிரான போராட்டங்கள் கடந்த சில நாள்களாக அங்கு நடந்து வருகின்றன. இதன் காரணமாக ஈராக்கின் தலைநகர் பாக்தாத் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அரசுக்கு எதிராக



அங்கு பேரணி நடந்தது. அந்தப் பேரணியில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. பாக்தாத்தின் மத்திய சதுக்கத்தை நோக்கி ஆயிரம் பேர் கலந்து கொண்ட அரசுக்கு எதிரான அந்தப் பேரணி மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனைத் தொடர்ந்தே மோதல் எற்பட்டது. இந்த மோதல்களின் பின்பும் ஈராக்கில் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு நீடிக்கிறது. அந்த மோதல்களின்போது சாவடைந்தவர்களில் 31பேர் போராட்டக்காரர்கள். 3 பேர் பாதுகாப்பு அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.



ஈராக்கில் போராட்டக்காரர்களும் பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களில் பலர் சாவடைந்தனர். போராட்டக்காரர்கள்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். இது குறித்த ஒளிப்படத்தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ்.






# சிங்கங்களின் எலும்புகள் பெருமளவில் கடத்தல்!

*வானூர்தி நிலையத்தில் 3 பேர் கைது*

ஜோகனெஸ்பேர்க்,ஒக்.5

சிங்கங்களின் எலும்புகளை வானூர்தி மூலம் பெருமளவில் (342 கிலோ) கடத்த முயன்ற சந்துகெத்தில் மூன்று பேரைத் தென்னாபிரிக்க அதிகாரிகள் கைது செய்தனர். அந்த எலும்புகளையும் கைப்பற்றினர். தென்னாபிரிக்காவின் ஜோகனெஸ்பேர்க் வானூர்தி நிலையத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. ஆசியாவில் மருத்துவப் பயன்பாட்டுக்கும் ஆபரணத் தயாரிப்புகளுக்கும் சிங்க



எலும்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்று இதுகுறித்து தென்னாபிரிக்காவின் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலேசியா நோக்கிப் புறப்பட இருந்த வானூர்தியிலிருந்து கைப்பற்றப்பட்ட குறித்த எலும்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சிம்பாவே நாட்டைச் சேர்ந்தவர்கள். மூவரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது. சிங்கங்களின் எலும்புகளை ஏற்றுமதி செய்வது சட்டபூர்வமானது என்றாலும், அவற்றை நாட்டைவிட்டு வெளியே அனுப்புவதாயின் அந்தந்த நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சிறப்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கீழடி அகழ்வுப் பொருள்கள் சேதம்!

# பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பார்வையாளர்களுக்கும் கட்டுப்பாடு

புதுடெல்லி,ஒக்.5

இந்தியா - தமிழகத்திலுள்ள கீழடி அகழ்வுச் சுவர்களைச் சிலர் சேதப்படுத்தியதாகத் தெரிவித்து அகழ்வாய்வுகள் நடந்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அத்தோடு பார்வையாளர்களுக்கும் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது.

கீழடியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அகழ்வாய்வில் மணிகள், அணிகலன்கள், பானை ஓடுகள், குறியீடு ஓடுகள், உறைகிணறுகள், இரும்புப் பொருள்கள், செப்புக் காசுகள், உணவுக் குவளை உட்பட 750க்கும் மேற்பட்ட பொருள்கள் கிடைத்துள்ளன.

இதன்மூலம் கீழடி நாகரீகம் 2ஆயிரத்து 600 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவந்துள்ளது. அகழ்வாய்வுப் பணிகள் நீடிக்கப்பட்டுள்ளன. இதனால் கீழடி அகழாய்வு மீதான ஆர்வம் தமிழர்களிடம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தடுப்புகளை மீறிச் சென்று அகழாய்வுச் சுவர்களை சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டு, அங்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அத்தோடு அகழாய்வைப் பார்வையிடுவதற்கு அரை மணி நேரத்துக்கு ஒருமுறை 50 நபர்கள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர்.

அத்தோடு குறிப்பிட்ட இடத்தில் தோண்டிய குழிகளை மாத்திரமே பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறாகப் பார்வையாளர்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.



நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட பாலிஸ்டிக் ரக ஏவுகணை இது. வடகொரியாவால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஏவுகணைப் பரிசோதனை வெற்றிகரமாக அமைந்ததாக வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மனைவியைக் குறிவைக்கிறார்கள்!

# பிரிட்டன் ஊடகங்கள் மீது இளவரசர் ஹரி பாய்ச்சல்

லண்டன்,ஒக்.5

எனது அம்மாவான டயானாவின் நிலை எனது மனைவிக்கும் வருவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனது மனைவியை ஊடகங்கள் குறிவைக்கின்றன என்று தெரிவித்தார் பிரிட்டனின் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் ஹரி.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

பிரிட்டனின் பிரபல பத்திரிகையான 'மெயில் ஒன் சன்டே', இளவரசர் ஹரியின் மனைவி மேகன் மெர்கல், தனது தந்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தப் பத்திரிகைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார் இளவரசர் ஹரி. இதுகுறித்துப் பேசிய ஹரி, அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற முறையில் நானும் எங்களின் தலைமுறையும் ஊடகங்களுக்குப் பதில் சொல்லவும், அரச குடும்ப செய்திகளை அறிக்கைகளாக வெளியிடவும் கடமைப்பட்டு இருக்கிறோம். அதே நேரம், சில ஊடகங்களின் செயற்பாடுகள் எங்களை மனதளவில் கொடுமைப்படுத்துவதாக உள்ளன. என் மனைவி கருத்தரித்தபோது, அந்தச் செய்தியை அரச குடும்பத்தின் சார்பாக நாங்களே பொதுமக்களுக்குத் தெரிவித்தோம். ஆனாலும், எங்களைச் சுற்றி வதந்திகள் இருந்துகொண்டே தான் இருந்தன. எங்களின் குழந்தை பிறந்த நேரத்தில் குழந்தையின் பெயர் இது, அது எனப் பல வதந்திகளை ஊடகங்கள் வெளியிட்டன.

என் மனைவியின் தந்தை உட்பட நாங்கள் எங்கு சென்றாலும் ஊடகங்கள் அதைச் செய்திகளாக மாற்றிவிடுகின்றன. ஊடகங்களால் நாங்கள் எங்கள் நிம்மதி இழந்து கொண்டிருக்கிறோம். வதந்திகள் உண்மையில்லை என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக ஒவ்வொரு முறையும் ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே இருக்க முடியுமா? ஊடகங்கள் வதந்திகளைக் கிளப்பியதால்தான், அம்மா டயானாவை இழந்தேன். இப்போது அதே நிலை எனது மனைவிக்கும் வருவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றார்.



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இனம் புரியாத சங்கடம் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர் அன்பு, பாசத்துடன் உதவுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஓரளவு கூடும். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்..

**இடபம்:** உங்களிடம் சிலர் அனுகூலம் பெறமுயற்சிசெய்வர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வழி பிறக்கும். அக்கறையுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை இலக்கு பூர்த்தியாகும்.

**கடகம்:** மனதில் இனம் புரியாத கவலை உருவாகலாம். வாழ்வியல் சிரமம் சரி செய்ய நண்பரின் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். பணவரவு திருப்திகர அளவில் கிடைக்கும்.

**சிம்மம்:** செயல்களில் மேம்போக்கான குணம் நிறைந்திருக்கும். முக்கிய பணி நிறைவேறுவதில் கூடுதல் உழைப்பு அவசியம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** உங்கள் பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். பொறாமை குணம் உள்ளவரின் விமர்சனத்தை பொருட்படுத்தமாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள வளர்ச்சி உண்டு. ஆதாய பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நேர்மை செயல்களால் அதிக நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உறவினர் வகையில் பணம் செலவு செய்ய நேரிடலாம்.

**விருச்சிகம்:** முக்கியமான செயல் நிறைவேற அனுகூல சூழ்நிலை அமைந்திடும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை செழிக்கும்.

**தனுசு:** உங்களின் கஷ்ட சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்க வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் திறமையை வளர்த்து கொள்வீர்கள். செயல்களில் பெறுகின்ற நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும்.

**கும்பம்:** மனதில் புதுமை எண்ணம் நிறைந்திருக்கும். எவரிடமும் அளவுடன் பேசி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறு விலகும்.

**மீனம்:** எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தராதீர்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை இருக்கும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.5
வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் சத்தி வேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக் கிழமை வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் விளையாட்டுக் கழக மைதானத்தில் விளை யாட்டுக் கழகம் மைதா னத்தில் ஆரம்பமாகின் றது.

இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பிலிப் நேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அருணோதயா விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளைஞர் வட்டம் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சுப்பர் றாங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்ஸ்ரார் விளையாட் டுக்கழக அணி மோத வுள்ளது.

பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங் கம்பன்ஸ் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து கணேசானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



## மாந்தை கிழக்கு பி.செ. அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம். ஒக்.5
முல்லைத்தீவு மாவட்ட அரசதிணைக்களங் களுக்கு இடையிலான மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒவர் கேம் கரப் பந்தாட்டத் தொடரில் மாந்தை கிழக்கு பிர தேச செயலக அணி கிண்ணம் வென்றது. நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு பிர தேச சபை மைதானத்தில் இடம்பெற்ற இறு தியாட்டத்தில் பெண்கள் பிரிவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணி மோதியது. இதில் 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (23)



## வெள்ளிநிலா வாகை

யாழ்ப்பாணம்,ஒக்.5
கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்கு ளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் வெள்ளி நிலா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சிறிமுரு கன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெள்ளிநிலா விளையாட்டுக் கழக அணி மோதி யது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி முதலில் வெள்ளி நிலா விளையாட்டு கழகத்தை துடுப்பெடுத்தாடு மாறு பணித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வெள் ளிநிலா விளையாட்டுக் கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் மதன் 23 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய சிறி முருகன் விளை யாட்டுக் கழக அணி 9.5 பந்துப் பரிமாற்றங்க ளில் சகல இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங் களை மாத்திரமே பெற்று 12 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

ஆட்டநாயகனாக வெள்ளிநிலா விளையாட்டு கழக அணி வீரர் வர்ணன் தெரிவு செய்யப்பட் டார். (23)

## சென்.சேவியர் - உருத்திரபுரம் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.5
முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை வடமாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி யாட்டம்நாளைஞாயிற்றுக்கிழமைசிலா வத்தை இளம் பறவைகள் விளை யாட்டுக் கழக மைதானத்தில் மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தேவன் பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)





## மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.4
வடக்கு மாகாணப் பாடசாலைக ளுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான வலைப் பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தையும், பெண்களுக்கான ஹொக்கிபோட்டியில் மூன்றாம் இடத் தையும் மற்றும் 18 வயதுப்பிரிவு மாகாணச் சம்பியனான வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியா லய அணியினருக்கு பாடசாலை சமூகத்தினரால் மதிப்பளிக்கப் பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை காலை 7.15 மணிக்கு பாட சாலை அதிபர் க.சிவநாதன் தலை மையில் இடம் பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா தெற்குபிரதிக் கல்விப் பணிப்பாளர் க.அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தின ராக வவுனியா தெற்கு உடற்கல்வி ஆசிரியா ஆலோசகர் யூட்பரத மாறன், மதிப்புறு விருந்தினராக வவு னியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பழைய மாணவர் சங் கச் செயலர் சி.இந்திரன் ஆகி யோர் கலந்து கொண்டனர். (23)

கிளிநொச்சி பிறீமியர் லீக்

## ரி- 20 துடுப்பாட்டத் தொடர் ஆரம்ப நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.5
கிளிநொச்சி பிறீமியர் லீக் 2019ஆம் ஆண்டுக் கான ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத் தில் கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தின் தலைவர் றெஜி அலோசியஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.


ஆரம்பநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்க ளாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவும், அகிலன் பவுண்டேசன் ஸ்தாப கர் மு.கோபாலகிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறிதரனும், சிறப்பு விருந்தி னர்களாக கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன், வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத் தலைவர் யோ.ரதீபன், கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சர் ஆர்.எம்.டி.ஜே ரத்னா யக்க, மதிப்புறு விருந்தினர்களாக கரைச்சி பிர தேச சபை உறுப்பினர் ச.ஜீவராஜா, கிளிநொச்சி மாவட்ட உளநல பிரிவு வைத்திய அதிகாரி வைத் தியர் மா.ஜெயராசா, வடக்கு மாகாண துடுப்பாட்ட பயிற்றுநர் டே. கங்காதரன், சிறிலங்கா துடுப் பாட்ட இளையோர் தெரிவுக்குழு உறுப்பினர் எஸ். நிசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர். (23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டீன் எல்கர், டீ குக் சதம் கைகொடுக்க

# தென்னாபிரிக்கா ஆதிக்கம்






டீன் எல்கர், டீ குக் சதம் கைகொடுக்க நேற்றைய நாள் முடிவில் தென்னாபிரிக்கா அணி வலுவான நிலையில் காணப்படுகின்றது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 7 இலக்குகளை இழந்து 502 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 39 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைப் பறி கொடுத்து பரிதவித்தது. எல்கர் 27 ஓட்டங்களுடனும், பவுமா 2 ஓட்டங்களுடனும் நேற்றைய இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் பவுமா 18 ஓட்டங்களுடன் இஷாந் சர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த டூ பிளாசிஸ், எல்கர் இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். டூ பிளாசிஸ் அரைச் சதம் கடந்து 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த டீ குக், எல்கர் இணைப்பாட்டம் அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தினர். மறு முனையில் எல்கர் சதம் கடந்து சிறப்பாக ஆடினார். பதிலுக்கு டீ குக்கும் அவருக்கு இணையாக ஆடினார். இவர்கள் இருவருக்குமான இணைப்பாட்டமாக 164 ஓட்டங்கள் பகிரப்பட்டன. டீன் எல்கர் 4 ஆறு ஓட்டங்கள், 18 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 160 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டீ குக் 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க அணி நல்லதொரு ஓட்ட எண்ணிக்கையை எட்டியது. ரவிச் சந்திரன் அஸ்வின் சிறப்பாக பந்துவீசி 5 இலக்குகளையும், ஜடேஜா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். அணி நேற்றைய நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது. நேற்றைய நாள் முடிவில் முத்துசாமி 12 ஓட்டங்களுடனும், மகாராஜ்ரா 2 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.



## இந்திய அணியின் ஓர் அங்கம் அஸ்வின்

### சச்சின் புகழாரம்

சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வினின் எதிர்காலம் குறித்து கேள்வி எழுப்பும் நிலையில், அவர் இந்திய அணியின் ஓர் அங்கம் என சச்சின் தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளராக திகழ்பவர் ரவிச்சந்திரன் அஸ்வின். மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் போது இவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இதனால் டெஸ்ட் போட்டியில் அஸ்வினின் எதிர்காலம் குறித்து கேள்வி எழுந்தது. இதற்கிடையே தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதல் டெஸ்டில் இடம் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் அஸ்வின் இந்திய அணியின் ஓர் அங்கம் என சச்சின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

**அஸ்வின் முன்னணி பந்து வீச்சாளர்களில் ஒருவர்.** அவர் பந்து வீச்சில் மட்டும் சிறப்பாக செயற்படவில்லை. முக்கியமான கட்டத்தில் இந்திய அணிக்கு ஓட்டங்களை அடித்துக் கொடுத்து முக்கிய பங்காற்றியுள்ளார். ஆகவே, அவர் இந்திய அணியின் ஓர் அங்கம் என்று நினைக்கிறேன். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

கிரிக்கெட் வாழ்க்கையில் ஒவ்வொரு வீரர்களுக்கும் ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்யும். அஸ்வின் நீண்டகாலமாக இந்திய அணியில் இடம் பிடித்து சிறப்பான ஆட்டத்தை சீராக வெளிப்படுத்தியுள்ளார். இந்திய அணி கலவையில் அவர் முக்கிய மானவர்-என்றார்.

நேற்று இடம்பெற்ற தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான போட்டியின் போது அஸ்வின் அந்த அணிக்கு ஆரம்பத்திலேயே இலக்குகளைக் கைப்பற்றி அதிர்ச்சியை ஏற்படுத்தினார். அவர் 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானின் தலைமை தேர்வாளராக ஆண்டி மோல்ஸ்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இயக்குனராகவும், தலைமை தேர்வாளராகவும் ஆண்டி மோல்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆண்டி மோல்ஸ் முன்னர் ஆப்கானிஸ்தானுடன் 2014 - 2015 வரையான காலப்பகுதியில் பயிற்சியாளராக கடமையாற்றியிருந்தார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக கடந்த மாதம் முன்னாள் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரர் லோன்ஸ் குளுஸ்னர் நியமிக்கப்பட்டார்.

இதன் பின்னர் ஆப்கானிஸ்தான் அணியில் பல மாற்றங்கள் நிகழ்ந்தது. குல்படின் நைப் தனது குறுகிய காலப்பகுதியில் தலைமைப் பொறுப்பை நிறைவேற்றத் தவறியத்தைத் தொடர்ந்து ரஷீத் கான் அனைத்து வகையான கிரிக்கெட்டுக்களுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இவரின் தலைமையின் கீழ் பங்களாதேஷை எதிர்த்து ஆப்கானிஸ்தான் 224 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்தது குறிப் பிடத்தக்கது.

## பந்து சேகரிக்கும் பெண்ணைசீண்டிய ரென்னிஸ் நடுவர்

ரென்னிஸ் போட்டிகளில் பந்து சேகரிக்கும் இளம் பெண்ணைப் பார்த்து நீ கவர்ச்சியாகயிருக்கின்றாய் என தெரிவித்த நடுவர் ஒருவர் போட்டிகளில் கடமையாற்றுவதிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இத்தாலியில் இடம்பெற்றுள்ளது.

இத்தாலியின் புளோரென்சில் இடம்பெற்ற போட்டியொன்றின் போது 46 வயது நடுவர் பந்து சேகரிக்கும் 16 வயது இளம்பெண்ணை நோக்கி ஆபாச வார்த்தை பிரயோகங்களில் ஈடுபடுவது காணொலி மூலம் அம்பலமாகியுள்ளது.

நீ மிகவும் அழகாகயிருக்கின்றாய், கவர்ச்சியாகயிருக்கின்றாய் என பந்து சேகரிக்கும் இளம் பெண்ணிடம் அவர் தெரிவிக்கின்றார்.

அதன் பின்னர் அந்த நடுவர் இங்கு சூடாக உள்ளது நீயும் அதனை உணர்கின்றாயா? நீ உணர்வு ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சூடாக உணர்கின்றாயா? என கேட்கின்றார் .

இதேவேளை, இந்த விடயம் தெரியவந்ததை நடுவர் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.



## பாகிஸ்தானில் இலங்கை வீரர்களின் பாதுகாப்பை கிண்டலடித்த கம்பீர்



இலங்கை வீரர்களுக்கு பாகிஸ்தானில் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு காணொளியை தனது ருவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள்ள இந்திய கிரிக்கெட் வீரர் கம்பீர், அதனை கேலி செய்துள்ளார்.

பன்னாட்டு கிரிக்கெட் போட்டி [illegible] களுக்குப் [illegible] இடம்பெறுகின்றது. அங்கு சென்றுள்ள இலங்கை அணிக்கு எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடந்து விடக்கூடாது என்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பலத்த பாதுகாப்பு அளித்து வருகிறது.

போட்டியில் பங்கேற்க சென்ற இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஜனாதிபதிக்கு கொடுக்கும் அளவுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாதுகாப்பு தொடர்பாக இந்திய வீரர் கம்பீர் கிண்டலடித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ருவிற்றர் பக்கத்தில் தெரிவிக்கையில்;

**இது காஷ்மீர் இல்லை. இது கராச்சி என்பதை நினைவு கூர்வோம் என்று பதிவிட்டுள்ளார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**100% புலமைப்பரிசில்**
முற்றிலும் இலவசமான தகவல்தொழிநுட்ப பயிற்சிநெறி

UKI

Apply Now For Batch 6

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?
அல்லது
ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக்காலம் : 6 மாதங்கள் ( நவம்பர் 2019 - மே 2020)
விண்ணப்ப இறுதித்திகதி : 11 அக்டோபர் 2019

For Further Info & Application Package
www.uki.life info@uki.life 0775694587

**வீடு வாடகைக்கு**
திருநெல்வேலி சந்தியிலிருந்து 400m தூரத்துக்கு உட்பட்ட 4 அறைகள் ஒரு ஹோல், குளியலறை, சமையலறை வாகனங்கள் விடக்கூடிய வசதிகளைக் கொண்டமைந்த வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். அலுவலகமாகவும் பயன்படுத்த முடியும்.
**077 165 0817**

**வெளிநாடு, உள்நாடு மணமகன், மணமகள் தேவையா?**
**Jaffnaroots.com**
என்ற இணைய தளத்தில் இலவசமாக பதிவு செய்யுங்கள்
**0014 1631 95236 (கனடா)**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

# ஓராண்டு கண்ணீர் துளிகள்!!



## திருவாளர்
## ஏகாம்பரம் பத்மராசா

மண்மகள் மடியில்
27.11.1968



விண்ணிறை அடியில்
15.10.2018

**ஓராண்டதாச்சோ!**
சித்தமே சேரும் தீரர்
சீர்பத்ம ராசா பேரில்
நித்தமே காம்ப ர்தன்
நிறைகுணத் தறத்தின் சீலர்
ஒத்ததிங் களுமோ கன்னி
உடன்வளர் திதி சப் தமியில்
இத்தரை நீத்துச் சென்று
இங்குமோ ராண்ட தாச்சோ!

கட்டிய கணவன் விழி மூடிக்கிடக்கையில் எட்டியும் பாராது
கண்மூடி இருந்தவள் அந்திம வேளையில் அரை நொடி கூடவே
அந்தப் பிஞ்சுகள் காண்பதை அடுக்காத நெஞ்சினள்
தன் முல்லைகள் பூ முகம் தேடியே வேகிடும் கொண்டவன்
வேதனை துடைத்திடாப் பத்தினி பத்தாண்டுப் பத்தினி
உன் இரண்டு மழலைகளின் வருகையை
எதிர்பார்த்து வீதியில் நின்றாயோ ராசா!
உன் ஆத்மா சாந்தியடைய வில்லூன்றியான் அருள் வேண்டுகின்றோம்.

(e.32738) (13.17)

246, லிங்கம் களஞ்சியம் அன்
லிங்கம் கொமினிக்கேசன்
வில்லூன்றிப் பிள்ளையார்,
கோயிலடி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தந்தை, சகோதரன்,
சகோதரி - மைத்துனர்,
மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்.
021 222 3312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.